# பாரதியார் சரித்திரம்

செல்லம்மா பாரதி

O-,1M5UW
N41-2
108108

# பாரதியார் சரித்திரம்

*

16 NOV 1945
MADRAS

செல்லம்மா பாரதி

*

சக்தி காரியாலயம்
சென்னை : மதுரை : கோயமுத்தூர்

முதற் பதிப்பு ... 1941
இரண்டாம் பதிப்பு ஜூலை 1945
உரிமை பதிவு செய்யப்பெற்றது

விலை ரூபாய் இரண்டு

ARCHIVES
108108
MADRAS

சக்தி பிரஸ் லிமிடெட்
(சாந்தி பிரஸ்)
ராயப்பேட்டை : சென்னை.

# பதிப்புரை

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ் நாட்டினரின் பொதுச் சொத்து; பொதுப் பெருமை. இவரைப் பற்றிய உண்மையான தகவல்களைத் தமிழர் தெரிந்து வைத்திருக்க ஆசைப்படுவது இயல்பு. பாரதியாரைப் புகழ வேண்டுமென்கிற நோக்கத்தில் பல கற்பனைகள் உலாவி வந்திருக்கின்றன. சரித்திரத்தில் கற்பனை ஊடாடவிடப்படாது. பாரதியாரின் மனைவி செல்லம்மா பாரதி அவர்கள் கூறுகிற மாதிரியில், அவர்களின் மகள் **தங்கம்மா பாரதி** அவர்கள் இந்தச் சரித்திரத்தை உள்ளது உள்ளபடி எழுதியிருக்கிறார்கள். முதற் பதிப்பு 1941-ல் வெளி வந்தது; இந்த இரண்டாவது பதிப்பில் பல புதிய விஷயங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன.

**சக்தி காரியாலயம்**

மகாகவி

# பாரதியார்

வ. ரா. எழுதியது

மகாகவி பாரதியார் தமிழ் இலக்கிய உலகத்திலே ஒரு சிறந்த ஸ்தானம் பெற்று விளங்குகிறார். இன்று அவருடைய புகழையோ, பெருமையையோ மறுப்பவர்கள் யாருமே இல்லை என்று கூறலாம். அவருடைய கவிதைகளை இன்று ஆயிரக்கணக்கானவர்கள் ஆவலாக வாசிக்கிறார்கள். ஆனால் அவருடைய வாழ்க்கையைப் பற்றித் தெரிந்தவர்கள் வெகு சிலரே. அவருடைய கவிதைகளைப் போலவே அவருடைய வாழ்க்கையும் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்.

விலை ரூபாய் மூன்று

# முகவுரை

பாரதியார் சரித்திரத்துக்கு முகவுரை தேவையில்லை. அவர், தமிழ் நாட்டு மகாகவிகளில் ஒருவரென்பது நாடறிந்த சேதி. ஆனால், அவர் உயிரோடிருக்கும்போது, ஜனங்கள் அவரைப் பயன்படுத்திக் கொள்ளாதது போலவே, அவர் மறைந்த பிறகும் அவரது உண்மையான வரலாறுகளை மக்கள் அறிந்துகொள்ள முடியாமலேயே இருக்கிறார்கள்: அவரைப் பற்றித் தவறான விஷயங்களும் கற்பனைக் குறிப்புகளும் அடிக்கடி பத்திரிகைகள், புத்தகங்களிலும் வெளிவருகின்றன. பொதுஜனங்கள் அவைகளை நம்பிவிடுகிறார்கள். ஒருவர் மேலும் நான் குறை கூறவில்லை. சரியான சரித்திரம் இதுவரை வெளி வராதபடியாலேயே இந்தத் தவறுகள் ஏற்பட்டன. இந்தப் புத்தகத்தில் உண்மையான சம்பவங்களே வெளியாகியிருக்கின்றன: பாரதியாரின் அத்தையிடம் நான் நேரில் கேட்டறிந்தவை. என் தந்தையாரின் சரித்திரத்தை என் தாயாரே கூறுவதுபோல எழுதியிருக்கிறேன்; இதற்கு ஒரு காரணமுண்டு. பாரதியாரைப்பற்றிய தவறான குறிப்புக்களை என் தாயார் படிக்கும்போதெல்லாம், மனம் புண்ணாகி, "ஐயோ, உண்மையான செய்திகளைத் தமிழரின் காதுக்கு எட்டச் செய்வது எப்படி?" என்று ஏங்குவார்.

அன்னையின் பெருந்துணையால் பாரதியார் சரித்திரம் இரண்டாம் பதிப்பாக வெளியாகிறது.

**கைலாசபுரம்,**
**திருநெல்வேலி,**
**11—12—44**

**தங்கம்மாள் பாரதி**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பாரதி தந்தையின் வரலாறு | ... | 1 |
| பிறப்பு, வளர்ப்பு, படிப்பு | ... | 3 |
| விவாகம் | ... | 8 |
| அத்தை குப்பம்மாள் | ... | 11 |
| தந்தை இறந்தார் | ... | 14 |
| காசி வாசம் | ... | 17 |
| நாகரிகமும் நாஸ்திகமும் | ... | 21 |
| கடிதமும் பதிலும் | ... | 24 |
| எட்டயபுரத்தில் | ... | 27 |
| குரு உபதேசம் | ... | 30 |
| நவ இந்தியா உதயம் | ... | 33 |
| சூரத் காங்கிரஸ் | ... | 36 |
| புதுவை புகல் | ... | 42 |
| அய்யங்காரின் தவிப்பு | ... | 46 |
| எங்கிருந்தோ வந்தான் ‘ குவளை ’ | ... | 49 |
| பாரதியும் சிஷ்யர்களும் | ... | 52 |
| ஆஷ் கொலை | ... | 56 |
| புதுவையில் யதேச்சாதிகாரம் | ... | 59 |

தேர்தல் அமளி ... 60
பயங்கரச் சம்பவமும் தீரச்செயலும் ... 63
தியாக புத்தி ... 67
புதுவையில் பிந்திய நிகழ்ச்சிகள் ... 69
கடவுள் குடிகொள்ளும் உள்ளம் ... 73
புதுமைப் பெண் ... 76
அந்தத் தவலை! ... 78
"பகைவனுக் கருள்வாய்" ... 81
அய்யரும் பாரதியாரும் ... 86
சில ஞாபகங்கள் ... 88
புதுவைத் தியாகம் ... 94
கடைய வாசம் ... 97
புது நண்பர்கள் ... 100
ராஜாத் தோட்டம் ... 104
விதி அவ்வளவுதான் ... 107
கல்யாணமும் காட்சியும் ... 109
சென்னை வாசம் ... 113
ஒரு விபத்து ... 115
ஓம் சாந்தி ... 116

# பாரதியார் சரித்திரம்

## பாரதி தந்தையின் வரலாறு

திருநெல்வேலி ஜில்லா, சிவலப்பேரி என்ற கிராமத்தில் "கடுவாய்" சுப்பையர் என்ற பிராம்மண உத்தமர் சுக ஜீவனம் செய்து வந்தார். ஏராளமான விளை நிலங்கள் அவருக்கு உண்டு. வெகு நாட்கள் குழந்தைகள் இல்லாமல், அநேக தான தருமங்கள், ஸ்தல யாத்திரைகள் முதலியவற்றுக்காகச் சொத்தில் பாதிவரை செலவு செய்த பின், குப்பம்மாள் என்ற பெண்ணும், சின்னச்சாமி என்ற சுந்தரராஜனும் பிறந்தார்கள். அருந்தவம் செய்து பிறந்த குழந்தைகள் இருவரையும், இரு கண்கள் என மதித்து மிக்க அருமையாக வளர்த்து வந்தார்.

சுப்பையர் மனைவி பாகீரதி அம்மாள் பொறுமையில் பூமாதேவியை நிகர்த்தவர். தமது கணவர், தம் மேல் கவனமின்றி, மற்றொரு விலைமாதுடன் நேசம் வைத்திருப்பது தெரிந்துங்கூட அவரை எதிர்த்து ஒரு வார்த்தை சொல்லவோ, அவமதிக்கவோ மாட்டார். விலை மாதுங் கூடப் பாகீரதி அம்மையைச் சொந்தச் சகோதரியென மதித்து, அன்புடன் இருந்து வந்தாள் என்றால், அம்மையின் நற்குணத்தை வர்ணிப்பது அனாவசியம். குழந்தைகள் என்ன தப்புச் செய்தாலும் மிகப் பொறுமையோடு இருப்பார்.

சுப்பையர், தம் பெண் குப்பம்மாளை, வாகைக் குளத்தில், ஒரு நல்ல கண்யமான குடும்பத்தில் விவாகம் செய்து கொடுத்தார். தமது மகன், சிறுவயதிலேயே, தர்க்க

சாஸ்திரத்தில் வல்லவனாகவும், பெரிய பண்டிதனாகவும் இருப்பது கண்டு மகிழ்ந்தார். அவன் பெரிய மனிதனாகி உத்தியோகம் செய்வதைப் பாராமலேயே காலஞ் சென்று விட்டார்.

சின்னச்சாமியோ, தனது ஊராகிய சீவலப்பேரியிலிருந்து, கல்வி கற்பதற்காகவும், அக்காலத்தில் மிகக்கியாதி அடைந்திருந்த எட்டயபுரம் ஜமீனில் ஒரு உத்தியோகம் வகிக்கவேண்டும் என்னும் ஆசையோடும், தாயாருடன் எட்டயபுரம் வந்து வசிக்கலானார். அங்கு, அப்போது, சமஸ்தானாதிபதி வித்துவான்களை ஆதரித்து. அவரவரது புலமைக்குத் தகுந்த சன்மானமளித்துத் தமிழ்க் கலையை வளர்த்து வந்தார். மதுரையைப்போல எட்டயபுரத்தையும் ஆக்க அவர் ஆவல்கொண்டிருந்தார். எட்டயபுரத்து ராஜ சபையில் சர்ச்சைகளும், தமிழாராய்ச்சிகளும் அதிகமாக நடைபெற்றன. மகாராஜா, ஆதிகாலத்துச் சோழ, பாண்டியன் முதலிய அரசர்களை ஒத்த கல்வி அறிவுள்ளவர். அதனால், இயற்கை அறிஞரான சின்னச்சாமி விரைவில் தமிழிலும், ஆங்கிலத்திலும், தர்க்கத்திலும் தன்னிகரற்று, கணிதத்தில் அபாரமான புலமையைப் பெற்று, அங்கு வசித்த புலவர்களின் மத்தியில் ஓர் ஆதித்தனெனத் திகழ்ந்தார்.

அவரது கூரிய புத்தியையும் தமிழ்ப் புலமையையும் கண்ட மகாராஜா, சின்னச்சாமி அய்யருக்குத் தமது அரச சபையில் முதல் ஸ்தானம் அளித்துக் கௌரவித்தார். சின்னச்சாமி அய்யர் தமது தாய் மாமன்மகளான லக்ஷ்மியை மணம் புரிந்து இல்லறம் நடத்தலானார். சின்னச்சாமி அய்யருக்கு இவ்வளவு நற்குணங்கள் அமைந்தும், முன்கோபம் மட்டும் அசாத்தியம். உறவினரோ, மனைவியோ, எதிர் நின்று பேசவும் நடுநடுங்குவார்கள். சூரபத்மன் அரசு புரிந்ததுபோல, ஊரார்

யாவரும் அவரை மதித்துத் தலை வணங்கும்படி தமது செல்வாக்கினால் நடந்து வந்தார்.

## பிறப்பு, வளர்ப்பு, படிப்பு

பாரதியார் 1882-ம் வருஷம், கார்த்திகை மாதம், மூல நட்சத்திரத்தன்று, சின்னச்சாமி அய்யரின் திருப் புதல்வராகப் பிறந்தார். அது கண்டு தாய் தந்தையரும், ஊராரும் உளம் களித்தார்கள். வேதியர் விதிப்படி விரைதானம் முதலியன செய்து வைத்தார்கள். குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, ஐந்து வயதை யடையு முன்பு தாயார் லக்ஷ்மி விண்ணுலகெய்தினார். இரண்டு வருஷம் வரை சின்னச் சாமி அய்யர் மறுமணம் செய்து கொள்ளவில்லை. பாரதி யாருக்குப் பாகீரதி என்று ஒரு சகோதரியும் இருந்தாள். இரண்டு குழந்தைகளை வளர்ப்பதை உத்தேசித்து, தமது பந்துக்களிலேயே ஒரு பெண்ணைச் சின்னச்சாமி அய்யர் மறுமணம் செய்து கொண்டார். பெண்ணின் பெயர் வள்ளியம்மாள். அவரும் பாரதியாரிடம் மிகுந்த வாஞ்சை யோடிருந்தார். தமது மறுமணத்தின்போதே புத்திர னுக்கு உபநயனமும் செய்வித்தார். பிறவியில் பிரம்மா வான பாரதிக்கு வெளிப்படையான பிரம்மோபதேசம் நடந்தது. தந்தையிடம் எதிரே நின்று வார்த்தையாடவும் பயப்படும் சுபாவமுள்ள பாரதியார், தமது சிற்றன்னை யிடமே தமக்கு ஆகவேண்டிய காரியங்களைத் தாராள மாகக் கேட்டுப் பெற்று வந்தார்.

பாட்டியாராகிய பாகீரதி அம்மாளும் அவரது சகோதர சகோதரிகளும், பாரதியாரை மிகவும் அன் போடு வளர்த்தார்கள். மாமன் வீட்டிலும் அருமையாகப் பேணிவந்தார்கள். மாமன்மார் இருவர். பெயர் - செல்ல

மய்யர், சாம்பசிவய்யர். தாயாருடன் பிறந்த சிற்றன்னைகள் நால்வர் - சின்னம்மாள், ஆனந்தம், விசாலாக்ஷி, ராமு. சின்னம்மாள் வயதில் மூத்தவரானபடியால், தமது தமக்கை லக்ஷ்மி இருந்தால் எப்படி மகனை வளர்ப்பாளோ, அது போலவே வளர்த்தார். சின்ன மாமா சாம்பசிவய்யரும், கடைசிச் சித்தி ராமுவும், பாரதியாருக்குச் சம வயதானபடியால் விளையாட்டுத் தோழராயிருப்பார்கள். ராமுச் சித்திக்குக் கோபம் வந்தால், சாப்பிடவே வர மாட்டாராம். பாரதியார், "ராமு, சாப்பிட்டுவிட்டுக் கோபித்துக்கொள்" என்றால், "போடா! வயிற்றில் சோறு விழுந்தால் கோபம் போய்விடும்" என்பாராம்.

ஐந்து வயதிலேயே தாயை இழந்த பாரதியாரின் தேகாரோக்கியத்தில் கூடத் தந்தை சின்னச்சாமி அய்யர் கவலை காட்டாமல், சதா காலமும் கல்வி கற்பிப்பதிலும், கணிதம் பயிற்றுவிப்பதிலுமே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார். அதைப் பாரதியார்,

ஆண்டோர் பத்தினி லாடியு மோடியும்
ஆறு குட்டையி னீச்சினும் பேச்சினும்
ஈண்டு பன்மரத் தேறி யிறங்கியும்
என்னொ டொத்த சிறிய ரிருப்பரால்,
வேண்டு தந்தை விதிப்பினுக் கஞ்சியான்
விதி யாட்டங்க ளேதிலும் கூடிடேன்
தூண்டு நூற்கணத் தோடு தனியனாய்த்
தோழமை பிறிதின்றி வருந்தினேன்

என்று கூறியிருக்கிறார்.

பாரதியாருக்குப் பள்ளிப் படிப்பிலே மதி பற்றுக் கொள்ளவில்லை. எழெட்டு வயதிலேயே மோகனமான பகற்கனவுகள் காண்பதிலும், சிங்கார ரசமுள்ள கவிகள் இயற்றுவதிலும் பிரியம் கொண்டார். அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து அப்படியே மனப்பாடம்.

அவரது இயற்கைக் காதல், கடவுள் காதல், ஜீவ தயை முதலியவை. பிற்காலத்தில், அவர் தேசத்தின் நலத்தில் காதல் கொள்ளவும், பரமாத்மாவாகிய கண்ணனிடம் நீங்காத பக்தி கொள்ளவும், தான் வேறு கடவுள் வேறு என்ற பிரிவுணர்ச்சியின்றி எல்லோரும் கடவுள் என்ற சமபாவம் அடையவும் காரணமாயின. குழந்தைப் பருவத்திலேயே, பெரிய கிழவர்களுடன் உட்கார்ந்து, உயர்ந்த வேதாந்த தத்துவங்களைப் பற்றிய ஆராய்ச்சி செய்யத் தொடங்கி விடுவார். கிழவர்களுக்கு மத்தியில் தம் மகன் உட்கார்ந்து பிரசங்கம் புரிந்து கொண்டிருப் பதில் சின்னச்சாமி அய்யருக்கு உள்ளூறத் திருப்திதான். ஆனால், மைந்தர்களைப் பற்றிய மகிழ்ச்சியை அவர்கள் முன்னிலையில் கூறுவது சரியாகாது என்று எண்ணி, பையனைக் கண்டதும் புலி போலச் சீறுவார். தந்தையைக் கண்ட பாரதி, புலியைக் கண்ட மான் போல, மிகப் பயத் துடன் நடந்து கொள்ளுவார். அனேகமாகத் தந்தையார் கண்ணில் அகப்படாமலேயே சுற்றுவார்.

பாரதியார், தமது தாய்ப் பாட்டனாரகிய ராமசாமி அய்யர் வீட்டிலேயே தங்கியிருந்து, தகப்பனாருக்குத் தெரியாமல், அவர் அரசாங்க சபைக்குச் செல்லாத சமயங்களில், தமிழில் மோகமுற்ற மகாராஜாவிடம் சென்று, தாம் இயற்றிய கதைகளைச் சொல்லிக் காண்பிப் பார். அவற்றைக் கேட்டு மகாராஜா மிகவும் சந்தோஷ மடைந்து பாராட்டுவார்.

பாரதியாருக்குக் குழந்தைப் பிராயத்தில் மறதி அதிகம். பள்ளிக்கு எனத் தந்தையார் வாங்கிக்கொடுத்த கற்பலகை, குச்சி, புஸ்தகங்கள் முதலியவற்றை யார் வீட்டுத் திண்ணையிலாவது வைத்துவிட்டுக் குளத்தங் கரைக்குச் சென்று, இயற்கைக் காட்சிகளில் ஈடுபட்டு, ஆனந்தமாக ரசித்துக்கொண்டிருந்து வீடு திரும்புவார்.

தனது உள்ளத்தைக் கவிதாதேவிக்கு அர்ப்பணம் செய்து விட்டமையால், அவருக்குப் பசி, தாகம்கூடத் தெரிவ தில்லை. சுயசரிதையில், 12 வயதில் காதலித்ததாகக் கூறி யிருக்கும் நங்கை கலைவாணிதான். சாதாரணமாகக் கட வுளைத் தாய், தந்தை என்ற முறையில்தான் வழிபடுவார்கள். ஆனால், பாரதியாரோ நாயக-நாயகி பாவத்தில்தான் அதிக மாகப் பாடியிருக்கிறார். பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து ஐக்கியமாவதுதான் பரமானந்தம்; ஒதுங்கி நின்று வணங்குவது அவருக்குப் பிடிக்காது. கடவுளைக் கட்டிப் பிடித்து இதயத்தில் சிறைப்படுத்திக் கொண்டுவிட்டார். அதனால்தான், பால்யத்திலேயே "பாரதிப் பட்டம்" எதிர் பாராமலேயே அவருக்குக் கிடைத்தது. காலையில் இள வெயிலின் காட்சிகளிலும், நடுப்பகலில் ஒழிந்த ஒதுப்புற மான இடங்களில் கவிதைக் காதலியுடன் இன்புறுவதிலும் ஈடுபட்டிருந்து, மாலையில் தமது தாத்தாவின் வீட்டிற்குத் திரும்புவார்.

அவரது சிற்றன்னை "புஸ்தகம், ஸ்லேட்" எங்கே என்று கேட்டபின்தான் அவருக்குத் தாம் பள்ளிக்குப் போகாமல் தெருவில் சுற்றிய ஞாபகம் வரும். பின்பு, சின்னச்சாமி அய்யர் கோபித்துக் கொள்வார் என்று பயந்து, அந்த அம்மையார் தாமே கடைக்குச் சென்று சிலேட், புஸ்தகங்களை வாங்கிக்கொடுத்து, சாப்பாடு போட்டு, வீட்டுக்கு அனுப்புவார். மகன் யோக்கியமாகப் பள்ளி சென்று வருகிறான் என்று தந்தை உள்ளூற மகிழ்ச்சியோ டிருப்பார்.

ஒரு நாள், சின்னச்சாமி அய்யர் அரசாங்க சபையில் உட்கார்ந்திருக்கும் சமயத்தில், பண்டிதர்கள், வித்துவான் கள் முதலியோர் கூடியிருந்தனர். மகாராஜா, "அய்யர் வாள்! நம்ம சுப்பையா (சுப்பையா என்பது பாரதியா ருக்கு வீட்டுச் செல்லப் பெயர்) பிறப்பதற்குத் தாங்கள்

பூர்வ ஜன்மத்தில் என்ன புண்ணியம் செய்தீர்களோ! அல்லது தாயார் செய்த தவப்பயன்தானோ!" என்று வியந்தார். பிறகு, "திருஞான சம்பந்தரால் புகழ் பெற்ற சீர்காழியைப் போல், எட்டயபுரமும் சுப்பையாவினால் சரித்திரப் பிரசித்தி பெற்ற புண்ணிய ஸ்தலமாக மாறத் தான் போகிறதோ!" என்று மேன்மேலும் புகழ ஆரம் பித்தார். சின்னச்சாமி அய்யருக்கு மகாராஜா சொல்வது இன்னதென்றே விளங்கவில்லை. மகன் ராஜசபைக்கு வருவதும் கவிதைகளைப் புனைவதும அவருக்குத் தெரியா தாகையால், "மகாராஜா புகழ்வது ஒருவேளை கோபத்தி னால் தானோ என்னமோ. அறியாத சிறுவன். மகாராஜா வருத்தமுறும்படி ஏதாகிலும் காரியஞ் செய்துவிட்டான் போலும்! அதைத்தான் இப்படி மாற்றி மறைத்துச் சொல்கிறாரோ?" என்று சந்தேகமுற்று, "மகாராஜா! சின்னப்பயல் ஏதாவது உளறினால் தாங்கள் அதைப் பொருட்படுத்தலாமா? அவனை நான் வீடு சென்று நன்றாகக் கண்டிக்கிறேன்," என்று சற்று வருத்தத் தோடும் கோபத்தோடும் சொல்லி விட்டுத் தலை குனிந் திருந்தார்.

அய்யரது சுபாவத்தை நன்கு அறிந்த ஜமீந்தார், "சின்னச்சாமி! உங்களிடம் நான் வேடிக்கை பேசு வேனா? நம்ப சுப்பையா அருமையான கவிதைகள் எழுதி என்னிடம் கொண்டுவந்து வாசித்துக் காண்பிப்பான். பண்டிதர்கள் கூடக் குறை சொல்லாதபடி தனது பிள்ளைக் கவிதைகளில் நவரசங்களும் சொரிந்து, எதுகை, மோனை அமைப்புக்களுடன், உயர்ந்த கருத்துக்களை எளிய பதங் களில் அமைத்திருக்கிறான். அந்தப் பாடல்களுக்குக் கிள்ளை மொழியில் அவன் அர்த்தம் சொல்லுவதைக் கேட்கும்போழுது, அவன் சுப்பையா என்பதே எனக்கு மறந்துபோய், பட்டினத்தாரோ, தாயுமானவரோ, குமர

குருபரரோ இந்த உருவெய்தி எமக்கு அறிவுறுத்த வந்தார் என்று எண்ணி மெய்ம்மறந்து விடுகிறேன். உங்களுக்கு எதிரில் அவனைப் பாடச் சொன்னால், பயத்தினாலும், வெட்கத்தினாலும் பாடமாட்டான். அவன் இங்கு வரும் ஒரு சமயம் தாங்கள் ஒளிந்திருந்து பாருங்கள். உண்மை விளங்கும்" என்றார். அது கேட்ட அய்யர் மனம் பூரித்தது. பிள்ளைக் கவியின் பெருமை பண்டிதர்களுக்கும் தெரிய ஆரம்பித்தது.

அக் காலத்தில், சோமசுந்தர பாரதியாரும் பாரதியும் தோழர்கள். சோமசுந்தர பாரதியாரை, "அடே, சோமு!" என்றே அழைப்பார்.

சோமசுந்தர பாரதியார் தமது பள்ளி அனுபவங்களைப்பற்றி எழுதியிருப்பதை நான் முதன் முதலில் வெளியிட்ட "சுதேச கீதங்கள்" என்ற புஸ்தகத்தில் காணலாம்.

பாரதியாரின் வெட்டென்ற பேச்சும், துடிக்கும் உள்ளமும், சுயமரியாதையும், அவர் காந்திமதிநாத பிள்ளைக்குச் சொன்ன பாடல்களிலேயே தெரியும்.

## விவாகம்

பாரதியாரின் பதினாலாம் வயதில் எங்களுக்கு மணவினை முடிந்தது. அப்பொழுது எனக்கு வயது ஏழு. பாரதியார் தங்கை லக்ஷ்மிக்கோ மூன்றே வயதுதான். அவரை அத்தை குப்பம்மாளின் இரண்டாவது மகன் கேதாரத்திற்கு விவாகம் செய்தார்கள். என் தமக்கை பார்வதியைக் கேதாரத்தின் தமையன் விசுவநாதனுக்கு மணம் புரிந்தார்கள். கல்யாணம் மிகச் சிறப்பாக நடந்தது. நான்கு நாட்களும் ஊர்வலம்.

கிருஷ்ணசிவன் அவர்களுக்கு நண்பர்களான ராமநாதபுரம் ராஜாவிடமிருந்தும், சேத்தூர், தலைவன் கோட்டை

ஜமீன்தார்களிடமிருந்தும், பட்டும் பட்டாவளியுமாக, சால்வைகள், மோதிரங்கள், முத்துமாலைகள் முதலியன ஏராளமாய் வெகுமதிகளாக வந்தன. தங்கநாதஸ்வர வித்துவான் ரத்தினசாமியை ராமநாதபுரம் ராஜா அவர்கள் அனுப்பியிருந்தார். அந்தச் சமயம் கியாதி யுடைந்திருந்த திருநெல்வேலி அம்மணி பரதநாட்டியம். பாரதியாருக்குப் பால்ய விவாகத்தில் அவ்வளவாகப் பிரியமில்லாவிடினும், ரசிக்கத் தகுந்த கேளிக்கைகள் மிகுதியாயிருந்தமையால், விவாகத்தில் உற்சாகமாகவே காணப்பட்டார்.

அக் காலத்தில், விவாகம் முடிந்தவுடன் கணவன் மனைவி பேசுவதில்லை. கணவனைக் கண்டால் ஓடி ஒளிய வேண்டும். பாரதியார் மட்டும் இதற்கு விலக்காக நடக்க வேண்டுமென்பார். எல்லோருக்கும் எதிரில்,

* தேடக்கி டையாத சொன்னமே!—உயிர்ச்
சித்திர மே! மட அன்னமே—அரோ-
சிக்குது பால், தயிர் அன்னமே—மாரன்

சிலைமேல் கணை
கொலை வேலினை
விரி மார்பினில்
நடுவே துளை

செய்வது கண்டிலை யின்னமே!—என்ன
செய்தேனோ நான்பழி முன்னமே!

கன்னத்தி னில்குயில் சத்தமே—கேட்கக்
கன்றுது பார்என் றன் சித்தமே—மயக்-
கஞ்செய்யு தேகாமப் பித்தமே—உடல்

---

* அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்திலுள்ளதைப் பாரதியார் வரிசைமுறை மாற்றிப் பாடியிருக்கிறார்.—அவரோசிக்குது : அருவருக்கிறது. கன்னம் : காது.

கனலேறிய
மெழுகாயின(து)
இனியாகிலும்
அடி பாதசி

கட்டியணைத்தொரு முத்தமே—தந்தால்
கைதொழுவேன் உனை நித்தமே!

என்று என்னைப்பார்த்துக் காதல்பாட்டுக்கள் பாடுவார். நான், நாணத்தினால் உடம்பு குன்றி, எல்லாரையும் போல் சாதாரணமான ஒரு கணவன் கிடைக்காமல், நமக்கென்று இப்படி ஓர் அபூர்வமான கணவர் வந்து வாய்க்க வேண்டுமா, என்று எண்ணித் துன்புறுவேன்.

கிராமத்தில் பழகிய, ஒன்றுந் தெரியாத, ஏழு வயதுச் சிறுமிக்குக் கவிஞர்களின் காதல் ரச அனுபவம் எப்படிப் புரியும்? விவாகத்தின் நாலாம் நாள், ஊர்வலம் முடிந்து, பந்தலில் ஊஞ்சல் நடக்கிறது. ஓர் ஆசு கவி இயற்றினார். அதை இனிய ராகத்தில் பாடி, பொருளும் உரைத்துக் குட்டிப் பிரசங்கம் ஒன்று செய்தார். கல்யாண விமரிசையைப் புகழ்ந்து, அதை நடத்தியவர்களின் சலியா உழைப்பையும், என் தகப்பனார் கல்யாணத்திற்குக் கஞ்சத்தனமின்றி மிகத் தாராளமாகச் செலவு செய்ததையும் வியந்து, வித்துவான்களின் சங்கீதத் திறமையை மெச்சி இயற்றிய பாடல் அது. அதைக் கேட்டு யாவரும் "பலே பேஷ்" என்று ஆரவாரித்து, "மாப்பிள்ளை வாய்த்தாலும் செல்லப்பா அய்யருக்கு வாய்த்ததுபோல் வாய்க்கவேண்டும். மணிப்பயல். சிங்கக்குட்டி" என்றெல்லாம் அவரவர்கள் போக்கின்படி புகழ்ந்தார்கள். என் தகப்பனார் மாப்பிள்ளையைக் கண்டு உள்ளம் பூரித்து, உடல் பூரித்து மகிழ்ச்சியடைந்தார். திருநெல்வேலி ஜில்லாவிலேயே சில காலம் வரையில் அந்தக் கல்யாண விமரிசை மக்கள்

காதில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. எங்கும் அது பற்றியே பேச்சு.

## அத்தை குப்பம்மாள்

இச் சரித்திரத்திற்குப் பாரதியாரின் அருமை அத்தையாரின் சரித்திரமும் அவசியமாகையால், அதைச் சிறிது கவனிப்போம். அத்தையின் கணவர் கிருஷ்ண சிவன் அவர்களுக்குச் சிறுவயதிலிருந்தே சிவபெருமானிடம் அளவற்ற பக்தியுண்டு. அதனால், சொத்து முதலியவைகளை அதிகமாகக் கவனிப்பது கிடையாது. நன்ருகக் கவனித்துப் பயிரிடாத காரணத்தால், பயிர்கள் நன்கு விளையவில்லை. ஜீவனத்திற்குச் சற்றுக் கஷ்டமுண்டாயிற்று. மனத்தில் வைராக்கியமும் அதிகமாயிற்று. ஒரு நாள், கனவில், காசி விசுவநாதர் தரிசனம் கொடுத்து "பக்தா! காசிக்குப் புறப்பட்டுவா" என்று உரைத்தாற் போலத் தோற்றம் உண்டாயிற்று. உடனே, அவரது ஊரான வாகக்குளத்தில் இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. பகவானது பக்தியில் ஈடுபட்டுவிட்டால், பின் மற்றவை ருசிக்குமா? காசிக்குப் போகத் தீர்மானித்து விட்டார். மனைவி குப்பம்மாளையும் இவ் விஷயமாக ஆலோசனை கேட்டார்:

"பெண்ணே! எனக்குப் பகவானுடைய நாம ஸ்மரணை செய்துகொண்டு ஊரூராக யாத்திரை போக வேண்டுமென்று வெகு நாட்களாக எண்ணமுண்டு, பகவானும் உத்தரவு கொடுத்து விட்டார். நான் செல்ல வேண்டும். நீ உன் பிறந்தகம் சென்று உன் தாயாருடன் வசித்து வருகிருயா?"

"நாதா? தாங்கள் இவ்வாறு கேட்கலாமா? தங்களைப் பிரிந்து நான் எப்படி இருக்க முடியும்?"

"என்னுடன் வந்தால் ஒரு சௌகரியமும் கிடையாது. ஊரூராகச் சுற்ற வேண்டும். கால் நடையாகவேதான் போக வேண்டும். உன்னால் கஷ்டப்பட முடியாது. அதற்காகத்தான் சொன்னேன்."

"நன்றாயிருக்கிறது! தாங்கள் இல்லாமல் இங்கு சௌகரியமாயிருப்பதைக் காட்டிலும், என்ன கஷ்டமானாலும் சரி, உங்களுடன்தான் வருவேன்."

கிருஷ்ண சிவனுக்குச் "சரி" என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. குப்பம்மாளும், பட்டுப் புடைவை முதலியவைகளை விடுத்து, இரண்டு வெள்ளைத் துணிகளை ஒன்றாகத் தைத்து, மஞ்சள் நீரில் நனைத்து உடுத்திக் கொண்டார்.

சிவனுக்கு ஒரு தமையனார் உண்டு. அவரிடம் வீடு வாசல் முதலியவற்றை ஒப்படைத்து விட்டு ஒவ்வொரு சிவஸ்தலமாகச் செல்லலானார்கள். விடியற்காலையில் ஸ்னானம் செய்து, உஞ்ச விருத்தி எடுத்துச் சாப்பாடு முடிப்பார்கள். தம்பதிகள் இருவரும் மிகவும் மன ஒற்றுமையோடு யாத்திரை செய்தார்கள். கணவர் 'எள்' என்பதற்கு முன் 'எண்ணெ'யாக நிற்பார் குப்பம்மாள்.

காளகஸ்தியில் விஜயநகரம் அரச குடும்பத்தைச் சேர்ந்த பிரபு ஒருவர் இவர்களைச் சந்தித்தார். சிவனது மாசில்லாத சிவபக்தியையும், கணவரது வார்த்தைக்கு எதிர் சொல்லாது அருந்ததிபோல விளங்கும் பத்தினியின் நிலையையும், தவ வேடத்தையும் கண்டு அவர் மகிழ்ந்து, "ஐயன்மீர்! தாங்கள் நாளை முதல், உஞ்ச விருத்திக்குப் போகவேண்டாம். தங்களுக்கு வேண்டிய சாமக்கிரியைகள் எல்லாம் நான் கொடுக்கிறேன். தங்களது அபிலாஷை ஏதாகிலும் உண்டானால் தெரிவியுங்கள். நான் செய்து முடிக்கிறேன்" என்றார்.

இதுவும் விசுவநாதன் அருள் என்றெண்ணி, "காசிக்குப்போய் விசுவநாத தரிசனம் செய்ய வேண்டும். ரயில் கட்டணத்திற்குக் கையில் பணம் கிடையாது. கால் நடையாகவேனும் யாத்திரை போக வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன். அது தான் எனது அபிலாஷை" எனவும், "நான் அந்த விருப்பத்தை நடத்தி வைக்கிறேன். தாங்கள் தீவிரமான பக்திவைராக்கியம் உடையவர்களாதலால், தங்களால் நடந்து செல்ல முடியும். ஆனல், அந்த அம்மை நிரம்பவும் சிரமப்படுவார். இன்னும் பதினைந்து நாளைக்குள் கங்கா ஸ்னனம் பண்ணிவைப்பது என் பொறுப்பு. தாங்கள் அதை மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று வணங்கினர்.

அவ்வாறே ஏற்பாடு செய்து, வழியிலுள்ள ஸ்டேஷன்களிலும் தமது ஆட்களைக் கொண்டு அவர்களுக்கு வேண்டும் சௌகரியங்களைச் செய்து கொடுத்து, கடைசியாகக் காசியில், சிவ மடத்தில், கொண்டுபோய் இறக்கிவிடச் செய்தார். கிருஷ்ண சிவன் தமது மனைவியோடு சிறிது காலம் சிவ மடத்திலேயே வசித்து, அங்குள்ளவர்களால் யோக்யர்—கண்யமானவர்—பக்தர் என்றெல்லாம் புகழப் பெற்றார்.

அந்தச் சிவ மடத்துச் சொந்தக்காரர் பிரமசாரி. தமது அந்திய காலம் நெருங்கியதும், மேற்படி மடத்தையும், பெரிய தோட்டத்தையும் கிருஷ்ணசிவன் பரம்பரையாக அனுபவித்துத் தருமங்களை நடத்தி வரவேண்டுமென்று எழுதிவைத்து விட்டுப் பரமபதம் அடைந்தார்.

ஜமீன்தாரும் அவரிடம் பரம பக்தி வைத்து ஏராளமான செல்வங்கள் அளித்தார். இதற்குள்ளாக, இரண்டு புதல்வர்களும் பிறந்தனர்.

தம் வீடு, வாசல், சொத்து முதலியவற்றை வேண்டாம் என்று உதறி வந்தும், தற்செயலாகப் பழையபடி

எல்லாச் செல்வங்களும் கிடைத்தவுடன், கொஞ்சங்கூடச் செல்வச் செருக்கின்றி, ஜனக மகாராஜனைப் போல, பற்றில்லாமல், உள்ளத் துறவுடன் வாழ்ந்து வந்தார். காசிக்கு வரும் தென்னாட்டினர் யாரானாலும், அவர்களை மிகுந்த பரிவோடு வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவர்களுக்கு வேண்டிய உதவி செய்து, "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" என்னும் முதுமொழிக்கு ஏற்ற உதாரணமாய் வாழ்ந்துவந்தார்.

## தந்தை இறந்தார்

பாரதியாருக்கு விவாகம் ஆன அடுத்த வருஷத்திலேயே அவர் தகப்பனார் நோயுற்று இறந்தார். பாரதியார் மனம் நிரம்பவும் வருந்தியது. "தந்தையின் வறுமை" மகனது மனத்தைப் பிடுங்கித் தின்றது. யந்திரப் போட்டியில் ஈடுபட்டுச் சின்னச்சாமி அய்யர் தமது சொத்தையெல்லாம் இழந்தார். தந்தையாரது பொருள் சேர்க்கும் ஆவலையும், அதற்கு அவர் பட்ட கஷ்டத்தையும், அபஜய மடைந்தவுடன் அவர் மனம் இடிந்து இறந்ததையும், பாரதியார் தம் "சுய சரிதை" யில் வெகு உருக்கமாகக் கூறியிருக்கிறார்:

ஈங்கிதற்கிடை யெந்தை பெருந்துயர்
எய்தி நின்றனன், தீய வறுமையான்;
ஓங்கி நின்ற பெருஞ் செல்வம் யாவையும்
ஊணர் செய்த சதியி லிழந்தனன்.
பாங்கினின்று புகழ்ச்சிகள் பேசிய
பண்டை நண்பர்கள் கைநெகிழ்த் தேகினர்
வாங்கி யுய்ந்த கிளைஞரும் தாதரும்
வாழ்வு தேய்ந்தபின் யாது மதிப்பரோ?

தீயமாய வுலகிடை யொன்றினில்
சிந்தை செய்து விடாயுறுங் காலதை
வாயடங்க மென்மேலும் பருகினும்
மாயத் தாகந் தவிர்வது கண்டிலம்.

'ஆசைக்கோ ரளவில்லை விடயத்துள்
ஆழ்ந்த பின்னங் கமைதி யுண்டா மென
மோசம் போகலீர்' என்றிடித் தோதிய
மோனி தாளினை முப்பொழு தேத்துவாம்;
தேசத்தார் புகழ் நுண்ணறிவோடு தான்
திண்மை விஞ்சிய நெஞ்சின னாயினும்
நாசக் காசினி லாசையை நாட்டினன்
நல்ல னெந்தை துயர்க்கடல் வீழ்ந்தனன்."

தந்தையாரின் எதிர்பாராத மரணத்தினால், பாரதியாருக்குப் பணத்தின் மீதே வெறுப்புண்டாயிற்று. மகா புத்திசாலியான தமது பிதா, கேவலம் பணத்தின் பொருட்டு உளம் குன்றி மடிந்தது துடிப்பை உண்டாக்கிற்று. அந்தணர்கள் தங்களது வர்ணாசிரம முறைப்படி தம் குல தருமமான வேதம் ஓதுதல், பிறருக்குக் கலையுணர்த்தல், உலகத்திற்கு ஞான மார்க்கத்தைப் போதித்தல் முதலியவற்றைச் செய்யாது, என்ன இழி தொழிலாயினும் செய்து, வயிறு வளர்ப்பது ஒன்றையே பெரிதென மதித்துக் காலங்கழிப்பதைக் கண்டு தவித்தார். அதை,

பார்ப்ப னக்குலங் கெட்டழி வெய்திய
பாழடைந்தக லியுக மாதலால்
வேர்ப்ப வேர்ப்பப்பொ ருள்செய்வ தொன்றையே
மேன்மை கொண்டதொ ழிலெனக் கொண்டனன்
ஆர்ப்பு மிஞ்சப்ப லபல வாணிகம்
ஆக்கி மிக்கபொ ருள்செய்து வாழ்ந்தனன்;
தீர்ப்ப டுஞ்சிறு புற்புத மாமது
நீங்க வேஉளங் குன்றித்த ளர்ந்தனன்.

என்ற மொழிகளாலும்; தந்தையார் இறந்ததும் யாதொரு உதவியுமின்றித் தாம் தவித்ததை,

தந்தை போயினன்—பாழ்மிடி சூழ்ந்தது
தரணி மீதினி லஞ்சலென் பாரிலர்;
சிந்தை யிற்றெளி வில்லை; உடலினில்
திறனு மில்லை; உரனுளத் தில்லையால்;
மந்தர் பாற்பொருள் போக்கிப் பயின்றதா
மட்டைக் கல்வியில் மண்ணும் பயனிலை;
எந்த மார்க்கமும் தோன்றில தென் செய்கேன்?"
ஏன் பிறந்தன னித்துயர் நாட்டிலே?

என்ற மொழிகளாலும் உணர்த்தியுள்ளார்.

திருநெல்வேலி ஜில்லாவில் படிக்கும்போது, மற்றொரு தோழர் அவருக்குண்டு,- சுப்ரமண்ய சர்மா என்பவர். இப்போது அவர் சென்னையில் இருக்கிறார். கல்லூரிகளில் ஆசிரியராக இருந்து, இப்பொழுது உபகாரச் சம்பளம் பெற்று வருகிறார். அந்த நாளில் கீர்த்தி பெற்ற நாடகக் கம்பெனியான "கல்யாணராமன் செட்" என்ற கம்பெனியில் நடந்த சில நாடகங்களுக்குப் பாரதியாரும் சர்மாவும் போவதுண்டு. முக்கியமாகப் பாரதியாரின் மனத்தைக் கவர்ந்தது பாரதத்தில் "துரோபதை துகிலுரிதல்" என்ற நாடகம். அன்று துரோபதை வேடந்தரித்தவர் கல்யாணராமன். அவரது சாமர்த்தியமும், சாதுர்யமும் பாரதியார் மனத்தைக் கவர்ந்தன. கௌரவர்களின் சபையில் வீற்றிருந்த மகான்களான பீஷ்மர், துரோணர் முதலியோரை, பதில் சொல்ல வகையறியாமல் குனிந்து விழிக்கும்படி கேள்விகேட்ட பாஞ்சாலியை மனத்திற்குள் மிகவும் வியந்தார்.

கேவலமான உடன்பாடு, வழக்கம் என்பதற்காக, ஞானத்தில் மிகுந்த யுதிஷ்டிரர் கூடத் தமது உயிர்த் தேவியைக் கீழ்மக்கட்கு அடிமையாக்கியதைக் கண்டு,

அவர் மனம் நோவுற்றது. அண்ணன் தாங்க முடியாத அளவுக்குத் தப்பிதம் செய்துங் கூடச் சகோதரர்கள், அவனுக்கு மரியாதையாக அடங்கி வணங்கியது அவரது மனத்தை நெகிழச் செய்தது. பின்னல், உலகத்தார் வியக்கும் வண்ணம் அவர் இயற்றிய பாஞ்சாலி சபதத்திற்குச் சிறுவயதில் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியே காரணமாயிருந்திருக்கிறது.

## காசி வாசம்

தந்தை இறந்தபின், பாரதியார் ஆதரவற்றிருந்தபோது, அத்தை குப்பம்மாள் அழைக்கக் காசிக்குச் சென்றார். அங்கே கலாசாலையில் சேர்ந்து ஹிந்தி, சமஸ்கிருதம் முதலியவைகளை வெகு சீக்கிரத்தில் கற்றுப் பிரவேசப் பரீட்சையில் முதலாவதாகத் தேறினர்.

காசியில், பாரதியாரின் அத்தை மிகவும் செல்வமாக வாழ்ந்து வந்தார். அப்பொழுது, தென்னட்டு யாத்ரீகர்கள் வந்தால் காசியில் தங்குவதற்கு மடங்கள் ஒன்றிரண்டு தான் இருந்தன. அத்தையின் கணவர் கிருஷ்ணசிவன் ஏராளமான பொருள் செலவிட்டு, ஹனுமந்த கட்டத்தில் இரண்டு மடங்கள் கட்டினர். பிரயாகை (அலஹாபாத்) யிலும் ஒரு மடம் கட்டி, கயாவிலும் ஒரு கிளை ஸ்தாபித்திருந்தார். அதனல், அவருக்கு யாத்ரீகர் மூலமாக ஏராளமான பணம் குவிந்தது. நல்ல அறிவாளி, சிவபக்தர் ஆகையால் கீர்த்தியும் மேலோங்கிற்று.

நமது தென்னட்டில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்யுங் காலங்களில், ஜகத் குரு சங்கராச்சாரியாருக்கு ஜனங்கள் ஊர் ஊராக மரியாதைகள் செய்வதுபோல, அவருக்கும் நடத்துவார்கள். சமஸ்தானதிபதிகள், ராமநாதபுரம் ராஜா, எட்டயபுரம் ராஜா, சிங்கம் பட்டி,

சேத்தூர், தலைவன்கோட்டை ராஜா முதலியவர்கள், அவரை அன்போடு ஆதரித்து வந்தார்கள்.

தாய் தந்தையற்ற பாரதியாரை அத்தையார் அழைத்துச் சென்று கல்லூரியில் சேர்த்தார். அந்த அம்மணி, தனது பிள்ளைகளைக் காட்டிலும் பாரதியார் மீது உயிரை வைத்திருந்தார் என்று சொல்வது மிகையாகாது. ஆடை அணி விஷயங்களில், பாரதியார் ஒன்று கேட்டால் அவர் ஒன்பது வாங்கிக் கொடுப்பார். பாரதியார், பள்ளி செல்லும் நேரம் தவிர, மற்ற நேரங்களில் கங்கா நதிக் கரையில் உட்கார்ந்து கொண்டு, கவிதைகள் புனைவதிலும், இயற்கை அழகுகளை அனுபவிப்பதிலும், நண்பர்களுடன் படகில் உல்லாச யாத்திரை போவதிலுமாகப் பொழுதைக் கழிப்பார். அந்தணருக்கேற்ற ஆசாரமின்றி, எல்லா ஜாதியாருடனும் கைகோத்துக்கொண்டு உலாவுவதும், நியம நிஷ்டையில்லாது எப்போதும் கோட்டும் சட்டையும், தலையில் முண்டாசும், காலில் பூட்ஸும் அணிந்திருப்பதும், நாளடைவில் கிருஷ்ண சிவன் அவர்களுக்கு வெறுப்பை யுண்டாக்கின. ஆயினும், ஏதாகிலும் சொன்னால் தம் மனைவி மனம் வருந்துவாளென்று அவர் ஒன்றும் சொல்லத் துணிவதில்லை.

ஒரு நாள், தற்செயலாகப் பாரதியாரைப் பார்த்ததும், அவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. விஷயம் என்னவென்றால், இத்தனை அனுசாரத்தோடு அந்தணருக்கு அத்தியாவசியமான குடுமியை-சிகையை-எடுத்து விட்டு, வங்காளிபோல் 'கிராப்' செய்து கொண்டு, வகிடு எடுத்து வாரி விட்டு, மீசையும் வைத்துக் கொண்டு பாரதியார் காட்சி யளித்ததுதான்! சிவனுக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை.

"அப்பா! சுப்பையா! எதற்கடா இந்தக் கோலம்? நீ என்ன கைம்பெண்ணு, தலையை மொட்டையிட்டுக்

கொள்ள ? உனது புத்திசாலித்தனமும், படிப்பும் இதற்கெல்லாமா உபயோகப்படவேண்டும் ? சாக்ஷாத் சிவ சந்நிதானத்திலே, சைவப் பெரியார்களுக்கு மத்தியில், நாலு தலைமுறையாகச் சிவ பக்தக் குடும்பத்திலே பிறந்தும், உனக்கு இப்படிப் புத்தி தோன்றுமா ? உன் தகப்பனார் இப்போது ஜீவியவந்தராயிருந்து பார்த்தால், மானம் பொறுக்க முடியாமல் பிராணனை விடுவாரே !—நல்லது. இன்றிலிருந்து நீ எங்களுடன் ஒரே பந்தியில் சாப்பிடக் கூடாது. என்றைக்கு நீ குடுமி வளர்த்து, மீசையை எடுத்துவிட்டு வருகிறாயோ, அன்றுதான் பந்தியில் உட்காரலாம்" என்றார்.

பாரதியார், பதிலொன்றும் சொல்லாமல், மூன்றும் மாடியிலிருந்த தமது அறைக்குச் சென்றார். ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் அவரது அத்தை கையில் தட்டில் சாப்பாடு எடுத்துக்கொண்டு, மாடிப்படி ஏற முடியாமல் ஏறி வருவதைக் கண்டு, "அத்தை ! ஏன் இவ்வளவு சிரமப் படுகிறாய் ?" என்று கேட்கவும், அத்தை "அப்பா ! அவர் ஏதோ கோபத்தில் பேசியதற்காக நீ வருந்தாதே ! பின்னால் அவருக்கே தெரியும்" என்று சமாதானப் படுத்தி, போஜனம் செய்வித்த பின்னரே மற்றவருக்குப் பரிமாறக் கீழே சென்றார்.

இப்படியாக இரண்டு மூன்று மாதங்கள் கழிந்தன. மடத்தில் பெரிய கோவிலுண்டு. மார்கழி மாதம் திருவாதிரை வந்தது. உற்சவத்திற்காக யாத்ரீகர்களும், பக்தர்களும் நூறு பேருக்குமேல் கூடியிருக்கிறார்கள். பொழுது விடிந்தது. அபிஷேகம் எல்லாம் முடிந்து தீபாராதனைக்கு ஆரம்பித்தாயிற்று. "காராம் பசு தரிசனம், காராம் பசு தரிசனம், காராம் பசு தரிசனம்" என்று மும்முறை திரையைத் தூக்கி மறைத்து, தரிசனம் ஆரம்பித்தது. "கனக சபை தரிசனம்", "கல்யாண தரிசனம்",

"சிற்சபேச தரிசனம்" எல்லாம் முறையே நடந்தன. பின், கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

காரணம் என்ன? வழக்கமாகத் "திருவெம்பாவை" சொல்லும் ஓதுவார் அன்று வரவில்லை. அழைத்து வர ஓர் ஆளை அனுப்பிவிட்டுத் தீபாராதனைகளைச் சற்றுத் தாமத மாகவே ஸ்ரீ சிவன் நடத்திக்கொண்டிருந்தார். அழைக்கச் சென்றவர் திரும்பிவந்து, "அவர் வேறு கோவிலுக்குச் சென்று விட்டாராம்" என்று கூறவும், கிருஷ்ண சிவனுக்குப் பெரிய ஏமாற்றமாக முடிந்தது. அங்கு அந்தக் காலத்தில் தமிழ் படித்தவர் அதிகம் கிடையாது.

"விசுவநாதா! நடராஜா இதுவும் உன் சோதனையோ? எத்தனையோ வருஷங்களாக உற்சவாதிகள் நடத்தி வருகிறேன். இதுபோன்ற விக்கினம் இதுவரை ஏற்பட்டதில்லையே! என்ன அபராதம் செய்தேன்? திருவெம்பாவை சொல்லாமல் எப்படித் தீபாராதனை முடிப்பது? என் மருமகளுக்குத் தெரியுமென்றாலும், ஸ்திரீகள் பாடுவது முறையல்லவே" என்று ஸ்ரீ சிவன் வருந்தினர்.

அவரது மனைவி, "என்ன இவ்வளவு யோசனை? நம்ம சுப்பையா இல்லையா, ஓதுவாரைக் காட்டிலும் திருத்தமாகப் பாடுவதற்கு?" என்று சொல்லி, பாரதியாரின் கிராப்புத் தலை மறையப் பட்டுத்தலைப்பாகை கட்டி, விபூதியைப் பட்டை பட்டையாக இட்டு, ருத்ராக்ஷ கண்டியைக் கழுத்தில் அணிவித்து அழைத்து வந்து பாடச் செய்தார். முறைப்படி தீபாராதனை முடிந்தது.

பின்பு பாரதியாரும், சுப்புப் பாட்டி என்ற கிழவி ஒருத்தியும் சேர்ந்து, "பார்க்கப் பார்க்கத் திகட்டுமோ. உன்றன் பாத தரிசனம்" என்ற நந்தன் சரித்திரக் கீர்த்தனையை உருக்கமாகப் பாடினார்கள். அங்குள்ள பக்தர்கள் மனம் பரவசமடைந்து, நெக்குருகி, புளகாங்கித மடைந்தார்கள்.

கடைசியில், கிருஷ்ண சிவன் பாரதியாரைத் தழுவிக் கொண்டு, "அப்பனே! இவ்வளவு சிறு வயதில் உனக்கு இத்தனை ஞானம் ஏற்பட்டு விட்டது. நாங்கள் வெறும் ஆஷாடபூதிகளே. எங்களுக்குத் தான் குடுமியும் வேதியர் வேஷமும் வேண்டும். உன்னைப்போல் உண்மையான மனமுடையவருக்குக் குடுமியும் வேண்டாம், பூணூலும் வேண்டாம்" என்று புகழ்ந்தார். அன்றிலிருந்து மறுபடியும் பந்தி போஜனம் ஆரம்பமாயிற்று.

## நாகரிகமும் நாஸ்திகமும்

பாரதியாருக்கு அப்போது (ஏன், கடைசிவரையிலும்) மிக அழகாகச் சிங்காரித்துக்கொண்டு உலாவுவதில் பிரியம் அதிகம். திருநெல்வேலி ஜில்லாவில் அவரது கிராப்புத் தலைக்காகவும், மீசைக்காகவும், நாங்கள் கேட்ட அவமரியாதை வார்த்தைகளும், கேலிப் பேச்சுக்களும் கணக்கில் அடங்கா.

எத்தனைதான் பணமில்லா விட்டாலும், ஆடை மட்டும் எப்பொழுதும் புதியதுதான் அணிவார். அந்தியக் காலத்தில், உயிர் பிரிவதற்குச் சில மணி நேரத்திற்குமுன் கூட, ஷர்ட்டு, கோட்டுக்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு, தலைப்பாகையைச் செம்மையாகக் கட்டிக்கொள்வதில் ஈடுபட்டிருந்தார். இப்போது, சில இடங்களில், பாரதி தினத்தன்று அவரது அன்பர்கள் கூடி விழாக்கொண்டாடுந் தருணங்களில், "ஐயோ! நமது கவிஞர் பெருமான், கிழிசல் கோட்டு அணிந்து, தோளில் அந்தக் கந்தலை மறைக்க இரண்டு ஊசிகள் (சேப்டி பின்கள்) குத்திக் கொண்டிருந்தார். என்னே வறுமையின் கொடுமை!" என்று பேசி வருகிறார்கள். ஊசி அணிந்திருந்ததின் உண்மைக் காரணம் அதுவன்று. ராணுவ

அதிகாரிகள், கப்பல் உத்தியோகஸ்தர்கள் முதலியோர் தமது சின்னங்களைத் தெரிவிக்கத் தோளில் பல நிறங்களில் பட்டைகளும், மார்பில் பலவித நூல்களினால் பூக்கள் மாதிரி வேலை செய்த சட்டையும் அணிவதைப் போலத் தாம் "பாரத ஏணியின் உண்மையான தலைகர்த்தன்" என்பதைக் குறிப்பதற்காகவே அவ்விதம் அணிவதாகச் சொல்லுவார். அப்போது கதரும், தேசியச் சின்னமான சர்க்காவும் ஏற்படாததால் இப்படிச் செய்து வந்தார்.

பாரதியார் 1902-ம் வருஷம் காசியிலிருந்து ஊருக்குத் திரும்பினார். எங்கள் குலாசாரப்படி ருது சாந்திக் கல்யாணம் நடந்தது. பாரதியார் அப்போது நவநாகரி கத்தை உயர்ந்த முறையில் அனுஷ்டித்துக் காண்பிக்க விரும்பினார். பெண்கள் கல்வியில் முன்னேற்ற மடைந்து, ஆங்கிலப் பெண்மணிகளைப் போல நாகரிகமடைந்து வாழ வேண்டுமென்றும் கருதினார். நமது சம்பிரதாயங்களும், மூடப் பழக்கவழக்கங்களும் அவருக்குப் பெருத்த வேதனையை உண்டு பண்ணின. ஒவ்வொருவரும் மற்றவர் களைக் குறை கூறிக்கொண்டே, தாங்கள் தாராளமாகத் தப்பிதம் செய்வதையும், தகுந்த தலைவர்களின்றி நாடு சீர்குலைந்திருப்பதையும், பழைய சாஸ்திரங்கள் செல்லரித்து, படிப்பாரின்றி அழிவதையும், மாந்தர்கள் 'அறியாமை' எனும் சேற்றில் அழுந்தித் தவிப்பதையுங் கண்டு "பாரத நாட்டிற்கு யாரால் விமோசனம் ஏற்படப் போகிறது" என்று மனம் புழுங்கினார்.

எட்டயபுரம் சமஸ்தானதிபதி அவர்கள் அழைத்த தால், அதற்கிணங்கி சமஸ்தானத்தில் உத்தியோகம் வகித் தார். அதாவது, தினம் ஒரு முறை அரசரது மாளிகை சென்று பல உயர்ந்த நூல்களைப் படித்து அர்த்தங்கள் கூறல், பல பத்திரிகைகள்—ஆங்கிலத்திலும், தமிழிலும்—வரவழைத்துப் படித்தல், வேதாந்த நூல்களை ஆராய்தல்,

பண்டிதர்களுடன் சர்ச்சைகள், தமிழாராய்ச்சி முதலி யன நடத்துதல் - இவைதான் நமது கவிக்கு உரிய பணி களாகும். அப்போது அவருக்கு ஷெல்லி, பைரன் முதலிய ஆங்கிலக் கவிகளின் நூல்களை வாசிப்பதில் பிரியம் அதிகம். அந்தக் காலத்தில் அவர் "ஷெல்லி தாசன்" என்னும் புனைபெயருடன் பத்திரிகைகளுக்குச் சில வியா சங்கள் கூட எழுதியதுண்டு.

காளைப் பருவமானதாலும், பண்படாத சுதந்தர வீறு படைத்த மனமாகையாலும், அவருக்கு நாஸ்திக வாதத் தில் பற்றுண்டாயிற்று. அதைப் பற்றிய நூல்களை வாசிக்க லானார். தர்க்கத்தில் பாரதியார் வல்லவர். அவரது தாத் தாக்களில் ஒருவரான அப்பாச்சாமி சிவன் என்பவர் வீர சைவர். விஷ்ணுவின் பெயரைக் கேட்ட அளவிலேயே வெறுப்பெய்தும் சுபாவமுடையவர். எங்கள் பந்துக்களில் ஒருவர் இறந்து போனார். இளம் மனைவியையும், அறியாத குழந்தைகள் ஐந்தாறு பேரையும் விட்டுச்சென்றார். எல் லோரும் மிகத் துயரமடைந்தார்கள். இறந்தவரை மயா னத்திற்குக் கொண்டு போகவும் இல்லை. செய்யும் வகை அறியாது விழித்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத் தில், தாத்தாவும் பேரனும் நாஸ்திக-ஆஸ்திக வாதங்கள் நடத்த ஆரம்பித்தார்கள். முதலில், தாத்தாதான் பேரனைச் சண்டைக்கிழுத்தார். "அடே! தெய்வமில்லையென்று நீ சொல்வது மெய்யானால், இப்பொழுது மரணமடைந்த நாராயணனுடைய ஆத்மா எங்கடா போயிற்று? அதை ருசுப்படுத்தடா!" என்றார். பேரனும் ஆரம்பித்தார். ஆயி னும், வயதில் மூத்தவர்களிடம் மரியாதைக் குறைவாகப் பேசக் கூடாதென்று, "ஆத்மா பிரம்மத்தில் தான் லய மடைந்தது. கோபிக்காதீர்கள். இப்போது, மேலே நடக் கும் காரியத்தைக் கவனிப்போம்" என்றார் பாரதியார். அத் துடன் பேச்சு முடிந்தது.

# கடிதமும் பதிலும்

பாரதியார் காசியில் படித்துக்கொண்டிருந்தபோது, ஒரு சமயம் ஸ்ரீ விசுவநாத சிவன் (எனது தமக்கை புருஷர்) கடையம் வந்தார். அவர் என்னிடம் மிகவும் அன்பாக இருப்பார். ஒருநாள் என்னைத் தனியாக அழைத்து, "அம்மா! நீ எப்படிப்பட்ட கஷ்டங்களையும் தாங்குவதற்கு உன் மனத்தைத் தயார் செய்துகொள்ளவேண்டும். உன் புருஷன்—பாரதி—மகா புத்திசாலியானாலும், அவன் செய்யும் காரியங்கள் மூலமாக நீ கஷ்டந்தான் அனுபவிக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. அவனுக்கிருக்கும் தாய் நாட்டு அபிமானமும், சுதந்திர ஆவலும் கட்டுக்கடங்காதவை. அவை வெளியில் தெரிந்தால், அவன் சர்க்காரின் கோபத்திற்கு ஆளாகக்கூடும் என்று விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள். அவன் பேசுவதைப் பார்த்தால், எல்லா வாலிபரையும் போலப் படித்து நல்ல உத்தியோகம் வகித்துத் தன் மட்டில் சௌக்கியமாகக் குடும்பத்தாருடன் இருக்கவேண்டும் என்னும் எண்ணம் அவனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. 'தேசத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு எந்தத் தியாகமும் செய்ய ஒவ்வொரு வாலிபனும் தயாராயிருக்க வேண்டும்' என்பது தான் சதா அவனுடைய நினைப்பு. நம் சாதிப் பிள்ளைகள் போலன்றி மீசையும், கிராப்பும் வைத்துக் கொண்டிருக்கிறான்—அசல் பட்டாணி போல! என்னமோ அம்மா! எப்படித்தான் நீ குடித்தனம் பண்ணப் போகிறாயோ, எனக்குக் கவலையாகத் தான் இருக்கிறது. அந்த மாதிரி தேசிய விஷயங்களில் தலையிட வேண்டா மென்று நாங்கள் எவ்வளவோ கெஞ்சியாகி

விட்டது. ஒரே பிடிவாதமாய் இருக்கிறான்'' என்றார். இவ்விஷயம் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. ''ஓர் உயர்ந்த அதிர்ஷ்டம் நமக்குக் கிடைத்தும், அதை அனுபவிக்கக் கொடுத்து வைக்காமற் போகுமோ,'' என்ற எண்ண முண்டாயிற்று.

இப்போது தெரிகிறது—அவர் என் பொருட்டுப் பிறந்தவரல்ல; நாட்டிற்கே ஒரு புத்துணர்ச்சியை,—அழியாத தேசிய வெறியை ஊட்டவந்தவர் என்று.

அப்போது, வெளியில் சொல்ல முடியாமல் மனத்திற்குள்ளாகக் குமைந்து குமுறினேன். வெளியில் சொல்ல வெட்கம்,—பயம். என் தமையனிடம் இவ்விஷயத்தைக் கூறினேன். இருவருமாக யோசித்தோம். கடைசியில், அவருடைய மனத்தை மாற்றுவதற்காக அவருக்கு நான் ஒரு கடிதம் எழுதுவதென்று தீர்மானித்தோம்.

தமையன் சொல்லியதைக் கேட்டு, கல்லும் கரைந்துருகும் வண்ணம் நான் எழுதிய கடிதம் எனக்கு இப்போது பாதி மறந்து விட்டது. மனத்தில் அலைமோதும் எண்ணங்களை வார்த்தைகளில் சித்தரிக்க முடியாமல் திணறினேன். ஏதோ பயனற்ற சொற்களால் கடிதத்தை நிரப்பியிருந்தேன். அப்பொழுது எனக்குப் படிப்பு வாசனையே இல்லாததாலும், கிராம வாசத்தினால் நாகரிகத்தின் போக்கே தெரிய வழியில்லாமலிருந்ததாலும், பாரதியார் போக்கு மனத்தில் அச்சத்தைத்தான் ஏற்படுத்திற்று. கடைசிவரை, என் கணவர் உயிருடன் இருக்கும் வரை, அவர் செல்லும் வழிகளில் அவரைப் பின்பற்றுவதற்கு உலகத்தாருக்கும், அவர்கள் பழிச்சொற்களுக்கும் பயந்து நடுங்கிக் கொண்டேதான் நான் முயல வேண்டியிருந்தது. நாட்டுக்கே வழிகாட்ட வந்த உத்தமரை — திடீர் திடீர் என்று பழைய வழக்கங்களை உதறித்தள்ளும் வழக்கங்கொண்ட பாரதியாரை—பாமரமக்கள் அர்த்தமில்லாமல்

செய்யும் செய்கைகளை அவரும் பின்பற்றவில்லையென்பதற்காக—எனது தூரத்துப் பந்துக்கள் தூஷிப்பார்கள். நான் அப்போது சின்ன வயதானவளானபடியால், புண்பட்ட மானைப்போல் துடிப்பேன். மொத்தத்தில், செய்யும் வகையறியாமல், துன்புறுத்தப் பெற்றேன்.

நான் அவருக்கு எழுதிய கடிதம் பின் வருமாறு இருந்திருக்கலாம் என நினைக்கிறேன் :

உ

க்ஷேமம் கடையம்

அனேக நமஸ்காரம். கடையத்தில் எல்லாரும் க்ஷேமம். இங்கு நம்ப விசுவநாத அத்திம்பேர் வந்திருக்கார். அவர் என் கிட்டே ஒரு சமாசாரம் சொன்னார். நீங்கள் ஏதோ தேச சுதந்திர விஷயமாகப் பாடுபடுவதாகச் சொன்னார். அதுக்காக ஏதோ ஓயாமல் எழுதிக் கொண்டிருக்கிறீர்களாம். சட்டத்துக்கு விரோதமாயிருந்தால் தீவாந்தரத்திற்குக் கொண்டுபோய் விடுவாளாம். எனக்கு இதை யெல்லாம் கேட்க ரொம்ப பயமாயிருக்கு. அதனால் நான் சொல்றதை ஒரு பொருட்டாய் மதிச்சுப் புறப்பட்டு வந்து விடுங்கள். உங்களை மன்றாடிக் கெஞ்சுகிறேன். இதற்கு மேல் நான் என்ன சொல்ல? உங்களுக்கு என் மேல் அன்பிருந்தால் புறப்பட்டு வந்து விடுங்கள். எந்த நிமிஷத்தில் உங்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று எப்போதும் தவித்துக் கொண்டிருக்கிறேன். கெடுதல் ஒன்றும் ஏற்படக் கூடாதென்று ஸ்வாமியை வேண்டிக்கொண்டிருக்கிறேன். செல்லம்மா.

என் கடிதத்திற்குப் பதில் பின்கண்டபடி எழுதியிருந்தார் :

ஓம் ஸ்ரீகாசி

ஹனுமந்தகட்டம்

எனதருமைக் காதலி செல்லம்மாளுக்கு ஆசீர்வாதம். உன் அன்பான கடிதம் கிடைத்தது. நீ எனது

காரியங்களில் இத்தனை பயப்படும்படியாக நான் ஒன்றும் செய்யவில்லை. விசுவநாதன் அனாவசியமாக உனக்குப் பயத்தை விளைவித்திருக்கிறான். நான் எப்போதுமே தவறான வழியில் நடப்பவனல்ல. இதைப் பற்றி உன்னைச் சந்திக்கும் சமயங்களில் விவரமாகக் கூறுகிறேன். நீ இந்த மாதிரி கவலைப்படும் நேரங்களில், தமிழை நன்றாகப் படித்து வந்தாயானால் மிகவும் சந்தோஷமுறுவேன்.

உனதன்பன்
சி. சுப்பிரமணிய பாரதி

## எட்டயபுரத்தில்

எட்டயபுரம் மகாராஜா ஒரு சமயம், டிசம்பர் மாதத்தில், சென்னைக்குச் சென்றிருந்தார். அவர்கூட அவரது பரிவாரங்களும் இருந்தார்கள். பாரதியாரும் அவரது நண்பர்களும்கூடப் போயிருந்தார்கள். போகும் சமயத்தில், "செல்லம்மா! வரும்போது உனக்குத் தேவையான சாமான்கள் வாங்கி வருகிறேன்'' என்று சொல்லிச் சென்றார். நானும், ஆவலாக அவர்கள் திரும்புவதை எதிர் நோக்கியிருந்தேன். பதினைந்து தினங்கள் கழித்து எட்டயபுரம் திரும்பினார். குதிரை வண்டிகள் இரண்டு வாயிலில் வந்து நின்றன. ஒன்றிலிருந்து தாம் மட்டும் இறங்கினார். மற்றொரு வண்டியிலிருந்த மூட்டைகளை வண்டிக்காரன் உள்ளே கொணர்ந்து வைத்தான். மூட்டைகள் கூடத்தை நிரப்பின. அத்தனையும் புடைவைகள், வெள்ளிப் பாத்திரங்கள் முதலியவைகளாயிருக்கலாமென்று மனம் பூரித்தேன். அவரது நண்பர்கள் முதலியோர் வந்து விசாரித்துச் சென்றார்கள்.

கடைசியாக, நான் மூட்டைகளை அவிழ்த்துப் பார்த்ததும், எனக்குக் கோபந்தான் வந்தது. அத்தனையும்

புஸ்தகங்கள்! புறநானூறு, அகநானூறு, பதிற்றுப் பத்து, சிலப்பதிகாரம், வள்ளுவர், வள்ளலார், கம்பராமாயணம், ஆங்கிலப் புஸ்தகங்கள்! ஒரே ஒரு புடைவை மட்டும் வாங்கி வந்தார். "இதென்ன இது! மகாராஜா எவ்வளவு பணம் கொடுத்தார்?" என்று கேட்டேன். "ரூபாய் 500 கொடுத்தார்" என்று சொல்லிப் பணப் பையை என்னிடம் நீட்டினார். திறந்து பார்த்தால், ரூ. 15 தான் இருந்தது. இவருடன் சென்ற இவரது நண்பர், வீட்டிற்கு வேண்டிய சாமான்களையும் வாங்கிக்கொண்டு, கையிலும் ரூ. 300 கொணர்ந்தார். எனது முகக்குறிப்பை உணர்ந்து, "செல்லம்மா! நீ பணத்திற்கு ஆசைப்படாதே! அழியும் பொருளைக் கொடுத்து அழியாத கல்விச் செல்வத்தைக் கொணர்ந்தேன். என் மனத்திற்குப் புஸ்தகங்களே ஆனந்தங் கொடுக்கின்றன. எனக்குச் சந்தோஷம் உனக்குத் திருப்தி யில்லையா" என்றார். நான் "ரொம்பத் திருப்தி" என்றேன்.

எட்டயபுரம் மகாராஜா போகும் இடங்களுக் கெல்லாம் இவரையும் அழைத்துச் செல்வார். கழுகுமலை, திருக்குற்றாலம், பாபவினாசம் முதலிய இடங்களில் உற்சாகமாக நாட்களைக் கழிப்பார்கள். போஜனையும், காளிதாசனையும்போல் கவிதைகள், காவியங்களின் ரசத்தை அனுபவித்துக்கொண்டு பொழுது போக்குவார்கள்.

எட்டயபுரம் ஜமீனைச் சேர்ந்த கழுகுமலையில் மானேஜர் வேங்கடராயர் குத்துண்ட துயரமான சம்பவம் பாரதியாரை வருத்தத்திற் குள்ளாக்கியது. மறவர்களுக்கும், சாணார்களுக்கும் ஏதோ தகராறு ஏற்பட்டு, உற்சவத்தின்போது தேரை விடக் கூடாதென்று மறித்தார்கள். வேங்கடராயர், பாவம்! அப்போதுதான் சாப்பிட இலையில் உட்கார்ந்தவர், சாப்பிடாமல், கலகம் நடக்கும் இடத்தைப் பார்வையிடச் சென்றார். "இவன் யாரடா,

பார்ப்பான், வழக்குத் தீர்க்க வந்தவன்!" என்று யாரோ கத்தியால் குத்திக் கொன்று விட்டார். இதுமுதல் "ஜாதிச் சண்டைகளும் சமயச் சண்டைகளும் ஒழிய வேண்டும்" என்று ஓயாமல் சொல்லிக்கொண் டிருப்பார் பாரதியார்.

காசியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில், பாரதியாருக்கு வட நாட்டிலேயே தங்கிவிடவேண்டுமென்ற எண்ணம் இருந்தது. அந்த எண்ணத்தை மாற்றி அவரைத் தென்னாட்டுக்கு அழைத்துவந்தவர் எட்டயபுரம் மகாராஜாதான். அந்தச் சமயத்தில் நடந்த டில்லி தர்பாருக்குச் சென்றிருந்த மகாராஜா, திரும்புங்காலையில் காசியில் சிவமடத்தில் இறங்கினார். அங்கே பாரதியாரைச் சந்தித்துத் தம்முடன் எட்டயபுரம் வந்து இருக்கும்படி அழைத்தார். தாம் அடிமையாக ஓரிடத்தில் கட்டுப்பட்டிருக்க முடியாதென்று பாரதியார் சொன்னார். "உன்னிஷ்டம்போல் இரு. என்னிடம் அடிமையாயிருக்க வேண்டாம். உன் செலவுகளையெல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று மகாராஜா கூற, அதற்கு மேலும் அவரைத் தட்டிச் சொல்ல மனமின்றி, ஊர் வந்து, என்னையும் அழைத்துக் கொண்டு எட்டயபுரத்தில் குடித்தனம் ஆரம்பித்தார்.

மகாராஜாவும், அவர் வாக்களித்தபடியே, பாரதியாரை எவ்வளவோ சௌக்கியமாகத்தான் வைத்திருந்தார். என்ன இருந்தபோதிலும், பாரதியாருக்கு எட்டயபுரத்தில் வாழ்வது ரசிக்கவில்லை. கூண்டிலடைபட்ட பறவை போல, பொது வாழ்விற்குச் செல்ல ஆவல் கொண்டார். கேவலம் 'நரஸ்துதி' செய்து வயிறு வளர்ப்பது பிடிக்காமல், ஒரு பாட்டு எழுதி நண்பர்களிடம் படித்துக் காண்பித்தார். பாரதியாரின்பால் பொறாமைகொண்ட நண்பர் ஒருவர், மகாராஜாவிடம் சென்று, பாரதியார் மகாராஜா

வைத் தூஷித்துக் கவி எழுதியதாகத் தெரிவித்தார். அதைக் கேட்டு மகாராஜாவுக்கும் சற்றுக் கோபமுண்டாயிற்று. பாரதியாருக்கு இவ்விஷயம் தெரிந்தபோது, எட்டயபுரத்தைவிட்டுக் கிளம்ப ஒரு காரணம் ஏற்பட்டதென்று நினைத்து, ஒருவாறு சந்தோஷமடைந்தார்.

## குரு உபதேசம்

பாரதியார், எட்டயபுரத்திலிருந்து மதுரைக்குச் சென்று, சேதுபதி கலாசாலையில் மூன்று மாதங்கள் தமிழ்ப் பண்டிதராக வேலை பார்த்தார். பின்பு, சென்னையில் ஜி. சுப்பிரமணிய அய்யரிடம் வேலைக்கு அமர்ந்து, தேச உத்தாரணத் தொண்டு ஆரம்பித்தார். "சுதேச மித்திரன்" பத்திரிகை அவருடைய வேலைக்கு உறுதுணையாக இருந்து உதவிபுரிந்தது.

"சுதேசமித்திர"னில் சேர்ந்ததும், நுனி நாக்கினால் பேசுபவர்கள், பொய் வேஷக்காரர்கள் முதலியவர்களைத் தாக்கியும், தேச கைங்கர்யம் செய்யும் உண்மைத் தியாகிகளைப் பூஷித்தும், அவர்களுக்கு உற்சாக மூட்டியும் கவிகள் புனைந்தார். நாட்டின் வறுமை அவருடைய உள்ளத்தில் கொதிப்பை உண்டாக்கிற்று. தமிழர்கள், கல்வி யறிவு இல்லாமல், "அ" எழுதச் சொன்னால் தும்பிக்கை யொன்று வரைந்து யானை போடக்கூடிய நிலையிலிருப்பதை நினைத்து வருந்தி, அவர்களை இடித்துக் கூறி அறிவு பெறக்கூடிய அனேக பாடல்களும், கட்டுரைகளும் எழுதிக் குவித்தார். அப்பொழுது, அந்தக் கவிகளையும் பாடல்களையும், தமிழ் அறிஞரும் தேச பக்தருமான வ. உ. சிதம்பரம் பிள்ளை மிகவும் மெச்சி, பாரதியாரை மேலும் இவ்வண்ணம் கவிகள் எழுதும்படி ஊக்கினர்.

காசியில் நடந்த காங்கிரஸ் பாரதியாரைப் புது மனித னாக மாற்றியது. அதற்கு முன்னால் நடந்த காங்கிரசுகளைப் போலன்றி, இந்தக் காங்கிரஸ் புத்துயிர் பெற்று விளங் கிற்று. 1906-ல் தாதாபாய் நௌரோஜீ காங்கிரஸ் தலைவரா யிருந்தார். "சுயராஜ்யம்" என்னும் கோஷத்தையும் கிளப்பிவிட்டார். பாரதியாரும் இந்தக் காங்கிரசுக்குச் சென்றார். வரும் வழியில், கல்கத்தாவின் அருகிலுள்ள ஊராகிய "டம்டம்"என்ற ஊரில் ஸ்ரீமதி நிவேதிதா தேவி இருப்பதாகக் கேள்வியுற்று, அவரைப் பார்ப்பதற்குச் சென்றார். அங்கே தாம் சென்றதையும், தேவியார் தமக்கு ஞானோபதேசம் செய்ததையும், பாரதியார் நிரம்பவும் உணர்ச்சியோடு என்னிடம் தெரிவித்திருக்கிறார். ஆனால், அவற்றை என்னால் விரித்துக் கூற முடியவில்லை.

பாரதியார் முதலில், "என்ன தான் விவேகானந்த ருடைய சிஷ்யையா யிருந்தாலும், ஆங்கில மாது தானே!" என்ற மனோபாவத்தோடு இருந்ததாக அம்மையார் மனத் தில் தோன்றியதாம். உடனே, "மகனே! உன் மனத்தில் பிரிவுணர்ச்சியை நீக்கு. ஜாதி மதம், குலம், கோத்திரம் என்ற அநாகரிகமான வித்தியாசங்களை விடு. அன்பை மட்டும் அகத்தில் கொள். பிற்காலத்தில் நீ ஒரு தீரனாக— சரித்திரப் பிரசித்தி பெற்ற தேவனாக வருவாய்" என் றுரைத்துவிட்டு, "அன்ப, உனக்கு இன்னும் விவாகம் ஆகவில்லையா?" என்றாராம்.

பாரதியார் வெட்கித் தலை குனிந்தார். பின்பு, "தாயே! எனக்கு விவாகமாகி, இரண்டு வயதான பெண் குழந்தை ஒன்றும் இருக்கிறது" என்றார்.

"நிரம்பச் சந்தோஷம்! ஆனால், மனைவியை ஏன் உடனழைத்து வரவில்லை?" என்றார் அம்மையார்.

"இன்னும் எங்களில் மனைவியைச் சரிசமமாகப் பொது இடங்களுக்கு அழைத்துச் செல்லும் வழக்கம்

இல்லை. மேலும், காங்கிரசுக்கு அவளை அழைத்து வந்தால், என்ன பிரயோசனம்?'' என்றார் பாரதியார்.

இதைக் கேட்டு, அம்மையாருக்கு வெகு கோபம் உண்டாயிற்று. "மகனே! புருஷர்கள் அனேகம் பேர் படித்தும் ஒன்றும் அறியாத சுயநல வெறி கொண்டவர்கள். ஸ்திரீகளை அடிமைகளென மதிப்பவர்கள். ஒரு சிலர் உன் போன்ற அறிவாளிகள். அவர்களுங் கூட இப்படி அறியாமையில் மூழ்கி, ஸ்திரீகளுக்குச் சம உரிமையும், தகுந்த கல்வியும் கொடுக்காவிட்டால், எப்படி நாடு சமூகச் சீர்திருத்தம் அடையும்?'' என்று அன்பாகக் கடிந்துரைத்து விட்டுப் பின்பு, "சரி, போனது போகட்டும். இனிமேலாகிலும் அவளைத் தனியென்று நினைக்காமல், உனது இடக் கை என்று மதித்து, மனத்தில் அவளைத் தெய்வமெனப் போற்றி நடந்து வருதல் வேண்டும்'' என்றாராம்.

அப்படியே வாக்களித்து, தேவியாரிடம் உபதேசம் பெற்றுத் திரும்பினார். தேவியார் தாம் இமாலயத்திலிருந்து கொணர்ந்த ஒரு இலையை—ஆலிலை அளவு இருக்கும்—பாரதியாருக்கு ஞாபகார்த்தமாக அளித்தார். (அது பாரதியார் காலமான சமயம் எங்கேயோ தவறி விட்டது.) அதைப் பாரதியார் ஒரு பொக்கிஷம் போல் போற்றிவந்தார். சில நண்பர்கள் தக்க விலை கொடுப்பதாகக் கேட்டுப் பார்த்துங்கூட அதை அவர் கொடுக்க இஷ்டப்படவில்லை.

பாரதியார், நிவேதிதா தேவி அம்மையாரிடம் உபதேசம் பெற்றதைப் பின்வரும் ஆனந்தக் களிப்பு மூலமாகவும் தெரிவித்திருக்கிறார் :

"சொன்னசொல் ஏதென்று சொல்வேன்—எனைச்
சூதாய்த்த னிக்கவே சும்மாயி ருத்தி
முன்னை யேது மில்லாதே—சுக

முற்றச் செய்தே யெனைப் பற்றிக்கொண்டார்
பற்றிய பழ்றற ஒன்றே—தன்னைப்
பற்றச் சொன்னார் பற்றிப் பார்த்தவிடத்தே
பெற்றதை யேதென்று சொல்வேன்—சற்றும்
பேசாத காரியம் பேசினார்—தோழி.

## நவ இந்தியா உதயம்

வங்காளப் பிரிவினை, சுதேசி இயக்கம், சுயராஜ்யத்தின் அவசியம், இவைகள் தேசமெங்கும் அலையடிப்பது போல முழங்க ஆரம்பித்தன. நம் மக்களின் மனத்தில் கூட (அந்த அடக்கு முறை ஆளுகையினால்) அடிமை மனப் பான்மை தகர்க்கப்பட்டுவிட்டது. 'விடுதலை' யில் பேராவல் எங்கு பார்த்தாலும் அதிகமாயிற்று. இந்த ஆவலுக்கு ஒரு புதுப் பலம் கொடுத்துப் பொது ஜனங்கள் யாவருக்கும் நன்றாய் விளங்கும்படி, தமது மின்சார சக்தி கொண்ட, இனிய, எளிய அமிழ்தத் தமிழ் மொழியில், 'இன்னிசைத் தீம் பாடல்கள்' மூலமாக வழி காட்டியது பாரதியாரின் தனிப்பெருமை. "இந்த அரிய, உன்னத மான, உத்கிருஷ்டமான தெய்வப் பணி செய்வதற்கு ஒரு பத்திரிகை வேண்டும். அதில் நமது விருப்பங்களை உள்ள துள்ளபடி வெளியிடவேண்டும். அப்படி வெளியிடப் பூரண உரிமை நமக்கு வேண்டும்" என்று அவர் உள்ளத் தில் அவா ஏற்பட்டது.

அவர் எட்டயபுரம் ராஜா அவர்களிடம் வேலை பார்க்க ஆரம்பித்து, "சுதேச மித்திரன்" பத்திரிகையில் வேலை பார்த்தது வரையில், ஒருவரது உத்தரவிற்குப் பணிந்தே நடக்கவேண்டி யிருந்ததால், அது அவர் மனத்தை வேல் கொண்டு குத்துவதைப் போலத் துன்புறுத்தியது. தங்கு தடையின்றி அவருடைய அபிப்பிராயங்களைப் பொதுஜனங் களுக்கு அறிவிக்க முடியவில்லை. இந்தத் துயரத்தையே

மனத்தில் வைத்து, "என்று தணியுமிந்த சுதந்திர தாகம்? என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?" என்று பாடினர். தமது சுதந்திர ஆவலையும், எஜமானர்களது அடிமை மோகத்தையுமே அவ்வண்ணம் குறிப்பிட்டார்.

கையிலோ பணம் கிடையாது. கிடைத்தாலும் நிற்காது. பத்திரிகை வெளியிட வேண்டுமென்ற ஆவல் மட்டும் அபாரமா யிருந்தது. காலமும் அவருக்கு உதவி செய்ய ஆரம்பித்தது. அவருக்காகவே தான் தோன்றிற்றோ என்னவோ தெரியாது,—சென்னை திருவல்லிக் கேணியில் சில வைஷ்ணவ நண்பர்கள் ஒரு பத்திரிகை நிறுவ ஆவல்கொண்டு முயற்சி செய்து வந்தனர்.

ஏற்கெனவே ஆங்கிலத்தில் "பிரம்மவாதின்" என்ற பத்திரிகையைத் திருவல்லிக்கேணியிலிருந்த ந. திருமலாச் சாரியார் நன்றாக நடத்திக்கொண்டிருந்தார். அது, மத சம்பந்தமான பத்திரிகைதான். அதன் சொந்தக்காரர் அழகியசிங்கப் பெருமாள். அச் சமயம் அரசியலுணர்ச் சியை ஜனங்களுக்குப் புகட்டுவதற்கு அந்தப் பத்திரிகை பிரயோஜனமில்லை யென்று திருமலாச்சாரியார் யோசித்து, 'ஆங்கில மோகம்' தலைவிரித்தாடிக் கொண்டிருந்த அக் காலத்தில் தமிழிலேயே ஓர் உயர்ந்த பத்திரிகை நடத்த வேண்டும் என்று, அதற்கான அச்சுயந்திரம் முதலியவை களைச் சேகரித்துக்கொண்டு, ஒரு தகுந்த பத்திராசிரிய ரைத் தேட ஆரம்பித்தார்.

'தேடப்போன மருந்து காலில் அகப்பட்டது போல'ப் பத்திரிகை நடத்துவதில் ஆர்வங்கொண்ட பாரதி யார் வந்து சேர்ந்தார். பத்திராதிபரின் எல்லாப் பொறுப் புக்களும் பாரதியாரின் தலையிலேயே சுமந்தன. முழு மனத்தோடு பாரதியாரும் அதை ஏற்ருர். அவருடைய எழுதுகோல், 'தேசாவேசக் கனலை' உதிர்க்க ஆரம்பித் தது. அவரது உயர்ந்த எண்ணங்களையும், அக்காலத்தின்

நாட்டின் நிலைமையையும் கண்ணாடிபோல ஜனங்களுக்கு எடுத்துக் காட்டியது.

அவரது அகத்தின் ஆழத்திலிருந்து எழும் உணர்ச்சி வெள்ளத்தை விறுவிறுத்த வார்த்தைகள் மூலமாக "இந்தியா"ப் பத்திரிகை வெளியிட்டது. மனங் கொதித்து எழுதும் விஷயங்கள்கூட அவரது அபாரமான காந்தருவ சங்கீத இனிமைகொண்ட சொற்களாகத்தான் இருக்கும். அழுகையில் ஒரு தீரம்; வசவிலும்கூட ஓர் இனிமை.

1907-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் "இந்தியா"ப் பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது. அப்பால் நடந்தவை யெல்லாம், இடியும், புயலும், சுழற்காற்றும், சூறுவளியும், ஊழிகாலத்துப் பிரளய மெனப்படும் யுகமுடிவு என்று வர்ணிக்கிறார்களே, அதுபோன்றவைகளுந்தான்.

திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பிரசங்கங்கள் - விபினச் சந்திரபாலர் வரவேற்பு-லாலா லஜபதி ராயை நாடு கடத்தியது-சூரத் காங்கிரசில் கலாட்டா-சிதம்பரம்பிள்ளை ராஜத்துவேஷ வழக்கு—ஆகிய இத்தனை காரியங்களும் பின்பு நடைபெற்றனவென்று நினைக்கிறேன். இவை ஒவ்வொன்றிலும் பாரதியாருக்குப் பங்குண்டு. இராப்பகலாக எழுதித் தள்ளுவார். சின்னஞ் சிறு பாடல்கள் மூலமாக, பண்டிதர்களிலிருந்து பாமரர்வரை அறியும்படி, அரிய தொண்டு புரிந்தார். இப்பொழுது திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நாம் எல்லோரும் சந்தோஷமாக உட்கார்ந்து நமது வித்துவான்களின் சங்கீதத்தை ரசிப்பதற்காக "ரேடியோ" அமைத்திருக்கும் இடத்திலே தான் விபினச் சந்திரபாலரை அழைத்து வந்து பிரசங்கமாரி பொழியச் செய்தார். (திருவல்லிக்கேணிக் கடலுக்கு வ. வெ. சு. அய்யரின் குளத்தங்கரை அரசமரத்தைப் போல் பேசும் சக்தி இருந்தால், அன்றிலிருந்து இன்றுவரை கடற்கரை நிகழ்ச்சிகளை என்ன ரசமாகக் கூறியிருக்கும்!)

பாரதியார் மிக மெலிந்த சரீரமுள்ளவர். இருந்தாலும், தமது தொழிலாற்றுவதில் சளைக்காமல் நிற்பார். இக்காலத்தில் எல்லோரும் மேடையேறிப் பிரசங்கம் புரிந்து வருகிறார்கள். அந்தக்காலங்களில், மிகவும் வல்லவர்களென்று கியாதி படைத்தவர்கள் தான் பேசுவது வழக்கம். யார் பேசினாலும், பாரதியார் பேசாவிட்டால் சபையோருக்கு ருசி ஏற்படாது. பாட்டைக் கேளாமல் திரும்ப மாட்டார்கள். உணர்ச்சி மிகுதியினால் குரல் ஸ்தாயிமட்டுக்கு மிஞ்சிவிடும். அச்சமயம் சிம்ம கர்ஜனை செய்வார். சமுத்திர ராஜனும் நடுங்கிவிடுவான். அக் காலங்களில் பொதுக் கூட்டங்களுக்கு ஒலி பெருக்கி வைக்கும் வழக்கம் கிடையாது. தமக்கு உடம்பு எவ்வளவுதான் அசௌக்கியமாயிருந்தாலும், ஜனங்களைத் திருப்தி செய்வதற்காகப் பாடல்களைப் பாடுவார். குதிரையைப் போல உழைப்பார். பெரிய மிதவாதிகளுக்குக்கூடப் பாரதியாரின் தீவிர வாதத்தில் மனத்திற்குள் நம்பிக்கைதான். அவரது வீரதீரப் பிரசங்கத்தைக் கேட்கவும் பாடல்களை ரசிக்கவும் வந்து மறைவிலிருந்து கொண்டு கேட்பார்கள். இந்த நிகழ்ச்சிகளை ராஜத்துரோகமானதென்று அரசாங்கத்தார் நினைக்கலாயினர். பாபு விபினச் சந்திர பாலர் கல்கத்தா சென்ற பிறகுங்கூட நமது சென்னைப் பொது மக்களின் மனத்தில் ஏற்பட்டிருக்கும் மனக் கிளர்ச்சி குறைந்துபோக விடக்கூடாதென்று பாரதியார், எதிராஜ சுரேந்திரநாத் ஆரியா, ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலியோர் இந்தக் கடற்கரை மகாநாடுகளைத் தொடர்ந்து நடத்தி வந்தனர்.

## சூரத் காங்கிரஸ்

சுதேசி இயக்கம் நாட்டில் காட்டுத் தீ போல் பரவ ஆரம்பித்தது. வ. உ. சிதம்பரம் பிள்ளை சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்று ஆரம்பிக்கவேண்டுமென்று முயற்சி

செய்ய ஆரம்பித்தார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நடந்த வியாபாரம் அனேகமாகத் தூத்துக்குடி, கொழும்புத் துறைமுகங்களின் மூலமாகவே நடந்தது. அந்த வேலையை பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக் கப்பல்கள்தான் நடத்தி வந்தன. இந்தியக் கப்பல் கம்பெனி ஒன்று ஸ்தாபிதம் செய்தால், நல்ல லாபம் கிடைப்பதோடு, நமக்குக் கௌரவமும் உண்டு எனத் தீர்மானித்து, "சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி" என்ற பெயரில், கூட்டுத் தொழில் சங்கத்தை சிதம்பரம் பிள்ளை ஸ்தாபித்தார். அதற்குத் தவணைப்படி பணம் கொடுக்கிறோமென்ற ஏற்பாட்டில் இரண்டு கப்பல்கள் விலைக்கு வாங்கினார். அக்கப்பல்களின் பெயர் "லாமோ"-"காலியா" என்பவை. மேற்படி கம்பெனிக்குப் பணம் சேர்க்கச் சிதம்பரம் பிள்ளை சென்னை வந்திருந்தார். பாரதியார் தம் சிநேகிதர்களில் செல்வமுள்ளவர்களிடம் அவரை அழைத்துச் சென்று, மேற்படி நிதிக்குப் பணம் சேர்த்துக் கொடுத்தார். மிக மும்முரமாக அந்த வேலையில் ஈடுபட்டிருந்தார்.

சூரத் காங்கிரஸ் நெருங்க ஆரம்பித்தது. ஒரு பெரிய வாலிபர்களின் கூட்டம் பாரதி, சிதம்பரம் பிள்ளை இவர்களின் தலைமையில் சூரத்துக்குச்சென்றது. திலகர் தலைமையில் கூடிய தீவிரவாதிகளைக் காங்கிரசிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்று நிதானக் கட்சியினர்-மிதவாதிகள்-விரும்பினர். தீவிரவாதிகள் லாலா லஜபதிராயைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். மிதவாதிகள் ராஸ்பிகாரி கோஷைத் தேர்ந்தெடுத்தனர். ராஸ்பிகாரி கோஷ் மிகவும் ஆர அமர நளினமான பாஷையில், 'தூங்கி வழிந்து சொப்பனம் காணும் முறை' என்று பாரதியார் சொல்லும் நடையில், ரசமாகப் பிரசங்கம் புரியவேண்டும் என்று எழுந்தார்.

அவருடைய தலைமைப் பிரசங்கத்தை ஆரம்பிக்கும் போதே, கூட்டத்தில் கலாட்டா ஆரம்பித்தாயிற்று. இந்த

நிதானக் கட்சிக் கூட்டத்தைக் கலைத்துப் புத்தி வருத்த வேண்டும் என்று திலகர் எழுந்திருந்தார். அவரை மேடையிலிருந்து இழுத்துத் தூக்கி எறிய ஆரம்பித்தனர் நிதானக் கட்சியின் ஆட்கள்.

உடனே; "திலகருக்கு ஆபத்து!" என்ற கூச்சல் உண்டாயிற்று. ஓர் இளைஞர் கூட்டம் திலகரைச் சூழ்ந்து அவர் துன்புறு வண்ணம் காத்தது. அக் கூட்டத்தில் முக்கால்வாசிப் பேர் சென்னை இளைஞர்களே. கேட்கவேண்டுமா? "குழப்பமுற்றே அவர் யாவரும் வகை தொகையொன்றுமின்றி அன்று புரிந்ததை" எழுதுதல் சிரமம். தடியடி, வசவு, திட்டு, நாற்காலி வீச்சு எல்லாம் நடந்தன; கடைசியில் போலீசார் வரவேண்டியும் ஏற்பட்டது. இத்தனை வைபவத்துடன் சூரத் காங்கிரஸ் முடிந்தது.

மிதவாதிகள், "திலகன் ஒருவனாலே இப்படி யாச்சு!" என்று அழுதனர்; பிரலாபித்தனர். ஆனால், தேச பக்தர்களோ, திலகர் தலைமையில் கூடி சுயராஜ்யத் தத்துவங்களை அவர் மூலமாக நன்கறிந்தனர்.

பாரதியார் சென்னை திரும்பியதும், புதிய புதிய, பல பல வேலைகளில் தலையிடவேண்டி யிருந்தது. சூரத்தில் முன்னேற்றம் அடையும் நோக்கமுள்ள பத்திரிகாசிரியர்கள் எல்லோரும் ஒன்று கூடினார்கள். தங்களது நோக்கங்கள் நாட்டில் பரவுவதற்கு ஒரு கட்டுப்பாட்டின்படி நடக்கவேண்டும் என்றும், சர்க்காரின் அடக்கு முறைகளைக் கண்டிக்கும் சமயங்ககளில் எல்லாப் பத்திரிகைளும் ஒன்றுபட்டு ஒரே விஷயத்தை எழுதி நாட்டு மக்களை விழிப்புறுத்த வேண்டும் என்றும் தீர்மானம் செய்தார்கள். தென்னாட்டின் பொறுப்பைப் பாரதியார் தம் மேல் போட்டுக் கொண்டார்.

சென்னை மகாஜன சபையில் அக் காலத்தில் மிதவாதப் பெரியோர்கள் அதிகம் இருந்தமையால், தீவிர

வாதிகளுக்கென, "சென்னை ஜன சங்கம்" என்று ஒன்று ஆரம்பித்தார். பிற்காலத்தில் அதையே "செ—சங்கம் என்று பெயர் கொடுத்துக் காரியங்கள் நடத்தினோம்; ஒரு காரியமும் நடக்கவில்லை" என்று துக்கத்தினால் ஏற்பட்ட ஹாஸ்யச் சுவையோடு "ஞானரத"த்தில் எழுதினார்.

"சுதேசிச் சாமான்கள் தான் வாங்கவேண்டும். அன்னியச் சாமான்களைப் பகிஷ்கரிக்கவேண்டும். ஊரெங்கும் கூட்டங் கூட்டமாகச் சென்று பிரசாரம் செய்வதோடு, சுதேசிச் சாமான்களும் விற்கவேண்டும்" என்று முடிவு செய்து, அதற்காகப் 'பாரத பந்தர்' என்ற கடையொன்று திறக்கப்பட்டது. இது வெகு காலம் வரை லாபகரமாக நடத்தப்பட்டது. இந்த முயற்சிகள் எல்லாவற்றிலும் பாரதியார் அதிக ஊக்கத்துடன் உழைத்து வந்தார்.

இந்தியா முழுவதிலுமுள்ள தீவிரவாதத் தலைவர்கள் ஒரு தினத்தைக் குறிப்பிட்டு, அதை 'சுயராஜ்ய தினம்' என இந்தியா பூராவும் கொண்டாட வேண்டுமென்று ஆக்ஞை யிட்டார்கள். அந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றன. சென்னையிலும் எல்லாப் பகுதிகளிலும் ஊர்வலங்கள் புறப்பட்டு, திருவல்லிக்கேணி பெல்ஸ் ரோடில் கூடி, பைக்ராப்ட்ஸ் ரோட் வழியே கடற்கரை சென்று உபன்யாசங்கள் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. பாரதியாரும் அவரது சகாக்களும், தொண்டர்களும் மூன்று நாட்களுக்கு முன்னிருந்தே வேலை செய்துவந்தனர். சென்னையில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சென்று, கூட்டங் கூடிப் பிரசங்கம் செய்து, ஜனங்கள் எல்லோரையும் ஊர்வலமாக வரவேண்டுமென்று தூண்டுதல் செய்தார்கள். குறித்த

தினமும் வந்தது. மேளதாளங்களோடு சமுத்திரக் கரைக்கு ஊர்வலம் செல்லவேண்டும் என்பது ஏற்பாடு. மேளதாளங்களுடன் ஊர்வலம் போக 'லைசென்ஸ்' வாங்கவேண்டும். போலீஸ் கமிஷனரைப் பார்த்துப் பேசி, விண்ணப்பம் செய்து, உத்தரவு பெற்றால் தான் அவ்விதம் செய்யலாம். அவ்விதம் போலீசாரிடம் விண்ணப்பித்துக் கொள்வது சென்னை ஜன சங்கத்தின் கொள்கைக்கு விரோதம்.

வாத்தியக்காரர்கள் வருவதற்குத் தயங்கினார்கள். சங்கத்தில் எல்லோரும் 'தேச பக்தர்கள்' தான்; என்றாலும், ஒருவரும் அவர்களுக்குத் தைரியங் கூறி அழைத்து வருவதற்கு முன் வரவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கலாயினர்.

பாரதியார் வாத்தியக்காரர்களிடம் சென்று, "தம்பிமாரே! ஏன் தாமதம்? புறப்படுங்கள்! போலீஸாரால் உங்களுக்கு ஓர் ஆபத்தும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். உங்களுக்கு ஏற்படும் தண்டனையை நான் அனுபவிக்கிறேன். இவ்விஷயத்தைப் போலீசாரிடமும் தெரிவித்துவிடுகிறேன். உங்களை ஒன்றும் செய்யமாட்டார்கள்" என்று உரைத்த பின்னரே நாயனக்காரரும் பாண்டு வாத்தியக் கோஷ்டியினரும் புறப்பட்டனர்.

உரத்த குரலில் "வந்தே மாதர" கீதத்தைப் பாடிக் கொண்டு, கோட்டு, தலைப்பாகை, நெற்றியில் குங்குமப் பொட்டு, கழுத்தில் புஷ்பஹாரம் முதலியன அணிந்து, ஒரு சேனாபதி தன் சைனியத்துடன் போருக்கெழுந்ததுபோல், பாரதியார் முன்னால் சென்றார்.

வீட்டில், நாங்கள் யாவரும் மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு கவலைப்பட்டுக்கொண் டிருந்தோம். போலீஸ் அனுமதியில்லாமலேயே ஊர்வலங்கள் யாவும் மேளதாளங்கள் சகிதம் கடற்கரை சேர்ந்தன. இந்த

மா பெரும் கூட்டம் முடிகிறவரை, மெரினா ரோட்டில் வண்டிகள் விடமுடியவில்லை. என்ன காரணமோ, அன்று போலீசார் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. பெரிய கூட்டத்தில் ஒரு சிறு விபத்துக்கூட ஏற்படாமல் தொண்டர்களால் பாதுகாக்கப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

ஆனால், தூத்துக்குடியில், சுதந்திர தினத்தைக் கொண்டாடியதற்காக வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் மேலும், சுப்பிரமணியசிவம் அவர்கள் மேலும், அவர்கள் பிரசங்கங்களில் ராஜத்துவேஷக் குற்றஞ்சாட்டி, வழக்குத் தொடர்ந்தார்கள். பாரதியாரும் மற்றும் சில நண்பர்களும் மேற்படி வழக்குக்குச் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

சிதம்பரம் பிள்ளை, சிவம் இவர்களின் வழக்கு விசாரணைகளும் அவர்களுக்குக் கிடைத்த கொடிய தண்டனைகளும் தமிழ் நாட்டில் ஒரு கிளர்ச்சியை—கொந்தளிப்பை-உண்டாக்கின.

"இந்தியா"ப் பத்திரிகை, ஒவ்வொரு வாரமும், தக்க படங்கள் மூலமாகவும், கட்டுரைகள் மூலமாகவும், எதேச்சாதிகார முறையைக் கண்டித்துவந்தது. "இந்தியா" செல்லாத கிராமம் இல்லை. படிக்காத மக்கள் இல்லை. ஒவ்வொருவரும், பத்திரிகையைப் படிப்பதோடல்லாமல், தமது நண்பர்களுடன் அதைப்பற்றிப் பேசுவதும், அதன் அழகை வியப்பதுமாயிருப்பர். சமயத்திற்கேற்ற பாட்டுக்களும் ஹாஸ்யச் சுவை மிகுந்த படங்களும் தலையங்கங்களும் தமிழ் மக்கட்கு உற்சாகத்தை யூட்டி, "இந்தியா"வை என்றும் மறக்காதவாறு செய்தன.

இவ்விதமாக, மகா தைரியத்தோடு, ஒரு பத்திரிகை உலாவியதுபற்றி சர்க்காருக்குக் கோபம் வந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. பத்திரிகையை நடத்திய எம். ஸ்ரீநிவாசாச்சாரியார் பேரிலும் ஜி. சுப்பிரமண்ய அய்யர் பேரிலும் வாரண்டுகள் பிறந்தன. அவர்களையும் கைது செய்தனர்.

தம் பேரிலும் வாரண்டு இருப்பதாகப் பாரதியார் கேள்வியுற்றார். இச் சமயம் அரசாங்கத்தின் கைக்குள் அகப்பட்டால் தமது தேச சேவைக்கு விக்கினம் ஏற்படும் என்பதை நினைத்துப் புதுவைக்குச் செல்ல எண்ணங் கொண்டார்.

## புதுவை புகல்

பாரதியார் தமது நண்பர்களான வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய சிவா, இவர்களைச் சிறையில் கண்ட போது அங்குள்ள கஷ்டங்களை நேரில் பார்த்து அறிந்திருந்தார். பாரதியாருக்கு எவ்விதமான துன்ப வாழ்க்கையும் லட்சியமில்லை. நாள் கணக்கில் பட்டினியிருந்தாலும், அவரது மன உற்சாகம் குன்றாது. அவருக்குத் தாங்கமுடியாதது ஒன்று உண்டென்றால், அது 'கட்டுகளுக்குள் அடங்கியிருப்பது' என்பதுதான். அவருடைய பிறவி இயற்கைக்கு அது முற்றிலும் மாறானது. அவர், தனியே இருப்பதற்கு அஞ்சார். குடும்பத்தாரையும் நண்பர்களையும் விட்டுப் பிரிந்திருக்கவும் பயப்படமாட்டார். சிறையில், தம்விருப்பப்படி உண்ணவும், இருக்கவும், பாடவும், ஆடவும் விடார்களே! அதற்கென்ன செய்யலாம்! மாவரைப்பதும், செக்கிழுப்பதும், கல்லுடைப்பதும் மனோதிடமுள்ளவர்கள் (தேகப் பலம் இல்லாவிட்டால் கூட) நடத்திவிடலாம். ஆனால், அதை நேரங் குறிப்பிட்டு, அந்த மணிக்குள்ளாக முடிக்க வேண்டுமே! மனிதனுக்கு மனிதன் அடிமையா? இந்த ஆத்மாவை அடிமைப்படுத்தும் செயலைக் காட்டிலும், எங்கேனும் காட்டுப் புறங்களுக்காவது ஓடி, மனிதர்களின் கொடுமைகளிலிருந்து விடுபட்டு வாழலாம் என்று பாரதியாருக்குத் தோன்றிற்று.

மேலும், அந்தக் காலத்தில் காந்தி மகாத்மாவின் சத்தியாக்கிரகக் கொள்கைகள் நாட்டில் பரவியிருக்க

வில்லை. கூடுமானவரையில் சர்க்கார் கையில் அகப்படாமல் தேசவிடுதலைக்கு வேலை செய்யவேண்டுமென்பதே பெரும்பாலான தேசபக்தர்களின் நோக்கமாயிருந்தது.

புதுச்சேரிக்குப்போய்விட்டால், பிரிட்டிஷ்சர்க்காரின் சட்டத்துக்குள் அகப்படாமல் வேலை செய்யலாம் என்று அவருடைய ஆத்ம நண்பர்கள் யோசனை சொல்லவும், அதற்கு ஒப்பி, குவளை கிருஷ்ணமாச்சாரியாரின் ஷட்டகர் சிட்டி குப்புசாமி அய்யங்காருக்குத் தமது சிநேகிதர் கொடுத்த கடிதத்தை எடுத்துக்கொண்டு புதுவைக்குக் கிளம்பினார். சென்னையிலிருந்து புறப்படாமல், சைதாப்பேட்டைக்குச் சென்று, அங்கிருந்து ரயிலேறினார். இரவு முழுதும் துயிலின்றிக் கண்விழித்துச் சோர்ந்து புதுவை வந்துசேர்ந்தார். நன்றாகப் பொழுது புலருமுன் ரயிலடி சேர்ந்து, விடியும்வரை அங்கேயே தங்கியிருந்து, அதிகாலையில் குப்புசாமி அய்யங்கார் மாளிகையை அடைந்தார்.

பாரதியாருக்கு மனத்தில் ஏதேனும் ஒன்று தோன்ற ஆரம்பித்துவிட்டால், அது கொஞ்சத்தில் போகாது. ரயில் ஏறிய பிறகும், போலீசாரிடம் அகப்படாமல் புதுவை போய்ச் சேரவேண்டுமே, என்று கவலைப்பட்டாராம். ரயிலில் யார் வந்து ஏறினாலும், டிக்கட் பரிசோதகர் வந்தாலும், ஸ்டேஷன் மாஸ்டர் வந்தாலும், போலீசாரால் அனுப்பப்பட்டுத் தம்மைக் கவனிக்க வந்த நபர்களாகவே தோன்றுமாம். பின்பு, "அச்சமுற்றான் அழிவான்" என்ற மொழிகளை ஞாபகப்படுத்தி மனத்தைத் தேற்றிக் கொள்வாராம். பல கேள்விகளைச் சமுசயப்பட்டவர்களிடத்தில் கேட்டுச் சரியான பதில் கிடைத்த பின்னரே அவர் மனத்தில் சமாதானம் ஏற்படுமாம். இப்பேர்ப்பட்ட தைரியசிலனுக்கே இவ்விதம் மனச்சஞ்சல மேற்படின், என்போன்றவர்களின் கதி என்னவாகும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை.

என் தமையனார், கே. ஆர். அப்பாத்துரை அய்யர், பாரதியாரிடத்தில் மிக்க அன்பு கொண்டவர். தேசிய இயக்கத்தில் ஆர்வங்கொண்டவர். குடும்பப் பொறுப்பைப் பற்றிப் பாரதியார் சில சமயங்களில், "என்னடா! நாம் தேசப் பணிக்குச் சென்றுவிட்டால், வீட்டுக் காரியத்தை யார் நடத்துவார்கள்?" என்று யோசிக்கும் போதெல்லாம், என் தமையனார் அவரிடம் "நீ யோசனை செய்யாதே,—ஒரு செல்லம்மாளுக்காக, எடுத்த காரியத்தை விடாதே! நீ செய்யும் தியாகத்தினால், கோடிக் கணக்கான மக்களுக்கு நன்மை ஏற்படலாம். நீ சிறை செல்லவேண்டி வந்தாலும், நான் உன் குடும்பத்தைப் பராமரித்துக் கொள்வேன்,—என் இத்தனை பெரிய குடும்பத்தோடு. இதற்காக மனத்தைக் கலங்கவிடாதே!" என்று ஊக்கமளித்து உற்சாக மூட்டுவார். அவரும் சுதந்திரப் பிரியரானபடியால், கட்டுப்பட்ட உத்தியோகம் எதுவும் அவருக்குப் பிடிக்காது. போஸ்ட்மாஸ்டர் உத்தியோகம் ஆறேழு வருஷம் பார்த்துத் தேசப்பணியில் ஆவல்கொண்டு அந்த வேலையை ராஜீனமாச் செய்து விட்டார்.

அவர், கொஞ்சக் காலமாக, எங்கள் கூடவே சென்னையில் வசித்துவந்தார். 'பால பாரதா' என்ற பத்திரிகையும் 'இந்தியா'வுடன் சேர்த்து நடத்தப் பெற்றது. அப்பாத்துரை அய்யர் அதில் உழைத்துவந்தார். சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு ஊரூராகச் சென்று பணம் சேகரிக்கும் தொழிலிலும் ஈடுபட்டார். நல்ல உழைப்பாளி; சலியாமல் வேலை செய்வார்.

பாரதியார் புதுவை சென்ற சமயம் இவர் சென்னையில் இல்லை. எங்கள் ஊரார் சிலர் சேர்ந்து, அப்போது புதியதான 'பயாஸ்கோப்' கம்பெனி ஒன்று நடத்தி வந்தனர். கூடலூரில் 'பயாஸ்கோப்' நடந்து வந்தது. அங்கு சென்றிருந்தார்.

பாரதியாருடன் புதுவை சென்ற நண்பர் அவரைப் புதுவையில் விட்டுவிட்டுக் கடலூர் சென்று என் தமையனாரிடம் இந்த விஷயத்தைக் கூறினார். அதை என் தமையனார் கேட்டுப் பாரதியாரைப் போய்ப் பார்த்து, அவருக்குத் தேவையான துணி மணி முதலியவற்றை வாங்கிக் கொடுத்து விட்டு, சென்னை வந்து, என்னை அழைத்துப் போய் எங்கள் ஊராகிய கடையத்தில் கொண்டுவிட்டார்.

புதுவை சென்ற பாரதியாரால் புதுவையும் பெருமையடையலாயிற்று. அதுவரையிலும் கடன் பட்டு அல்லது குற்றஞ் சாட்டப்பட்டுத் தம்மிடம் அடைக்கலம் புகுபவரைக் காப்பாற்றி வந்தது புதுவை. அதனிடம் சரண்புகும் அரசியல் வாதிகளைப் பிரிட்டிஷ் சர்க்கார் ஒன்றும் செய்ய முடியாது என்ற விஷயம் பாரதியார் அங்கு சென்று வசிக்க ஆரம்பித்ததிலிருந்துதான் இந்தியா முழுமைக்கும் தெரிய ஆரம்பித்தது. என்னதான் புரட்சிகரமான நோக்கங் கொண்டவரானாலும், அஹிம்ஸா வழியில் நடக்கும் எந்தத் தீவிரவாதியும் அங்கு வசிக்கலாம் என்ற விஷயம் பாரதியாரால்தான் உறுதியாக்கப்பட்டது.

அரவிந்தகோஷ் முதலியோர் வந்து நிர்ப்பயமாக அங்கு வசிக்க ஆரம்பித்ததற்கும் பாரதியாரே காரணம் எனலாம்.

பாரதியார் புதுவை சென்றதை எப்படியோ விசாரித்தறிந்தனர் சென்னைப் போலீசார். ஆனால், அதைப் பகிரங்கப் படுத்த விரும்பவில்லை. கோர்ட்டில் வழக்கு நடக்கும் பொழுதுகூட, அதைச்சொல்வது அவசியமாயிருந்த போதிலும், சொல்லாமல் மறைத்து விட்டனர். 'சுதந்திர' ஆர்வங் கொண்டவர்களுக்கு இப்படி ஒரு பத்திரமான புகலிடம் இருப்பது தெரியக்கூடாதென விரும்பினர் போலும்!

ஆனால், எப்படியோ பாரதியாரின் புதுவை வாசம் அதிதுரிதமாகப் பரவிவிட்டது. அக்கினி பகவான் கூட அவ்வளவு எளிதில் பரவமாட்டார்.

மேற்கண்டபடி, பாரதியார் இருக்கும் இடம் தெரியாததுபோல் பாவனை செய்தாலும், அவரைக் கண்காணிக்க. சி. ஐ. டி. காரர்களை அனுப்பாமல் இல்லை. அங்கு அனுப்பப்பட்டவர்கள் அங்கேயே வேரூன்றி விட்டார்கள். பாரதியாரை வேவு பார்க்கும் வேலைக்காக நியமிக்கப்பட்ட படைக்குச் சென்னை அரசாங்கம் ஆயிரக்கணக்கான பணம் செலவழித்திருக்கு மென்பது நம்பத்தக்கதே.

போலீஸ் இலாகாவில் உத்தியோகம் உயர்வதற்கும், மேலதிகாரிகளின் அபிமானத்தைப் பெறுவதற்கும், ஏதாவது கோள் உற்பத்தி செய்யும் வழக்கம் உண்டல்லவா? அவ்விதமே, பாரதியார் மீது குற்றம் ஒன்றும் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், குற்றம் இருப்பதாக ஸ்தாபிதம் செய்ய முயன்றார்கள். அவர்கள் செய்த இடைஞ்சல்கள்—தொந்தரவுகள்—ஒரு சத்தியாக்கிரகியைக் கூட 'அஹிம்ஸா' மார்க்கத்தில் நம்பிக்கையை இழந்து பலாத்காரத்தில் இறங்கச் செய்து விடுமென்று சொல்லலாம்.

பாரதியாரை அவர்கள் ஒரு நிமிஷங்கூட நிம்மதியாக இருக்கவிடவில்லை. இவ்விதம் ஏற்பட்ட கடவுள் சோதனை, பாரதியாருக்கு மேன்மையையே அளித்தது. அவரது தேசப்பற்று புடம்போட்ட தங்கம் போலப் பிரகாசிக்க ஆரம்பித்தது.

## அய்யங்காரின் தவிப்பு

பாரதியாருக்குத் தங்க இடம் கொடுத்த குப்புசாமி அய்யங்காரை அழைத்துப் பயமுறுத்தும்படி பிரஞ்சுப் போலீசாரை ஏவினார்கள். குப்புசாமி அய்யங்கார் சென்னை அரசியலில் எவ்விதச் சம்பந்தமும் வைத்துக் கொண்டது கிடையாது. அவர் சிறிய வியாபாரி. முன் அதிகச் செல்வத்துடனிருந்து ஏழ்மை நிலைமைக்கு வந்த

வர். வைதீகத்தில் அதிகப் பற்றுள்ளவர். சங்கீதத்திலும் ஞானமுண்டு. சற்றுப் பயந்த சுபாவ முடையவர். போலீஸ் என்றாலே, ஒரு காத வழி ஓட்டம் பிடிப்பார். இப்பேர்ப்பட்டவரைப் பயமுறுத்துவது போலீசாருக்குச் சிரமமா, என்ன? கர்ப்டன், அய்யங்காரைக் கூப்பிட்டு அனுப்பி, "பாரதியாரைப் பற்றி உமக்கு என்ன தெரியுமையா?" என்று ஒரு கேள்வி போட்டார்.

தமக்குப் பாரதியார் முன் பின் பழக்கமானவர் அல்லவென்றும், தமது நண்பர் ஒருவர் கடிதம் கொடுத்துத் தம் வீட்டிற்கு அனுப்பினாரென்றும், வேறு ஒன்றுமே தெரியாதென்றும் அய்யங்கார் கூறிவிட்டார்.

"உமது வீட்டிலிருந்து உடனே பாரதியாரை வெளிக் கிளப்பிவிட வேண்டியது; இல்லையேல், உமக்கும் ஆபத்துத் தான். பாரதி சென்னைச் சர்க்காருக்குப் பரம விரோதி" என்று அதட்டி, உத்தரவும் போட்டுவிட்டார் காப்டன்.

ஸ்ரீ அய்யங்கார் இருதலைக் கொள்ளி எறும்புபோல், "பாரதியை எப்படி வெளியில் போகச் சொல்வது? நம்மிடம் அனுப்பிய நண்பருக்கு என்ன காரணம் கூறுவது?" என்று யோசித்துக்கொண்டே, வீட்டிற்கு வந்து, "சுவாமி! தாங்கள் வேறு ஜாகை பார்த்துக்கொண்டு போய்விட்டால் தேவலை. நான் ஒதுங்கிப் பிழைப்பவன். சர்க்கார் விரோதம் ஆகாது. எனக்குத் தங்கள் விஷயம் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது" என்று தயங்கிக் கொண்டே கூறினார்.

பாரதியார், சிறு விஷயத்தையும் பெரிதாக எண்ணி மனத்தைத் துன்பப்படுத்திக் கொள்வார். ஒரு விநாடிக்குள் அய்யங்கார் கூறியதைக் கேட்டு மனத்தைச் சித்திரவதைக்குள்ளாக்கினார். புழுவாகத் துடித்தார். சிறிது நேரத்தில் தம்மையே தைரியப்படுத்திக்கொண்டு, "தூ—கோழை! என்னடா அதைரியப் படுகிறாய்?" என்று

துப்புவார். மறுபடியும், "தேசத்தின் விடுதலைக்குப் போராட முனைந்தால், எங்கு சென்றாலும் ஆதரவின்றித் தவிக்கும் நிலைமைதானா?" என்று ஏங்குவார். "மனிதர் நோக, மனிதர் பார்க்கும் வாழ்க்கை" யைப் பற்றி நொந்து கொள்வார்.

கடைசியாக, "சுவாமி! எனக்கு ஊர் புதிது. ஆதலால், இரண்டு நாள் பொறுத்துக் கொள்ளுங்கள். வேறிடம் பார்த்துக் கொள்கிறேன்" என்று பாரதியார் பதில் உரைத்தார். இரண்டு நாட்களும் காற்றாய்ப் பறந்துவிட்டன. அந்த இரண்டு தினங்களையும் எண்ணித் தான் "குயில்" பாட்டில் "நாளொன்று போவதற்கு நான் பட்ட பாடனைத்தும்—தாளம் படுமோ, தறி படுமோ, யார் படுவார்?" என்று பாடினார் போலும்!

எவ்வளவு யோசித்துப் பார்த்தாலும், வழி ஒன்றும் அவருக்குத் தென்படவில்லை. ஊரோ புதியது! நண்பர்களோ கிடையாது! நம்பி வந்த நண்பரும் அதிகாரப் பயத்தினால் கடிந்து பேசத் துணிந்து விட்டார்! பாரதியார் இது வரை தமது ஜீவியத்தில் ஏற்படாத ஒரு புதுதினுசான கஷ்டம் ஏற்பட்டு விட்டது என உள்ளம் துடித்தார். தம்மை விரும்பாதவரிடம் அரை க்ஷணம் கூட அவர் தங்க மாட்டார். மகாராஜாவின் சல்லாபத்தையே உதறித் தள்ளியவரல்லவா?

அவரை மீறி வெஞ்சினம் கரைமீறி யெழுந்தாலும், தம்மை அதிதியாக உபசரித்திருக்கும் அய்யங்காரைக் கோபித்துக் கொள்வது நியாயமன்று என அவர் மனம் சொல்லிற்று. "அவர் என்ன செய்வார்? போலீசாரைக் கண்டு பயந்துவிட்டார்" என்று தமது மனத்தைத் தேற்றிக்கொண்டார்.

பிரிட்டிஷாரின் போலீசார் சும்மாயிராமல், பிரெஞ்சுப் போலீசாரிடமும் சொல்லி, அய்யங்காரை அடிக்கடி

அழைத்து மிரட்டினார்கள். அய்யங்கார், வாயினால் பாரதியாரை ஒன்றும் கூறாவிட்டாலும், அகம் கடுத்ததை முகம் காட்டிற்று. பாரதியாருக்கு நெஞ்சு பொறுக்கவில்லை.

'தமிழ் நாட்டில் "வீர சுதந்திர" ஆவேசத்தைப் பரப்பிய தமக்கு இடமளிக்கச் சுதந்திர உணர்ச்சிகொண்ட ஒருவனையினும் கண்ணில் படவில்லையே என்று தவித்தார். 'இந்தியா'ப் பத்திரிகையின் புதுவைச் சந்தாதாரர்களின் விலாசத்தைக் குறித்து வராமல் போனேமே என்று வருந்தப்பட்டார். ஒரு வார்த்தையும் பேசாமல், நித்திரையும் செய்யாமல், தெருத் திண்ணையில் உட்கார்ந்து, "தெய்வமே! ஒரு வழியுமில்லையா?" என்று தியானித்தார். வழியும் கிடைத்தது.

## எங்கிருந்தோ வந்தான் 'குவளை'

ஏங்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்கள்—நெருக்கடியான சந்தர்ப்பங்கள்—ஏற்பட்டதுண்டு. அந்தச் சமயங்களில், நாங்கள் நம்பிக்கையெல்லாம் இழந்த பிறகுங்கூட, யாராவது ஒரு நண்பர் சமய சஞ்சீவியாகத் தோன்றி ஒத்தாசை செய்வது சாதாரணமாக நடந்து வந்தது. அம்மாதிரியே, பாரதியார் மேற்கண்ட விதம் பெரிய சங்கடத்துக்குள்ளாகியிருந்த போது, அகஸ்மாத்தாகக் 'குவளை' கிருஷ்ணமாச்சாரியார் எங்கிருந்தோ வந்து தோன்றினர். பாரதியாருடன் கலந்து பேசி நிலைமையைத் தெரிந்து கொண்டார். மற்றுமொரு நண்பரான சுந்தரேசய்யரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வேறு வீட்டிற்கு பாரதியார் குடி புக சுந்தரேசய்யரால் ஏற்பாடு செய்யப்பட்டது. இருள் நீங்கிற்று; ஒளி பிரகாசித்தது.

இந்தச் சம்பவத்தைத்தான் "கண்ணன் என் சேவகன்" என்னும் பாட்டில், 'எங்கிருந்தோ வந்தான், இடைச் சாதி நான் என்றான்' என்று சந்தோஷமாகக் கூறியிருக்

இருர் பாரதியார். அளவளாவ நண்பர் இல்லாததால் வருந்திக் கொண்டிருந்த பாரதியாருக்குச் சென்னையி லிருந்த நண்பர் ஸ்ரீநிவாசாச்சாரியாரும் வந்து சேர்ந்தார். அவர், புதுச்சேரியில் வசித்தவராகையால், பலரை அறி முகப்படுத்தி வைத்தார். எப்படியோ, தனியாகச் சமா ளிக்கத் தைரியமுண்டாகி விட்டது. புதுவையிலேயே போலீஸ் தொந்தரவின்றி நிம்மதியாக இருந்து விடலா மென்று நம்பினர். அந்த ஊரின் கடற்கரையும், மடுவும், தோட்டங்களும், வீதிகளும், ஒதுப்புறமான சோலைகளும் அவர் மனத்தைக் கவர்ந்தன.

புதுச்சேரி சேர்ந்த ஒரு மாதத்திற்கெல்லாம், 'இந் தியா'ப் பத்திரிகையும் புதுவை வந்து, அவரது அஞ்ஞாத வாசத்தைத் தானும் அனுபவித்தது. ஆனால், இந்த நண் பர் இருவருக்கும் அதற்குள்ளாக ஆயிரம் யோசனைகள் வந்து உதித்தன. 'இந்தியா'வின் சொந்தக்காரரான என். திருமலாச்சாரியாரையும் சேர்த்துக் கொண்டு ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டு மென்று தீர்மானித்தார்கள். அதனல், பத்திரிகையைச் செம்மையாக நடத்தி வந்த எம். பி. திருமலாச்சாரி யாரைப் புதுவையிலேயே பத்திரிகையை நடத்தும்படி கூறிவிட்டு, தாங்கள் மூவரும் ஐரோப்பா செல்ல வேண்டி யதற்கான ஆயத்தங்களைச் செய்யலானர்கள். பணத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஏனெனில், பாரதியாரின் மேற்படி நண்பர்கள் இருவரும் செலவழிக்கக் கூடியவர் களே. இன்னொரு நண்பரும் தைரியம் கூறினர்.

ஆனல், எதிர்பாராத விதமாக இந்தத் திருமூர்த்தி களின் யாத்திரை தடங்கல் பட்டது. பத்திரிகை நடத்த வேண்டுமென்று பொறுப்பிட்டிருந்த எம். பி. திருமலாச் சாரியாரே ஐரோப்பா செல்வதற்கு ஆயத்தமாய் விட் டார்; புறப்பட்டும் சென்று விட்டார்.

புதுவையிலோ, ஒரு பத்திரிகை ஆரம்பித்து நடத்துவதற்கு அனேகச் சங்கடங்கள். அவ்வூர்ச் சட்டப்படி, சர்க்காருக்கு ஜாமீனாக பிரஞ்சு இந்தியாவில் பிறந்த ஒருவர் வேண்டும். வில்லியனூர் வாசியான ஸ்ரீநிவாசாச்சாரியாரின் நண்பர் லக்ஷ்மீநாராயணய்யர் என்பவர் அந்தப் பொறுப்பை ஏற்றார். திருமலாச்சாரியார் பத்திரிகாலயமாக ஒரு வீட்டைக் குடிக்கூலிக்கு அமர்த்தி, சென்னை சென்று, அச்சுச் சாமான்களையும், உடனிருந்து நடத்த சங்கரநாராயணய்யர் என்பவரையும் அனுப்பி, சிறிது காலத்திற்கெல்லாம் தாமும் வந்து கலந்து கொண்டார். இந்த ஏற்பாடெல்லாம் நடந்தபொழுது, நான் கடையத்தில் என் தந்தை வீட்டிலே இருந்து வந்தேன்.

பூரண கர்ப்பிணியானதால், என்னைத் தனியே விட்டு விட்டுத் தாம் ஐரோப்பா யாத்திரை செல்வதிலும் பாரதியாருக்கு அவ்வளவு திருப்தியில்லை.

‘ இந்தியா ’ வெளிவர ஆரம்பித்ததும், பாரதியாருக்கும் சற்று நிம்மதியாயிருக்க முடிந்தது. எனக்குச் செலவுக்குச் சற்றுத் தாராளமாகப் பணம் அனுப்பியும் வந்தார். அடிக்கடி, மனத்தைக் கலங்க விடாமல் தைரியமாயிருக்கும்படி கடிதம் எழுதுவார்.

எனக்குப் பெண் குழந்தை பிறந்தது. அச் சமயம் காளிதாசன் எழுதிய ‘ சாகுந்தலம் ’ என்னும் சமஸ்கிருத நாடகத்தைப் பாரதியார் மிகவும் ஆர்வத்தோடு வாசித்து வந்தார். எனவே, பெண் குழந்தை பிறந்த விஷயம் தெரிந்ததும், அக் குழந்தைக்குச் ‘ சகுந்தலா ’ என்று பெயர் வைக்கும்படி கடிதம் எழுதியிருந்தார். குழந்தை பிறந்த ஆறுமாதத்திற் கெல்லாம் நானும் புதுவை வந்து சேர்ந்தேன்.

ARCHIVES LIBRARY
No. 108109

## பாரதியும் சிஷ்யர்களும்

வீட்டில் சிஷ்யகோடிகள் சுமார் 35 பேர் இருந்தார்கள். நிரமிக்க இளைஞர்களான் சங்கர கிருஷ்ணன், பாலு, தோத்தாததிரி, ஹரிஹர சர்மா முதலியவர்கள். ஒவ்வொருவரும் விசித்திரமான தனிக்குணமுடையவர். அவர்களுடைய சமையல், சாப்பாடு எல்லாம் வெகு விசித்திரமாகவே யிருக்கும்.

சங்கரகிருஷ்ணன் கடைய நல்லூரை அடுத்த கிருஷ்ணபுரம் கிராமம்; நல்ல வைதீகக் குடும்பத்தில் பிறந்தவர். கட்டுமஸ்தான சரீரம். தினம் தண்டால், பஸ்கி முதலியன செய்துவிட்டு, ஒரு படி ஊறவைத்த பச்சைக் கடலையையும் சாப்பிடுவார். பாரத மாதாவின் பணிவிடையில் ஏற்படுங் கஷ்டங்களைத் திருப்தியோடு அனுபவிப்பதில் உள்ளன்பு கொண்டார். "சிறைவாசம் ஏற்பட்டால், கொடிய தண்டனைகளை அனுபவித்து—பட்டினியிருந்து—களி தின்னவேண்டும்; அதற்காக, இப்போது முதலே சரீரத்தைப் பயிற்சி பண்ணவேண்டும்" என்று தினம் கேப்பைக் களி கிண்டிச் சாப்பிடுவார். பின்பு, அவர் எதிர் பார்த்தபடியே, கலெக்டர் ஆஷ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டுக் கொடுமையான சிறைவாசத்திற்கு ஆளானர்.

பால்ய வயதினளாகிய மனைவியையும், தாய் தந்தை, உற்றாரையும் தவிக்கவிட்டு, சிறை சென்று ஆறேழு வருஷம் அல்லலுற்று, திரும்ப வெளியில் வந்து சிறிது காலத்தில் மரணமடைந்தார். உத்தமத் தியாகி. புதுச்சேரிக்கு அருகிலுள்ள சிறு கிராமங்களில் ஹரிஜனங்களுக்குக் கல்வி பயிற்றுவதற்காகப் பாரதியார் தம் சிஷ்யர்களை அனுப்புவார். அவர்களில் முக்கியமானவர் சங்கரகிருஷ்ணன்.

பாலு, காவேரி தீர வாசி. என் தமையனருக்கும் அவருக்கும் தினமும் திருச்சி திருநெல்வேலி ஜில்லாக்கள் சம்பந்தமாகச் சர்ச்சைகள் நடக்கும். சில சமயங்களில், சம்பாஷணை கொஞ்சம் பலமாகக் கூட, கடுமையான வார்த்தைகளில், நடக்கும். பாலு, நல்ல கட்டுமஸ்தான சரீர முடையவர். அவர், தாம்பிரபரணி நதியை நிந்திப்பார்; காவேரியைப் புகழ்வார். ஒரு நாள், இருவரும் வாதாடும் போது, பாலுவின் கால்களைத் திடீரென்று இழுத்து உயரத் தூக்கி விட்டார். பாலு தடாலென்று விழுந்தார். உடனே பாரதியார், "அடே காவேரி தீரத்தானைத் தாமபிரபரணி யான் அடித்து விட்டான். அதன் பலன் வெண்கலப்பானை உடைந்தாற்போல் மண்டை உடைபட்டதுதான்" என்றார்.

ஹரிஹர சர்மா, சிறுவயது முதலே தியாக வாழ்க்கையில் ஈடுபட்டவர். அவரைக் கைத்தொழில் முதலியன கற்று வரும்படியாகப் பரோடாவிற்கு அனுப்பினார்கள். அங்கே சென்றவர், அப்படியே ரங்கூன் சென்று, மகாத்மா காந்தியின் சபர்மதி ஆசிரமத்தில் ஏழெட்டு வருஷங்கள் தங்கி, மகாத்மாவின் அன்பையும் ஆசியையும் பெற்று, ஹிந்திப் பிரசாரம் செய்வதற்காக மயிலாப்பூரில் தங்கி வந்தார். இடையில் அனேக மாறுதல்கள் ஏற்பட்டு, காலச்சக்கரம் தன் இஷ்டப்படியே சுழன்றதால், பரோடா சென்ற நோக்கம் அவ்வளவாகக் கைகூடவில்லை. ஆனல், அவரை உத்தம சத்தியாக்கிரகியாக்கப் பாரதியாரே காரணமாக ஏற்பட்டார்.

தோத்தாத்திரி, குவளைக்கண்ணர், இருவரும் ஏறக்குறைய ஒரேமாதிரியானவர்கள். பாரதியாருக்கு, "விஷயம் எதுவானலும், சொல்லும் முன்பு நடத்தவேண்டும். வெளியில் செல்லும் காரியமானல், ஜயத்தோடு முடித்து வரவேண்டும். என்ன துயரமான விஷயமானலும், முக மலர்ச்சியோடு இருக்க வேண்டும்" என்பது கொள்கை. நண்பர்கள் இருவரும் பாரதியாரை அளவுக்கு மிஞ்சிச்

சோதிப்பார்கள். "தோத்தாத்திரி, கடைக்குச் சென்று வெற்றிலை பாக்கு வாங்கிவா" என்பார் பாரதியார். உடனே, "இல்லாவிட்டால்?" என்பார் நண்பர். "இல்லா விட்டால், அடுத்த கடைக்குப் போ" என்பார் பாரதியார். "அந்தக் கடையும் பூட்டியிருந்தாலோ?" என்று பதில் வரும். "பெரிய கடைத்தெருவுக்குப் போய் வா" என்பார். "இந்த வெயிலில், என்னால் அவ்வளவு தூரம் போக முடியாதே" என்று நண்பர் பதில் சொன்னதும், "அட, அபஜயமே! எதற்கெடுத்தாலும் இல்லையென்ற ஜபந்தானா? வெற்றிலையே இன்று போடுவதில்லை" என்று பாரதியார் தீர்மானித்துக் கொள்வார்.

இவ்வளவு பேச்சும் ஆனதற்குப் பிறகே நண்பர் தோத்தாத்திரி கடைக்குச் செல்லுவார்.

குவளைக்கண்ணர் பாரதியாருக்கு எல்லா விஷயங்களிலும் நேர்மாறானவர். அவர் அன்பின் மிகுதியால் செய்த தொல்லைகள் கணக்கிலடங்காதவை. ஓயாமல், பாஞ்சாலி சபதமோ, அல்லது நொண்டிச்சிந்தில் அமைக்கப்பட்ட பாடல் ஏதேனுமொன்றோ, காலை மூன்று மணிக்கு மனப்பாடம் பண்ண ஆரம்பித்தால், பொறுமையில் மிக்க தருமபுத்திரருக்குக் கூடக்கோபம் வரும்; அவ்வளவு உரக்கவும், கர்ணகடூரமான சுருதியிலும் பாடுவார்; ஓயவே மாட்டார். பாரதியாரைப் பிரியவே மாட்டார். அனாவசியமான கேள்வி கேட்பதில் குவளையை மிஞ்சினவர் கிடைப்பது அரிது. அனேக நாட்களில், சாப்பாட்டு வேளைக்கு வந்து, எனக்குக்கூடச் சாதம் இல்லாமல் செய்து விடுவது அவரது சுபாவம். தமது மிதமிஞ்சிய இம்சை என்னும் கோலால் பாரதியாருக்குப் பொறுமை என்னும் மந்திரத்தை உபதேசித்தார்.

நெல்லையப்ப பிள்ளை, சிவக்கொழுந்து நாயக்கர், வாத்தியார் சுப்பிரமணிய அய்யர், ஸ்ரீநிவாசாச்சாரியார்,

சங்கர செட்டியார், ஆறுமுகம் செட்டியார், முருகேசம் பிள்ளை; குப்புசாமி அய்யர் மாப்பிள்ளை அருணசல அய்யர் முதலிய, நடுவயதினரும், தீர இளைஞருமான, சுமார் ஐம் பது பேர்கள் பாரதியாருக்கு நண்பர்கள்.

வேணுகோபால், தேவசிகாமணி, அவர்களுடைய தாய் அம்மாக்கண்ணு அம்மாள், கோவிந்தன் என்னும் நால்வரும், பாரதியார் புலிப்பால் கொண்டுவா என்று உத்தரவிட்டாலும் கூட உடனே கொண்டு வரக்கூடிய வர்கள்.

'இந்தியா' சிறிது காலத்திற்கெல்லாம் அரசாங்கத் தாரால் நிறுத்தப்பட்டது. 'கர்மயோகி' என்ற பத்தி ரிகை ஆரம்பமாகி இரண்டு வருஷம் நடந்தது. அதுவும், தன்னால் இயன்ற அளவு தேசசேவை செய்தது. பின்பு, அதற்கும் முடிவு ஏற்பட்டது. 'தருமம்' என்றொரு பத்தி ரிகை உதயமானது. நாகசாமி, வ. ராமசாமி அய்யங்கார், இன்னும் சிலர் சேர்ந்து நடத்தினர்கள்.

எங்கள் சிஷ்யகோடிகளின் உறவினர்கள், கவலை யோடு புதுவை வந்து, தங்கள் பையன்களை ஊருக்குவந்து விடும்படியும், சுதேசியத்தில் பற்றை விட்டுவிடும்படியும் வேண்டுவார்கள். ஆனல், தேசாபிமானம் என்பது மனத் தில் ஏற்பட்டபின் அதை யாராலும் நீக்க முடியாதல் லவா? இளைஞர்கள் மறுத்துவிட்டனர்; புதுவையிலேயே தங்கிவிட்டனர். வ. வெ. சு. அய்யரும் வந்து சேர்ந்தார். அரவிந்தரும் வந்தார்.

பின்பு, பாரதியாரின் வாழ்க்கை மலர் மலர்ந்து மணம் பரப்ப ஆரம்பித்துவிட்டது. அரவிந்தர் சில தனவந்தர் களான நண்பர்கள் முயற்சியினல், ஆங்கிலேயர் வசிக்கும் தெருவில் ஒரு வீட்டைக் குடிக்கூலிக்கு அமர்த்திக் கொண்டு, அங்கே வசித்து வந்தார். இப்போது, அதுவே பல வீடுகளாக ஆகி மனச்சாந்திக்கு இருப்பிடமான

ஆசிரமமாகத் திகழ்கிறது. பலர் அதில் சேர்ந்து, ஆத்மார்த்தப் பசியைத் தணித்துக் கொள்கிறார்கள். அரவிந்தர் அனேக நூல்கள் எழுதினார். பாரதியார், தினந்தோறும் சாப்பாடு இல்லாமற் போனாலும் கூடப் பொறுப்பார்; ஆனால், அரவிந்தரைக் காணாமல் இருக்கமாட்டார். நாளடைவில், அரவிந்தர் வீட்டில் வங்காளிகளும் தமிழர்களுமாக இருபதுபேர் வரையில் சேர்ந்துவிட்டனர்.

பிரெஞ்சு அறிஞர் ரிஷார் என்பவர் தம் மனைவியாரோடு அரவிந்தர் தரிசனத்திற்குப் புதுவை வந்தார். 'நற்றுமரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்,' வேதங்கள், பாஷ்யங்கள், உபநிஷத்துக்கள் முதலியவைகளை ஸ்ரீ அய்யர், பாரதியார், ஸ்ரீநிவாசாச்சாரியார், அரவிந்தர் முதலியவர்கள் ஆராய்ந்து, முற்றுமுணர்ந்து, எல்லோருடனும் சமதிருஷ்டியோடு வாழலாயினர்.

ஸ்ரீமதி ரிஷார், பாரதியார்பால் அன்பு கொண்டவர். பாரதியாரின் முகப்பொலிவையும், தலைப்பாகையையும் புகழ்ந்து கொண்டாடி, ரிஷாரையும் அதுபோல உடை அணிவிப்பார். மேனாட்டில் நண்பர்கள் கை குலுக்குவது அநாகரிகம் என்று, கையெடுத்துக் கும்பிடும் பழக்கத்தை அவர் மேற்கொண்டார்.

எங்களிடம் கையில் தம்பிடிகூட இல்லாமல் இருந்த சமயமும் உண்டு. ஆனால், மனமோ நிறைந்த திருப்தியோடு இருக்கும். இவ்விதமாக, தண்டகாவனம் ரிஷிகளால் நிறைந்ததுபோல், புதுவை சுதேசிகளால் நிறைந்திருந்தது.

## ஆஷ் கொலை

தமிழ் நாட்டில் திடீரென ஒரு கிளர்ச்சி எற்பட்டது. அதாவது, திருநெல்வேலி ஜில்லா கலெக்டராக இருந்த ஆஷ் என்பவரின் துர்ப்பாக்கிய மரணம் காரணமாக, திருநெல்வேலி ஜில்லா முழுவதும் கஷ்டத்திற்காளாகியது.

ஓர் இளைஞர் ஆய்ந்தோய்ந்து பாராமல் செய்த பிழை யானது, அனேக சாதுக்களான கிராமவாசிகளையும், நல் லோரையும், பொதுவாகக் 'கிராப்பு'த் தலையுள்ள இளை ஞர்களையும், மீளமுடியாத தண்டனைக்கு உள்ளாக்கியது.

சும்மா இருக்கும்போதே எங்கள் வீட்டுக்கெதிரில் பத்து சி. ஐ. டி. இருப்பார்கள். அப்பொது, மும்மடங்கு அதிகமானார்கள். அவர்கள் செய்த தொல்லைகளும் அளவு கடந்தன. என்றால் என் பிறந்த வீட்டார் அனுபவித்த துக்கம் கணக்கில் அடங்காது.

கலெக்டர் கொலை செய்யப்பட்ட சமயம் கடை யத்திலிருந்த நான், எழெட்டுத் தினங்களுக்குப் பிறகு, புதுச்சேரிக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

தமிழ் நாட்டில், எங்கே பார்த்தாலும், ஒரே அழு கைக் குரல்தான். சுதேசி இயக்கத்தில் சம்பந்தப்பட்ட பேர்கள், தப்பித்தவறி, 'சுயராஜ்யம்' என்று சொன்னவர் கள, 'வந்தேமாதரம்' என்று தெரிந்தோ தெரியாமலோ வாயசைத்தவர்கள், இவர்கள் மாத்திரமல்ல; இவர்களு டைய உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அறிமுகமான வர்கள், பார்த்தவர்கள், கேட்டவர்கள் எல்லோருமாகச் சர்க்காரின் விருந்தினர் ஆயினர். அதிர்ஷ்டமுள்ள சிலரைத் தவிர, மற்றவர் சர்க்காரின் பயங்கர அடக்கு முறைக்கு ஆளானார்கள் என்றால், எங்கள் குடும்பத்தைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை.

பாரதியார் 'கர்மயோகி' பத்திரிகை நடத்தி வருங் காலத்திலேயே, என் தலைமயனார் ரங்கூன் சென்று, அங்கு ஒரு வேலையில் அமர்ந்து விட்டார். அந்தச் சமயம் ரங்கூனிலிருந்து கடையம் வந்திருந்தார். அவரும் சர்க் காரால் கைது செய்யப்பட்டுப் பாளையங்கோட்டை ஜெயி லில் அடைக்கப்பட்டார். என் தங்கை புருஷர் சிவராம கிருஷ்ணையர் பம்பாயில் மின்சார எஞ்சினியரிங்குப் பயிற்

சிக்கிரக வாசித்துக்கொண்டிருந்தார். அவரையும் கைது செய்தனர்.

என் பிறந்த வீடு விசாலமானது. குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் என் தமையனார் வகித்து நடத்தி வந்தார். திடீரென அவர் கைது செய்யப்பட்டுக் கேள்வி முறையில்லாமல் வைக்கப்பட்டிருந்தது என் தகப்பனாருக்குச் சகிக்க இயலாத கஷ்டத்தை உண்டாக்கி விட்டது. என் தாயார், பாவம், மிகப் பொறுமைசாலி; மகாலட்சுமி போன்ற வடிவம் வாய்ந்தவர்: கடவுளிடம் குன்றாத அன்பு கொண்டவர். குடும்பத்திற்கு முக்கியஸ்தரான தம் குமாரர் சிறை சென்றதும் (சிறை சென்றால், அந்தச் சமயத்தில், தீவாந்தர சிக்ஷைதான்) மனத்தைத் தளரவிடாமல், கடையத்திலிருந்து ஒரு மைல் தூரமுள்ள கல்யாணி அம்மன் கோவிலுக்குச் சென்று, மாதாவிடம் தம் துயரத்தைத் தீர்க்கும் வண்ணம் மன்றாடி அழுது விட்டு, மத்தியானம் இரண்டு மணி வெயிலில் திரும்பி வந்து, சிறிது ஆகாரமுண்டு களைதீர்வது வழக்கம். தகப்பனாரும் கடவுளை நம்புவதைத் தவிர வேறு வழியில்லாததால், சுந்தரகாண்ட பாராயணம் செய்வதும், ஒரே ஒரு வேளை புசிப்பதுமாகக் காலங்கழித்து வந்தார்.

நம்மவரில் ஒரு பெருங்குறை: ஒருவன் கடவுள் சோதனையால் துன்பமுறும் சமயம், உற்றாரும், உறவினரும் அவன் மனத்தை ஏளன மொழிகளாலும், அவமரியாதைகளாலும் புண்படுத்துவதுதான் வழக்கம். அவர் கூறும் வார்த்தைகள் கஷ்டப்படுபவன் மனத்திற்கு ஈட்டியினால் குத்துவது போலவும், எரிகின்ற தீயில் எண்ணெய் வார்ப்பது போலவும் வேதனை செய்யும்.

சமயம் வாய்த்ததென்று, ஊரார் வம்பு பேசலாயினர். "மாப்பிள்ளை புதுச்சேரிக்குப் போயாகிவிட்டது. பிள்ளையும் தீவாந்தரம் போவான். மற்றொரு மாப்பிள்

ளைக்கும் அதே கதிதான் போலும்" என்று என் தகப்பனார் காதில் விழும்படி அவர்கள் பேசிக்கொள்வார்கள்.

## புதுவையில் யதேச்சாதிகாரம்

அரசாங்கத்தாரின் அடக்குமுறை, தமிழ்நாட்டில், இளைஞர்களின் மனத்தைத் திடப்படுத்தி, வைராக்கியத்தையும், சகிப்புத் தன்மையையும் அளித்தது. அதனால், அவர்கள் பின்னால் சாத்விகப் போருக்குத் தயாராக முடிந்தது. கிராமத்து மக்கள் 'சுதேசி' என்றால் நடுங்க ஆரம்பித்தனர். மக்கள் மனம் கிலி பிடித்ததுபோல் ஆகிவிட்டது. என் தாயைக்கூட இரு போலீசார் பின் தொடர்ந்தனர்.

நான் கடையம் சென்றிருந்த காலத்தில், ஒரு நாள், பாரதியார் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, அடுத்த வீட்டு வழியாக உளவுப் போலீசார் உள்ளே நுழைந்து கடிதங்கள், கையெழுத்துப் பிரதிகள் எல்லாவற்றையும் எடுத்துச் சென்றனர். பாரதியார் வெளியிலிருந்து திரும்பி வந்ததும், எல்லாச் சாமான்களும் அலங்கோலமாக வாரி இறைக்கப் பட்டிருப்பதைக் கண்டார். முக்கியமான கடிதங்கள் சில காணப்படவில்லை. ஐயோ! அப்போது அவரது மனம் பட்டபாடு சொல்ல முடியாது. தூண்டில் மீனைப்போல் துடித்தார்! "என்ன அநியாயம்! தனி மனிதனைத் துன்புறுத்துதல் ஒரு பெரிய வெற்றியா? இத்தனை பெரிய சாம்ராஜ்யத்தைக்கட்டி ஆள்பவர்கட்கு இது கேவலம் என்று தெரியாது போய்விட்டதே! பிரஜைகள் ஒருவருக்கொருவர் தொந்தரவு படுத்திக் கொள்ளாமல் பாதுகாக்கவும், திருடர்களைப் பிடித்து அடக்கவுமல்லவா போலீஸ் இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது? ஒரு மனிதன் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, அதுவும் எவ்வித முன்னறிவிப்புமின்றி, அவன் வீட்டில் போலீசார் நுழைவது எத்தனை அநீதமானது! நன்று நன்று!"

என்று கோபச் சிரிப்புச் சிரிப்பார். இத்தனை முயற்சி செய்தும் எங்களுக்கு விரோதமான குறிப்பு ஒன்றும் போலீசாருக்கு அகப்படவில்லை.

மறுபடியும் நான் புதுவை சென்றதும், வாழ்க்கையை நடத்துவதே பெரும் போராட்டமாக ஆகிவிட்டது. ஒருநாள் கடத்துவது ஒரு யுகம்போல்தான். சுதேசிகளை எப்படியேனும் பிரஞ்சு எல்லையினின்றும் பிரிட்டிஷ் எல்லைக்குக் கொண்டுவர வேண்டுமென்று பெருமுயற்சி நடந்தது. அதை எப்படியாவது நடத்திவைக்க வேண்டுமென்று பலர் முன்வந்தனர்.

பந்துக்களிலே கூடச் சிலர் பாரதியாரை வெளிக்கொணரும் பழிச் செயலுக்கு ஆளாயினர். எங்கள் பத்திரிகைகள் யாவும் நிறுத்தப்பட்டுவிட்டன. கடிதங்களை எல்லாம் தணிக்கை செய்து, எங்களுக்குத் தராமலே வைத்துக்கொண்டு விடுவார்கள். மணியார்டர்களுக்குக் கூட அதே கதிதான். கூப்பனிலுள்ள விலாசங்களைப் பார்த்துப் பணம் அனுப்பும் நண்பர்களையும் போய்ப் பயமுறுத்தினர்கள். பலரைக் கைதும் செய்தார்கள். பணம் வருவது தடைப்பட்டது. பந்துக்களிடமிருந்து கடிதந்தான் கிடையாது என்ருல், தொல்லை அதோடு நின்ற பாடில்லை. அவர்கள் எல்லோரையும் சர்க்கார் கண்ணில் விரல் விட்டு ஆட்டினர்கள். 'இம்' என்ருல் சிறைவாசம். 'வந்தே மாதரம்' என்றவர்களின் குடும்பம் 'அரோஹரா!'

## தேர்தல் அமளி

அந்தச் சமயம், புதுவையில் தேர்தல் ஆரம்பமாயிற்று. அக்கிரமங்கள் வரம்பு மீறின. வீட்டை உடைத்து, உட்புகுந்து, ஸ்திரீகளைக் கற்பழிக்கும் கொடூரச் செயல்களைச் செய்தால் கூட, அரசாங்கத்தில் அந்தச் சமயம்

கேள்வி முறையே இராது. குழாய்த் தண்ணீர் வெளியில் சென்று கொண்டுவரவேண்டும். பாவிகள் என்ன செய்து விடுவார்களோ என்ற பயத்துடன்தான் நான் போவேன்.

இந்திராணியும் இந்திரனும் ஸ்வர்க்க லோகத்தில் சூரபத்மாசுரனின் கொடுமையைத் தாளாமல், பூவுலகத்தில் சீகாழியில் வந்து தோட்டம் வைத்துப் புஷ்பங்களைப் பயிரிட்டுப் பகவான் கைலாசபதியை வணங்கிக் கொண்டிருக்கும் சமயம், அவுணர்கள் எப்படியோ அதையறிந்து அங்கும் வரலாயினர். இந்திரன் இந்திராணிக்கு அய்யனாரைக் காவல்வைத்துத் தான்மட்டும் மேருமலைச் சாரலுக்குத் தவம் புரியச் சென்ற தருணத்தில், அஜமுகி என்னும் அரக்கி வந்து இந்திராணியைத் துன்புறுத்தவும், அய்யனாரின் பிரதிநிதியான மஹாகாளர் அவளை அடித்துத் துரத்தினாராம். இந்தக் கதையைக் கந்த புராணத்தில் வாசித்திருக்கிறோம்.

அய்யனாரைப்போல, எனக்குக் கிழவி அம்மாக் கண்ணு காவலாக இருந்தாள், ஒரு நாள் இரவு பாரதியார் வெளியில் சென்றார். செல்லும் சமயத்தில், "அம்மாக் கண்ணு! செல்லம்மா பத்திரம்" என்று தமாஷாகச் சொல்லிச் சென்றார். நான் படுக்கும் அறை, வாசற்புறமுள்ளது. அதன் வாயிற்படியில் தலைவைத்து வெளியே படுத்திருந்தாள் கிழவி.

இரவு பன்னிரண்டு மணிக்குப் பாரதியார் வந்து கதவைத் தட்டினார். கிழவிக்கு நல்ல தூக்கம். அவளை எழுப்புவானேன் என்று நானே கதவைத் திறக்க எழுந்து வந்தேன். திடீரெனக் காலடிச் சப்தம் கேட்டுக் கிழவி, "ஐயோ! யாரோ வந்துவிட்டார்களே, அம்மா!" என்று கூக்குரலிட்டுக் கொண்டு, வாயிலில் இரண்டு கைகளையும் விரித்துக்கொண்டு எனது அறையில் நுழைய வந்த பாரதி

யாரை வரவிடாமல் மறித்தாள். பாரதியார், "நான் தான்" என்று உரக்கக் கத்தின பின்னரே அவள் அவரை உள்ளே போக அனுமதித்தாள். பாரதியார் அப்போது அவளது அன்பின் ஆழத்தை வியந்து புகழ்ந்தார்.

அரசாங்கத்தில் கேள்வி முறையில்லாமல் இருந்தால், ஜனங்கள் பலவிதப் பயங்கர வதந்திகளைக் கிளப்பி விடுவது சகஜம். ஒரு நாள், "சுதேசிகளைப் பிரிட்டிஷ் எல்லைக்குப் பிடித்துப் போய் விட்டார்கள்" என்ற சமாசாரத்தை யாரோ சொன்னார். நாங்கள், அதனை உண்மை என்று நினைத்துக் கதி கலங்கிப்போய், அம்மாக்கண்ணுவை அனுப்பி விசாரித்து வரச் செய்தோம். அவள் வருமுன்பாகவே திருமூர்த்திகளும் ஏககாலத்தில் காட்சி யளிப்பது போல, பாரதியார், அய்யர் ஸ்ரீநிவாசாச்சாரியார், மூவரும் வந்து சேர்ந்தார்கள். விஷயத்தைச் சொன்னதும், இடி இடியென்று நகைத்து, "இதற்கா உங்களுக்கு இவ்வளவு கலக்கம்?" என்று கேட்டார்கள்.—அது அவர்கள் சுபாவம்!

ஸ்ரீநிவாசாச்சாரியார் அனேகமாக எங்கள் வீட்டில் தான் இரவைக் கழிப்பார். அவருடைய உறவினர்களும், யாராவது ஒருவர் மாறி ஒருவர், இருந்து கொண்டே இருப்பார்கள்.

அய்யர், ஆச்சாரி, பாரதியார் மூவரும் சேர்ந்து யோசித்து, "தேர்தல் முடியும் வரை, இரவில், பெண்கள் எல்லோரும் இவ்வூர்ப் பிரமுகரும் சுதேசி அன்பருமான பொன்னு முருகேசம் பிள்ளை அவர்கள் வீட்டிலும், புருஷர்கள் பாபு அரவிந்த கோஷ் வீட்டிலும் படுத்துக்கொள்வது" என்று தீர்மானித்தனர். அவ்விதமே, நடந்து வந்தது. ஏனென்றால், நல்லதோ, கெட்டதோ, எல்லோரும் சேர்ந்து அனுபவிக்க வேண்டுமென்பது நோக்கம். இரவில் இரண்டொரு முறை மூவரும் வந்து, "ஜாக்கிரதையாய் இருங்

கள் !" என்று எச்சரித்துவிட்டுச் செல்வார்கள். நாங்கள் அப்பொழுது தான் சற்றுக் கண்ணயர்ந்திருப்போம். "பாக்கியம் ! எழுந்திரு !" என்று அய்யர் தம் மனைவியை அழைப்பார். உடனே, என்ன ஆபத்தோ என்று எல்லோரும் சுருட்டி வாரிக்கொண்டு எழுந்திருப்போம்; "ஒன்றுமில்லை; பயப்படாதேயுங்கள் !" என்பார்.

"அய்யரே, தூங்குகிறவர்களை எழுப்பி அத்தாளம் இல்லை என்கிறீரே !" என்று பாரதியார் கேலி செய்வார். இப்படியாக, ஒரு நாள் செல்வதற்குள் இத்தனை கஷ்டங்கள். அதிலேயும் பாரதியார் மனம் சலிப்பது இல்லை.

## பயங்கரச் சம்பவமும் தீரச் செயலும்

பாக்கியலக்ஷ்மி அம்மாள் (வ. வெ. சு. அய்யரின் மனைவி) நல்ல தைரியம் வாய்ந்தவர். வீரப் பெண்மணி. பிற்காலத்தில் அவருக்கு ஏற்பட்ட சகிக்கமுடியாத கஷ்டங்களையும் பொறுமையுடன் அனுபவித்து வருவதற்காகவே இயற்கை அவருக்கு அவ்வளவு மனோதிடத்தை அருளியது போலும்.

தேர்தல் சமயம், ஒரு நாள் நள்ளிரவு நேரம். அமாவாசைக்கு முந்தின நாளாதலால், வெளியில் ஒரே மையிருட்டு; அருகில் யாரேனும் நின்றிருந்தால் கூடக் கண்ணுக்குத் தெரியாது.

அப்போது, பாபநாசம் அருவிக்கு இரையான சுபத்ரா (அய்யருடைய அருமைக் குழந்தை) பிறந்து 25 நாட்கள் இருக்கலாம். உதவிக்கு ஒரு வேலைக்காரி மட்டும் இருந்தாள். திடீரென்று வாசலில் ஒரே இரைச்சல் கேட்டது. ஒரு கூட்டத்தார்,—சுமார் 100 பேர்கள் இருக்கலாம்—வரும் சத்தம் கேட்டது. தூளி எழும்பியது. 'கூ கூ' என்று கத்திக்கொண்டு, ஒரு பர்லாங்

தூரும் சாராய நாற்றம் அடிக்க நன்ருகக் குடித்துவிட்டு, அந்த வெறியில் வாய்க்கு வந்த விதம் பிதற்றலாயினர்.

அய்யர் வீட்டுக் கதவையே தட்டினர்; "யாரது?" என்று கர்ஜித்தார் ஸ்ரீமதி.

"அய்யர் எங்கே? கதவைத் திற!" என்று கத்தினுர்கள்.

"அய்யர் இல்லை" என்று பதிலளித்தார் தைரிய லக்ஷ்மி.

"அப்படியானல், மரியாதையோடு கதவைத் திற. இல்லாவிட்டால், உள்ளே வந்துவிடுவோம்" என்றனர் கூட்டத்தார். அந்தச் சமயம் அய்யரும உள்ளேதான் இருந்தார். சதிபதிகளின் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளவேண்டும். யோசிப்பதற்கோ நேரமில்லை. நிலைமையோ நெருக்கடியாய் இருந்தது.

மேலே கூறியபடி, தேர்தல் சமயமாதலால், கேள்வி முறையில்லாத போக்கு. அதைக் காரணமாகக் கொண்டு அநியாயமே நிலைத்து வந்தது. துணிகரமான காரியம் ஏதாவது செய்தால் மாத்திரமே இந்த விபத்திலிருந்து தப்ப முடியும். என்ன செய்வது? வாசற்படிக் கதவைப் பிளக்கிருர்கள் போக்கிரிகள். அய்யர் வீட்டிலிருந்து மூன்ரும் வீடு நண்பர் ஆறுமுகம் செட்டியாரது. ஆனல், அங்கே போவது எப்படி? தவிரக் காலத்திற்குத் தக்கபடி மிகவும் பந்தோபஸ்தாக அனேக பூட்டுகள் போட்டு வைத்திருந்தார் செட்டியார்.

அய்யர் வீட்டு முற்றத்தில் ஒரு மாதுளை மரமுண்டு. அதன் வழியாக மொட்டை மாடியில் ஏறவேண்டும். 25 தினங்கள் கழிந்த பச்சைக் குழந்தை வேறு; ஏணி, நாற்காலி ஒன்றும் அகப்படவில்லை. மனத்தில் பயமும் நடுக்கமும் ஏற்பட்டன.

முன்னால் சிரமப்பட்டுக்கொண்டு அய்யர் மாடியில் ஏறிக் குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டார். ஒரு கால் மாதுளைமரத்திலும், மற்றொரு கால் மாடியிலுமாக வைத்துக்கொண்டு, குழந்தையை மாதுளை மரத்தோடு சேர்த்து ஒரு கரத்தினால் அணைத்துக் கொண்டார். குழந்தையை முட்கள் கிழித்தன. வேஷ்டியைப் பிடித்திழுத்தன கொம்புகள். பராசக்தியை மனத்தில் தியானித்துக் கொண்டு மனைவி ஜிவ்வென்று ஐயரது கரத்தைப் பற்றிக் கொண்டு மாடியில் தாவி ஏறினாள். முற்றத்திலிருந்து மாடி சுமார் பத்தடி உயரம் இருக்கும். இவ்வளவும் மையிருட்டில், உடை பட்ட ஹிருதயத்தோடு செய்வதானால், என்ன பரிதாப நிலை!

இன்னும் இரண்டு மாடிகளைக் கடந்து நண்பர் ஆறுமுகஞ் செட்டியார் வீட்டில் மனைவியை விட்டு விட்டுத் தான் திரும்பித் தமது வீடு வந்து சேர்ந்தார். இதற்குள் எங்களுக்குச் சமாசாரம் எட்டி விட்டது.

'மனத்திற்கு மனமே சாட்சி' என்பதுபோல, அய்யர் துன்பப்படுவது பாரதியாருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. நாங்கள் அப்போது கிருஷ்ண கான சபையில் வாசம் செய்து வரலானோம். ஆனால், இரவு அங்கே தங்குவதில்லை. மத்தியானம் சமையல் செய்து உணவருந்திவிட்டு, இரவுப் போஜனத்தையும் மாலை ஆறு மணிக்கு முடித்துக்கொண்டு, பொன்னு முருகேசம் பிள்ளை வீட்டில் முன் கூறியபடி இரவைக் கழிப்போம். எங்களுக்கென்று தனிவீடு வைத்துக் கொள்ளவில்லை. நான் இல்லாத சமயத்தில் போலீசார் கடிதங்கள் முதலியனவற்றை எடுத்துச் சென்று விடுவதற்கு இதுவே காரணம்.

முருகேசம்பிள்ளை வீடு அய்யர் வீட்டுக்கு இருபது வீட்டுக்கு அப்புறம் இருந்தது. இரண்டும் ஒரே வீதியில்

தான் இருந்தன. பாரதியார் இரவில் தூக்கம் வராமல் வெளி மாடியில் உலாவிக்கொண்டிருந்த சமயம்: ஐயர் வீட்டுக்குச் சமீபத்தில் தேர்தல் கூட்டங்கள் நடைபெற்றன; அவை லமோ துரை கூட்டமாக இருக்கவேண்டும். 'ஸகோ ஸகோ' என்று கத்திக்கொண்டு அக்கூட்டம் செல்வதைப் பார்த்தார் பாரதியார். அவர் மனத்தில் சந்தேகம் தோன்றிற்று. நன்றாகக் காது கொடுத்துக் கேட்டார். கூட்டம் அய்யரது வீட்டைக் கடந்துசெல்லவில்லை யென்று தெரிந்தது. தடபுடலாகக் கீழே இறங்கினார். அங்கிருந்த நண்பர்களான கோவிந்தன், தேவசிகாமணி, வேணுகோபால் என்பவர்களும் வீட்டிலிருந்த வேறு சிப்பந்திகள் பத்துப் பேர்களும் சேர்ந்து அய்யரது வீட்டை நோக்கி வேகமாக நடந்தார்கள்.

புத்தி மருண்ட முரட்டுத் துஷ்டர்கள் நூறு பேர்களை உடல் வன்மையில்லாத பதினைந்து பேர்கள் எதிர்க்கப் புறப்பட்டார்கள்! "அடா, பயல்களா? என்ன இங்கே?" என்று பாரதியார் கோஷ்டி கர்ஜித்தது. யாரோ பல பேர்கள் துரத்திக்கொண்டு வருவதாக நினைத்து, கூட்டத்தார் ஆளுக்கு ஒரு புறமாக விரைந்து ஓடிவிட்டார்கள்.

அதுவரையில் ஆழ்ந்த நித்திரையில் ஈடுபட்டிருந்த சி. ஐ. டி. க்களும், போலீசார்களும் அங்கே வேகமாக வந்தனர். என்ன வெல்லாமோ நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்போகிறவர்கள் போலத் 'தாட்பூட்' செய்து விட்டுச் சென்றார்கள்.

பிறகு, நாங்கள் விசாரித்ததில், புதுவைக்கு அருகிலுள்ள கீரைப்பாளையம் என்னும் ஊரிலிருந்து கைக் கூலி வாங்கிக்கொண்டு, சுதேசிகளைத் துன்புறுத்த வந்த துரோகிகளின் கூட்டமே அது என்று தெரியவந்தது.

அன்றுமுதல், பாக்கியலக்ஷ்மி அம்மாள் இரவில் எங்களோடுதான் இருப்பார். வாசற்புறம் 15 பேர், புறக்கடைப்

புறம் 15 பேர் காவலில் பத்துத் தினங்கள் வரையில் பிள்ளையவர்களின் வீட்டிலேயே நாங்கள் தங்கியிருந்தோம். பிறகு, அவரது வீட்டிற்கு அருகிலுள்ள சிறு வீடொன்றில் கொஞ்ச நாட்களைக் கழித்தோம். கிருஷ்ணகான சபையில்தான் தேர்தல் அமளிக் காலத்தில் அனேக நாட்கள் கழிந்தன வென்று சொல்லவேண்டும்.

## தியாக புத்தி

நாட்டை உத்தாரணம் செய்யும் பெரிய முயற்சியில், தனி மனிதனின் சுக துக்கங்களைப் பற்றிச் சிந்திப்பதற்குக் கூட இடம் இல்லை. "சில வாலிபர்களேனும் தங்கள் சுகத்தை, ஏன், உயிரையே தியாகம் செய்தால்தான் பாரத நாட்டை உயிர்ப்பிக்கலாம்" என்று பாரதியார் உறுதியாகத் தீர்மானித்தவராதலால், இக் கஷ்டங்கள் அவருக்கு லட்சியம் இல்லாமல் இருந்தன.

ஜனங்கள் உள்ளத்தில் விழிப்பை உண்டாக்கி, உணர்வில் கிளர்ச்சியை எழுப்பி, அதனின்றும் ஆவேசப் புயற் காற்று ஏற்படுத்தி, மக்களிடையே சொல்லுவதற்கும் ஆக்குவதற்கும் அரிய செயல்கள் செய்பவர்கள் பராசக்தியின் இன்னருள் பெற்றவர்கள். மேனாட்டினரின் லட்சியம் பேராசையையும், பலங்குறைந்த நாட்டை அடிமைப் படுத்தும் கெட்ட எண்ணத்தையும் அடிப்படையாகக் கொண்டது; நம் நாட்டு லட்சியமோ தியாகத்தையும், சத்தியத்தையும், அஹிம்சையையும் அடிப்படையாகக் கொண்டது.

பாரதியாரின் உள்ளத்தில், நாட்டிற்கு ஒவ்வொருவனும் ஆற்றவேண்டிய கடமையைக் குறித்த போராட்டம் நடைபெற்றது. நாட்டின் அடிமை நிலை ஒரு புறம், குடும்பப் பொறுப்பு ஒரு புறம் அவரைப் பற்றியிழுத்தன. எல்

லாம், அவர் முக்கியமானது என்று எண்ணிய ராஜீயப் பிரச்னையைப் பொறுத்திருந்தன. தவிர, முற்போக்கையும், பாரத நாட்டின் வருங்கால க்ஷேமத்தையும் உத்தேசித்து, அடிக்கடி காலத்திற்குத் தக்கபடி புதிய மாறுதல்களையும், புதிய முறைகளையும் நாம் அனுஷ்டிக்கவேண்டும் என்று அவர் துடிதுடித்தார். அவர் தேச சேவைக்கு எத்தனையோ விக்கினங்கள் ஏற்பட்டன. 'மானம் சிறிதென்றெண்ணி' வாழ்வதைக் காட்டிலும், தமது குலமே அதனால் அழிந்து போனாலும், தாய் நாட்டிற்கு ஆற்ற வேண்டிய கடனை ஆற்றியே தீரவேண்டும் என்று மனத்தில் திட சங்கற்பம் செய்துகொண்டார். கையில் காசு கிடையாது. நண்பர்கள், பந்துக்கள் உதவியும் இல்லை. சர்க்காரோ, 'வந்தே மாதரம்' என்று சொன்னாலே வாய்ப் பூட்டிடும் காலம்! நம் பழம் பெருமைகளை உயர்த்திக் கதை பேசுபவர்களே அதிகம். தேச விடுதலைக்கு ஆன முயற்சி செய்வோர் அக் காலத்தில் மிகக் குறைவு.

"பகவானைத் தரிசிக்கத் தாகம் ஏற்பட்டாலொழிய அவனைக் காண இயலாது. தண்ணீரில் மூழ்கியவனுக்கு, உயிர் வாழச் சுவாசம் எப்படி முக்கியமோ, அதுபோலப் பாரத இளைஞனுக்குச் சுதந்திர தாகம் முக்கியம்" என்று பாரதியார் கருதினார். சாதாரணமாக, ஒரு குடும்பத்தை விட்டு, ஊரைமட்டும் காப்பாற்றுவது கூடக் கடினந்தான். ஒரு தேசத்தையே அடிமை நிலை நீக்கி, உன்னத நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்னும் ஆவல், எல்லா மனிதருக்கும் ஏற்படாது; மஹாசக்தியின் திருவருள் சுரந்தவர்களுக்குத்தான் ஏற்படும். அதனால்தான், "கடவுள் குடிகொள்ளும் உள்ளம் படைத்தவர்", என்று கூறப்பட்டது.

## புதுவையில் பிந்திய நிகழ்ச்சிகள்

பின்பு, சில நாட்கள் கழிந்ததும், பழைய செட்டியார் வீட்டிற்கே குடிபோனோம். எங்கள் வீட்டில் எப்போதும் என் தாய் வீட்டார் நால்வரும், புருஷர் வீட்டார் நால்வரும் இருப்பார்கள். செலவிற்குப் பணத்திற்கு என்ன செய்வது என்று ஒருவரும் கவலைப்படுவது இல்லை. பாரதியாருக்கோ, உறவினர் அயலார் என்னும் வித்தியாசம் இராது. ஆகையால், அவரது இஷ்டப்படி கடற்கரையிலும், மடுக்களிலும் சுற்றிக்கொண் டிருப்பார். இன்னவிதமாகத்தான் குடித்தனம் செய்தோம் என்று இப்போது சொல்ல முடியவில்லை. உள்ளன்பு கொண்ட சில நண்பர்கள், குறிப்பறிந்து நடப்பவர்கள், பாரதியாரிடம் தேவதா விசுவாசம் கொண்டவர்கள், பாதி ராத்திரியில் வந்து கதவைத் தட்டி உள்ளே வந்து தங்களால் இயன்ற அளவு பணம் கொணர்ந்து கொடுத்து விட்டு வணங்கிச் செல்லுவார்கள். பாரதியாரும் அந்த உத்தம நண்பர்கள் செய்த உபகாரத்திற்குப் பிரதியாகத் தாம் இயற்றிய புதிய கவிகளை உண்மையான பாவத்தோடும், தனி உணர்ச்சியோடும் தம் குழந்தைகளோடு பாடிக் காண்பிப்பார். அவர்கள் அவைகளைக் கேட்டு மகிழ்ந்து உள்ளம் பூரித்துப் போவார்கள். இரவு மூன்று மணி வரையில் அளவளாவியிருந்து சி. ஐ. டி. க்குப் பயந்து தலையை முக்காடிட்டுக்கொண்டு போவார்கள் நண்பர்கள்.

இவ்விதம் இரண்டு மூன்று மாதங்கள் கழிந்தன. அந்தச் சமயத்தில் அவரது மன நிலைமையை அவர் இயற்றிய " லக்ஷ்மி ஸ்தோத்திரம் " நன்கு விளக்கும்.

சில சமயம் அரிசி இராது. பாரதியார் மாடியில் பத்துப்பேர்கள் சிஷ்யர்களோடு, " பூணூல் வேண்டுமா?

வேண்டாமா?" என்று வாதம் செய்து கொண்டிருப்பார். 'யாகம்' செய்யும் கருத்து என்ன என்ற சர்ச்சை பலமாக நடக்கும்.

ஹோட்டல் சாப்பாடு சாப்பிட மாட்டார். கையில் 4 அணு இருந்தால் வாழைப்பழம் வாங்கி வந்து எல்லோரும் பசியாறுவது வழக்கம். பால்காரி கடனுகைப் பால் விடுவாள். அந்தப் பாலைக் குடித்துவிட்டுச் சும்மா இருப்போம். இப்படியும் சில நாட்கள் கழிந்ததுண்டு. "அரிசி இல்லை யென்று சொல்லாதே. 'அகரம் இகரம்' என்று சொல்லு" என்று சொல்லுவார். "இல்லை யென்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன்" என்ற வார்த்தை அவரது புண்பட்ட ஹிருதயம் கொதித்துப் புறப்பட்டதாகும்.

சென்னையிலிருந்து வந்த நண்பரொருவர் எங்கள் நிலைமையைக் கண்டு வருந்தி, "சுவாமி! எப்படித் தங்களுக்குச் சாப்பாடு நடக்கிறது? நாலு பக்கமும் போலீஸ் பாரா! அயலிடங்களுக்குக் கடிதப் போக்கு வரத்துக்கூடாது. அன்பின் மிகுதியால் தங்கள் வீட்டிற்கு வரக்கூட நண்பர்களுக்குப் பயம். அப்படித் தப்பித் தவறி வந்து விட்டால், உடனே தண்டனை. பார்த்தவர்களுக்குப் பந்தோபஸ்து. அந்தோ! என்ன கொடுமை!! ஆனல், தாங்களோ அதி உற்சாகத்துடன் காணப்படுவது ஆச்சரியமே!" என்ருர்.

"நான் என் கடமையைச் செய்கிறேன். அதனுல் என் மனம் நிறைந்திருக்கிறது. கீர்த்தியை வைத்துச் சாப்பிடுகிறோம்" என்று பதிலுரைத்தார் பாரதியார்.

ஐரோப்பாவிற்குப் போகலாம் என்ற ஓர் எண்ணம் அவர் மனத்தில் உதித்தது. சர்க்காருக்கு மனுச் செய்து கொண்டதில், அனுமதியும் அதிருஷ்டவசத்தினுல் கிடைத்து விட்டது. நண்பர்கள் சிலருடன் ஜெர்மனிக்குப் புறப்பட ஆயத்தங்கள் நடந்தன. ஆனல், திடீரெனச் சர்க்கார்

தேவதைகளின் மனம் மாறிவிட்டது. 'ஐரோப்பா சென்ருல், ஏதாவது கெடுதல் உண்டாகும்; போவது உசிதமல்ல' என்று தடை உத்தரவு போட்டு விட்டார்கள். தம்மீது இருக்கும் அனுவசியமான வாரண்டை ரத்துச் செய்து விடும்படி சர்க்காருக்கு மனுச்செய்து கொண்டே இருந்தார். மேன்மை தங்கிய சக்கரவர்த்தி அவர்கள் திவ்ய சமூகத்திற்குக் கூடக் கடிதம் எழுதினர். 'கவனிக்கப்படும்' என்று வழக்கம் போல் பதில் வந்ததேயன்றி, பிறகு கிணற்றில் கல் போட்டாற்போலவே முடிந்தது; பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

போலீஸ் சூப்பரிண்டெண்டெண்டு ஜனுப் அப்துல் ரஹீம் என்பவரை எங்களைப் பார்த்து வர அனுப்பினர்கள். பின், ஆங்கிலேயரான போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவரைப் பின் தொடர்ந்தார். கவர்னர் மாளிகையிலிருந்து பாரதியாரைக் கூப்பிட்டு அனுப்பினர். பாரதியார் பேட்டி கண்டார். ஆனல், பலன் தான் இல்லை. பாரதியார் ஆங்கிலத்தில் பேசும் திறமையை அதிகாரி மிகவும் புகழ்ந்தார். இது தான் கண்ட பலன். "லண்டனில் ஆங்கிலம் கற்றுக்கொண்டீர்களா?" என்று கேட்டாராம். "இல்லை; திருநெல்வேலியிலும், காசியிலும் கற்றுக்கொண்ட படிப்புத்தான்" என்று பாரதியார் பதில் உரைத்தாராம்.

"இதுவரை நான் பார்த்த இந்தியர்களில், உயர்ந்த முறையான இங்கிலீஷ்ப் பேச்சை, நீங்கள் பேசித்தான் கேட்டேன்" என்று புகழ்ந்து பேசி, "தங்களைப் பற்றிச் சர்க்காரிடம் சொல்லுகிறேன்" என்று சொல்லிச் சென்ருர். ஆனல் பலன் ஒன்றுமே இல்லை.

இந்தக் கோலாகலத்தில், ஒரு நாள், எங்கள் தாத்தா அப்பாசுவாமி சிவம் தமது பூஜா சாமான்களுடன் வந்து எங்கள் வீட்டில் இறங்கினர். அந்தச் சாமான்கள் ஒரு வண்டி நிறைய இருந்தன. அவரை 'வீர சைவர்' என்ருல்

மிகையாகாது. நாங்கள் இருக்கும் வீடோ 'சர்வ மத சமரசம்' பொருந்தின இடம். பெரியவர் ஐந்தாறு மாதம் சமாளித்துக் கொண்டு அங்கே தங்கி யிருந்தார். பேரனின் கல்வித் திறமையை, அவ்விதம் தங்கியிருந்த காலத்தில் அவர் நன்றாகத் தெரிந்து கொண்டார். ஆசார சீலராக இருப்பினும், அவருக்குப் பாரதியாரிடத்தில் ஒருவகை அன்புண்டாயிற்று. அவர் வெறும் ஆசாரசீலர் மாத்திரமல்ல; பக்தி பரவசம் மேற்கொண்டவர். சுவாமிக்குத் தீபாராதனை நடத்தும் சமயம் அவரும் நடராஜப் பெருமான் பேரில் அனேக பாடல்கள் பாடினார். அவர் ஓர் ஆசுகவி. நிந்தாஸ்துதியாகக் கவிகள் இயற்றுவதில் நிபுணர்.

அவர் இயற்றியவற்றில் ஒரு பாட்டு பின் வருமாறு:

இராகம்—தேவகாந்தாரி

என்ன மோகமடி உனக்கு
என் நடராஜ சாமி மீதினில் (என்ன)

அனுபல்லவி

அன்னமே அரி பிரமதேவனு மறியாத
ஆனந்தக் கூத்தனை அறிய வொருவருண்டோ?
(என்ன)

சரணம்

ஆலகால விஷத்தைப் புசித்தார்
அனங்கனையும் எரித்தாரடி
பாலகனுக்குப் பாற்கடல் கொடுத்தார்
பலபல வேடங் கொண்டாரடி—அவர்
சிலன் மார்க்கண்டனுக்கு
சிரஞ்சீவி கொடுத்தவர்
காலனை யுதைத்தவர்
காலத்தை யுண்டவர்

முடுகு

**கண்ணப்பனுக்குக் காட்சி கொடுத்தவரடி யவர்**
**கண்ணனைப் பெண்ணாக்கிப் புணர்ந்தவரடி யவர்**
**கண்ணொன்று நெற்றியில் தரித்தவரடி யவர்**
**பண்ணாத காரியம் பண்ணுவரவர் மீதில்** (என்ன)

பாரதியார் சிறந்த உழைப்பாளி. நேட்டாலில் தமிழர்களின் நன்மைக்காக உழைக்கும் சங்கம் ஒன்றிற்குப் புதுவையிலிருந்தும் அருகிலுள்ள கிராமங்களிலிருந்தும் பணம் சேகரித்து அனுப்பினார். அதற்காக 'மாதா மணி வாசகம்' என்னும் புஸ்தகம் ஒன்றும் அச்சடிக்கப்பட்டது. புதுவையிலுள்ள சந்நியாசிகள், பெரியோர்கள் முதலானோர் எங்களுடன் நெருங்கிப் பழகினார்கள். ஊராரும் மிக்க அன்புடன் இருந்தார்கள்.

குள்ளச்சாமி, யாழ்ப்பாணத்துச்சாமி, கோவிந்தசாமி என்றவர்கள், பாரதியாரின் பக்குவ நிலையறிந்து, அவருக்கு ஞானோபதேசம் செய்தார்கள். அப்போதுதான் பாரதியார் புதுவையில் பாஞ்சாலி சபதம், ஞானரதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு முதலியவைகளை எழுதினார். பாரதியாருக்குவேண்டியவை நல்லஎழுதுகோல், வெள்ளைக்கடுதாசி, தனிமை. அச்சடிப்பதுபோல் வேகமாக எழுதிக்குவிப்பார். ஒரு நிமிஷமேனும் தொழிலின்றி யிருப்பதை விரும்பார். உடற்பயிற்சி செய்யவேண்டும் என்று அவருக்கு ஆவலுண்டு. சரீரம் இடங்கொடுக்கவில்லை. ஒரு நண்பர் வீட்டில் கத்தி வீச்சுப் பழகல் ஓர் ஆறுமாத காலம் நடைபெற்றது.

## கடவுள் குடி கொள்ளும் உள்ளம்

பிரெஞ்சுப் பாஷையைப் பாரதியார் நன்றாகக் கற்றார். தெலுங்கிலும் பிரேமையுண்டு. தியாகராஜரின் கீர்த்தனைகளை மிக ரசிப்பார். அவருக்குப் பிரியமானவை

நகுமோமு, சக்கனிராஜ, மாருபல்க, ஜெய ஜெய கோகுல பால, முதலியன. அர்த்தத்தைச் சிதைத்து யாரேனும் பாடினால், அளவற்ற கோபமடைவார். தீக்ஷிதர் கீர்த்தனங்களும் பாடம் உண்டு. அவை போன்ற பந்தாவில் சில பாட்டுக்கள் இயற்றினார்.

"புதியதில் ஆசை; நைந்ததில் வெறுப்பு; பேசும் போது கிளிபோலக் கொஞ்சவேண்டும்; கர்ணகடூரமாகப் பேசுவது கூடாது; பேச்சே ஒரு சங்கீதம் போல அமைய வேண்டும்" என்பன பாரதியாரின் தனிப் போக்குகள்.

ஒரு நாள் நாங்கள் சற்றுக் கடுமையாகப் பேசிக் கொண்டிருந்தோம். திடீரென்று வந்து ஹார்மோனியத்தை எல்லாக் கட்டைகளையும் அழுத்திக்கொண்டு சுருதி போட்டார். திடுக்கிட்டுப் பேச்சை நிறுத்தி விட்டுப் பார்க்கையில் சிரித்தார். அவரது செய்கைக்குப் பொருளென்ன என்று கேட்டதில், "உங்களது இனிமையான சம்பாஷணை என் காதுக்கு இவ்விதந்தான் இருந்தது. இனியாவது இவ்விதம் அபஸ்வரமாகப் பேசாதீர்கள்" என்று கூறினார்.

தாயுமானவர் பாடலை அதியற்புதமாக ராகமாலிகையில் பாடுவார். திருவாய்மொழிக்கு அழகான மெட்டுக்கள் போட்டுப் பாடுவார்.

பாரதியார் அபிநயத்திலும், பாவத்திலும், முழு ஹிருதயத்தோடு நடித்துக் களிப்பதிலும், ரசிப்பதிலும் பொழுது போக்குவார். "பக்தியினாலே—இந்தப் பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி!" என்ற பாட்டை ஆவேசத்தோடு பாடும்போது, 'காமப் பிசாசை' என்றதும், காலால் ஓங்கித் தரையில் மிதிப்பார். 'தாமதப் பேயை' எதிரில் நிஜமாகவே வந்து நிற்கிறதென்று கையை ஓங்கி அறைவார். 'தேம்பற் பிசாசை'க் கையினால் திருகுவார். "இங்கு பார்வதி சக்தி விளங்குதல் கண்டதை மோசம்,

செய்யாதே!'' என்று தலையில் அடித்துக் கொள்வார். நான் "என்னடா! தலையிலா பார்வதி சக்தியிருக்கிருள்'' என்று நினைப்பேன். அவரது உள்ளமும் சரீரமும் பராசக்தியோடு எப்போதும் லயித்திருந்தது என்பது எனக்கு எப்படித் தெரியும்?

"தகதீர் ஹமாரா இன்திஜே கைஸே பதல் கயி?''— இது ஒரு ஹிந்தி நாடகப் பாட்டு; அதில் கதா நாயகன் ஒரு ராஜகுமாரனுக இருந்த சமயம், நாடிழந்து, மிகக் கேவல ஸ்திதியில் இருக்கும்போது, "என் தலை விதி எப்படியாய் விட்டது, பார்த்தாயா?'' என்று மனம்நொந்து துயரத்தோடு பிரலாபிக்கும் சோகரசப் பாட்டு. அவர் அந்த பாட்டை, "பாரதி இன்று துயரம் நீங்கி ஜீவன் முக்தனுகி விட்டான்; எப்படி மாறிவிட்டான் பார்த்தாயா?''என்று களிப்புடன் பாடுவார்; "மாறுதல்தானே? எப்படி வேண்டுமானுலும் மாற்றலாமல்லவா?'' என்பார்.

நமது பாரத தேசம் பரதனுல் பரத கண்டம் என்று சிறப்புற்றது. அனேக காலங்களுக்குப் பின்பு, அடிமை வாழ்க்கையின் பலனுய், உயிரற்றுப் போயிருந்த பரத கண்டத்தில், தென்னுட்டிற்குப் பாரதி யென்ற பேர் கொண்ட ஒருவரால் புது யுகம் தோன்றியிருக்கிறது. ராமாவதாரத்தில் கூனிப் போகும்படி செய்த கூனியின் கூனலைக் கிருஷ்ணுவதாரத்தில் கண்ணன் நிமிர்த்தினுன். தமது கவிதா சக்தியினுல், மின்சார சக்திகொண்ட பாக்களினுல், தமிழ் நாட்டின் கூனலைப் பாரதியார் நிமிர்த்தினுர். தமிழரின் முடியைக் 'கோபுரம் போல' நிமிர்ந்த நிலையெய்தும் வண்ணம் ஆக்கியவர் பாரதியார்.

இன்றும், தெய்வ மந்திரச் சொல்லான "வந்தே மாதரம்'' என் காதில் விழுந்ததும், பாரதியாரின் விழிகளும்; அன்பும், வீரமும் நிறைந்த சிவாஜியின் முகம் போன்ற அவரது முகமும்; "இன்னமுதைக் காற்றினிடை

எங்கும் கலந்ததுபோல்'', இடிமுழக்கம் போன்ற குரலில் வீர ரசத்தை அள்ளிவிடும் புதிய விடுதலைப் பாடல்களைச் சிங்கம்போல் கர்ஜிப்பதும்; அகக்கண் முன் தோன்றிச் சிறிது நேரம் ஸ்தம்பித்துவிடச் செய்கின்றன. பட்டினத்தார் ஜனங்களுக்கு அறிவுறுத்துவதற்காகச் சிறிது காலம் குடும்பம் நடத்தியதுபோல் பாரதியாரும் நடத்தினர்.

வற்றாத கலைச் செல்வத்தை அளித்த அந்தப் பராசக்திக்குப் பாரதியார் தன்னை அறியாமலேயே முடி வணங்குவார். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது பாரதியாரின் தனி முறை. அதுவும், சக்தி அளித்த விசேஷத் தெய்வ ஒளிபெற்ற 'தங்கப் பரிசு'. இந்நாளில், தேச சேவை எளிதாக இருக்கலாம். அந்நாளில், அரிகண்டம், யமகண்டம், என்று சொல்லுவார்களே, அதைவிடக் கொடியது. என்றாலும், அந்தப் பராசக்தியின் திவ்ய அருளினாலேதான் பாரதியார் எங்கும் பொங்கும் மங்கள கீர்த்தியைப் பெற்று விளங்கினர் என்பது வெளிப்படை.

## புதுமைப் பெண்

அவர் ஒரு புதுமைப் பித்தர்; அவருடைய நோக்கங்களெல்லாம் உயரிய நோக்கங்கள். சமுத்திரக் கரைக்கு எல்லோரும் செல்வது வழக்கம். பெண்கள் பர்தா வழக்கம் அவருக்குப் பிடிக்காது. ஆனால், பெண்கள் வரம்பு மீறி நாகரிகமென்று சொல்லிக்கொண்டு நடப்பதும் பிடிக்காது. பெண்களை உள்ளே அடக்கி வைக்கக் கூடாது என்பது அவருடைய சித்தாந்தம். வீட்டினுள்ளே பெண்களைப் பூட்டி வைப்பதால் பிரயோசனமில்லை. மனத்தில் களங்கமின்றி ஆண் மக்களோடு பழகவேண்டும். அங்ஙனமே, ஆடவர்களும் ஸ்திரீகளின் மத்தியில் உள்ளத்தில் மாசின்றி உறவாட வேண்டும்.

இப்படி ஜாக்கிரதையுடன் சிறிதுகாலம் நடந்தால், தனியே ஒவ்வொருவர் மனமும் பரிசுத்தமாகி விடும். மூடி மூடி வைப்பதால், புருஷர்களுக்குப் பெண்களைப் பார்ப்பதில் ஆசை அதிகமாகி வரம்பு மீறவும் ஏது உண்டாகிறது.—இத்தகைய கொள்கையை உடையவர் பாரதியார்.

இவ்விதமான ஏற்பாட்டினுல், எங்கள் வீட்டிற்கு யார் வந்தாலும், பெண்கள்தாம் அவர்களை வரவேற்று உபசரித்து, மாடியில் தங்கள் தகப்பனரிடம் அழைத்துச் செல்லவேண்டும். அவர், மூன்ருவது மாடியில் உலாவிக் கொண்டிருப்பார். அவர் மனத்திற்கு நாம் நடப்பது, நினைப்பது முதல் தெரிந்துவிடும். காதும் கண்ணும் மிகக் கூர்மையுடையன.

பெண்கள் யாருக்கும் அஞ்சித் தலையைக் கவிழக் கூடாது. "யாரேனும் விடர்கள் கெட்ட ஹிருதயத்தோடு உன்னை நோக்கினுல், நீ அவனைத் தைரியமாகப் பத்து நிமிஷம் உற்றுப் பார். அவன் வெட்கித் தலை குனிந்து விடுவான். அல்லது, அவன் முகத்தில் திடீரென்று உமிழ்ந்துவிட்டு, அப்பால் செல்" என்று குழந்தைகளுக்கு உபதேசம் செய்வார்.

குழந்தைகளுக்குச் சிறு வயதிலிருந்தே விவாகத்தையும், புருஷனையும் பற்றிச் சொல்லிச் சொல்லி அவர்கள் மனத்தில் ஆசையை வளர்க்கக் கூடாது. அப்படி மாசற்ற மனத்தில் ஆசைக் கனலை மூட்டிவிட்டால், அவர்கள் மனத்தின்படி கணவன் அல்லது மனைவி வாய்க்காவிடில், மனமுடைந்து வாழ்க்கை ஒரு பாலைவனம் என்று தீர்மானித்து விடுவார்களாம்.

"மனத்தில் ஒவ்வொரு யுவதியும் தனக்கு ஒரு சுந்தர மனோகரனைக் கணவனுக எதிர்பார்த்திருந்து, தனது விருப்பத்தில் இடி விழுந்தாற்போல, கோர ரூபமுடைய ஒரு ராக்ஷஸனைக் கணவனுகப் பெற்று, மனத்தில் நோயுண்டாகி,

அந்த அதிர்ச்சி சரீரத்தையும் தாக்க, சிறு வயதிலேயே மரண மடையும்படியான நிலைமைக்கு ஆளாகிறார்கள்'' என்பது அவரது எண்ணம்.

அடிக்கடி அவர் மௌன விரதம் பூண்டு இருப்ப துண்டு. சேர்ந்தாற் போல 15 அல்லது 20 தினம் கூட அவ்விதம் இருப்பார். பாட்டு மட்டும் பாடுவார். மற்றப்படி சம்பாஷணைகள் யாவும் எழுத்து மூலமாகவே நடைபெறும்.

ஒரு நாள், மௌன விரதத்தில் ராக ஆலாபனை வெகு நன்றாக உள்ளமுருகும் வண்ணம் செய்துகொண்டிருந் தார். நாங்கள் யாவரும் அதிலேயே லயித்திருந்தோம். உடனே, எழுதுகோலை எடுத்து ஏதோ எழுத ஆரம்பித் தார். எங்கள் பெரிய பெண் அவரருகில் சென்று உற்று நோக்கினாள். அவள் சற்றுப் பதற்றக்காரி.

'நான் கல்யா —' என்று பாரதியார் எழுதிக்கொண் டிருப்பதைப் பார்த்துவிட்டுக் "கல்யாணமா?'' என்றாள். அவர் சிரித்துவிட்டு, "பொறுமையோடிரு. நான், கல் யாணி சுப்பிரமணிய பாரதி — என்று பேர் கிடைக்கும் வண்ணம் அதியற்புதமாக அந்த ராகத்தைப் பாடி வழக் கப்படுத்திக் கொள்ளப் போகிறேன்'' என்று எழுதி விட்டு, "கல்யாண பந்தம் செய்து கொள்வது மிக எளிது. ஆனால், அதை அறுக்க இருபது யானைகள் வந்தாலும் முடி யாது'' என்று முடித்தார். குழந்தை மனத்தில் அந்தக் 'கல்யாணம்' என்ற எண்ணத்தைப் பதிய விடக்கூடாது என்பதே அவர் நோக்கம்.

## அந்தத் தவலை!

ஒரு நாள், வ. வெ. சு. அய்யர் வீட்டிலிருந்து, பாரதி யாரை உடனே அழைத்து வரும்படி ஆள் வந்தது. என்னவோ ஏதோ என்று திகிலடைந்து, பாரதியார்

அங்கே சென்றார். அய்யர் சாந்தமான புன்னகையுடன் வரவேற்றுப் பின்கட்டிற்கு அழைத்துச் சென்றார்.

"அய்யரே! விஷயத்தை முதலில் சொல்லும்" என்று பாரதியார் துரிதப்படுத்தினார். "வாருங்கள், சுவாமி! பொறுத்தவர் பூமியாள்வார்; அவசரப்படாதீர்கள். விரோதிகள் எந்தச் சமயத்திலும் நமது கழுத்திற்குக் கயிறு மாட்டத் தயாராயிருக்கிறார்கள் என்று தெரிகிறது" என்று கூறிக்கொண்டே முற்றத்துக்குச் சென்றார். பாரதியும் கூடவே சென்றார்.

அய்யரின் மனைவி பாக்யலக்ஷ்மி, அப்போதுதான் கிணற்றிலிருந்து எடுத்த வாளியில் கால்வாசி ஜலத்தோடும், ஒரு மூடியிட்ட பித்தளைத் தவலையோடும் நின்று கொண்டிருந்தார். அந்தத் தவலை! அதில் என்ன இருக்குமோ, என்ற சந்தேகத்தினால், அவ்வூர்ப் பெரிய மனிதர்கள் நான்குபேரைச் சாட்சியாக அழைத்துவந்து, அதன் மூடியைத்திறந்து பார்த்தனர்.

அதில், ராஜத்துவேஷமான துண்டுப் பிரசுரங்களும், துர்க்கை, மஹிஷாசுரமர்த்தனி முதலிய சக்திப் படங்களும் அடங்கியிருந்தன. அவற்றை எடுத்துக் கொண்டு நேரில் பிரஞ்சு அரசாங்க அதிகாரிகளிடம் சென்று அவை கிடைத்த விவரத்தைச் சொன்னார்கள். அதிகாரிகள் எல்லா விவரங்களையும் கேட்டுவிட்டு, "சரி, இது உங்கள் விரோதிகளின் செய்கைதான். பயப்படாதீர்கள். நாங்கள் கவனித்துக் கொள்ளுகிறோம்" என்று கூறினார்கள். இவ்விஷயம் போலீசாருக்குத் தெரியாது. மறுநாள் பொழுது விடிந்தது. சோதனை செய்வதற்காகப் போலீசார் ஆரவாரமாக அய்யர் வீட்டில் நுழைந்தனர். "மகாராஜர்களாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று அய்யர் கூறினார். போலீசாரை அழைத்து வந்தவர்கள் வேறு ஒன்றையும் வீட்டுக்குள் வைத்துவிடாதபடி ஜாக்கிரதையாகக்

காவல் புரிந்தார் அய்யர். வீட்டில் சந்து பொந்தெல்லாம் போலீசார் தேடியும் ஒன்றும் அகப்படவில்லை. சமைத்து வைத்திருந்த சாம்பார், ரசம் முதலியவற்றில் கூடக் கையைவிட்டுத் துழாவினார்கள்!

கடைசியாகக் "கிணற்றைப் பார்க்கவேண்டாமா?" என்று ஒருவர் கூறவும், அய்யர் மந்தஹாசத்தோடு போலீசாரை நோக்கி, "அய்யா! நாங்களோ சுதேசிகள், கையிலோ் காசு கிடையாது! வெகுநாளாகக் கிணற்றைத் தூர் எடுக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன். காசுச் செலவில்லாமல் அந்த உபகாரமும் செய்தால் இரட்டைச் சந்தோஷம்!" என்றார். அதிக ஆழமில்லாத அந்தக் கிணற்றில் சூரிய வெளிச்சத்தில் நன்றாக உள்ளே கிடக்கும் சாமான்கள் தெரிந்தன. போலீஸார் வெட்கத்தோடு, மேலிருந்தபடி உற்று நோக்கிவிட்டு, "கிணற்றில் இறங்க நம்மால் முடியாது! அய்யரே, சிரமம் கொடுத்ததற்கு மன்னித்துக் கொள்ளும்" என்று கூறிச் சென்றனர்.

தினமும் மாலையில் அய்யரும் அவரது மனைவியும் காற்று வாங்கச் சமுத்திரக் கரைக்குச் சென்று விடுவார்களாகையால், உளவு தெரிந்தவர்கள் அச் சமயம் கூரை ஓட்டு வழியாக ஏறி முற்றத்திலிறங்கி, மேற்படி தவலையைக் கிணற்றுக்குள்ளிறக்கிவிட்டுச் சென்று, போலீசுக்கும் தகவல் கொடுத்தார்கள். மறுநாள், தெய்வச் செயலாக, அய்யரின் மனைவி தண்ணீர் எடுக்க வாளியை விட்டதும், தண்ணீரோடு அந்தத் தவலையும் வந்துவிட்டது. பின்புதான், மேற்கண்ட விஷயங்கள் நடைபெற்றன. தவலையை வைத்தவர்கள் இப்படி நடக்குமென்று கொஞ்சங்கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இந்தவிதமாக, மலைபோல வந்த பல கஷ்டங்கள் கடவுளருளால் பனி போல நீங்கின.

# "பகைவனுக் கருள்வாய்"

புதுவையில், ஒரு நாள், பாரதியும் அவரது நண்பர் ஒருவரும் ரகசியமாக மேன்மாடியிலிருந்த கீற்றுக் கொட்டகையில் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். எப்போதும் இடிபோன்ற குரலில் பேசும் சுபாவமுள்ளவர்கள் அன்று மிகச் சன்னமான குரலில் பேசியது ஆச்சரியத்தை விளைத்தது.

சிறிது நேரத்திற் கெல்லாம், இடைப்பகல் சிற்றுண்டியுண்டு, தேநீர் அருந்தி, தாம்பூலந் தரித்து இருவரும் உல்லாசமாக வெளியேறினார்கள். எங்கே செல்லுகிறார்களென்று சொல்லவில்லை. சாதாரணமாகப் பாபு அரவிந்தர் வீட்டிற்குப் போனால்கூடச் சொல்லிக்கொண்டுதான் போவது வழக்கம். எனக்கோ அவரைக் கேட்பதற்குத் தைரியமில்லை. ஆனால், மனம் மட்டும் சஞ்சல மடைந்தது. இன்னதென்று விவரிக்க முடியாத வகையில் குழம்பித் தத்தளித்தது.

இரவு சமையலைத் தயாரித்து விளக்கேற்றி, தேவியை நமஸ்கரித்துவிட்டு, அவரின் வருகைக்காகக் காத்திருந்தேன். மணியோ 10, 11, 12 ஆய்விட்டது! அவர் வரவில்லை. நிம்மதியின்றி இரவைக் கழித்தேன். மறு நாள் காலையிலுங்கூட அவர் வரவில்லை. உடனே, வேலைக்காரக் கிழவியை அனுப்பி அரவிந்தர், அய்யர், ஸ்ரீநிவாசாச்சாரியார் முதலியவர்களை விசாரித்துவரச் சொன்னேன். நண்பர்களுக்கு இச்செய்தி ஆச்சர்யத்தையும் பயத்தையும் ஒருங்கே யளித்தது.

"ஒருக்கால் அருகிலுள்ள ஊர்களாகிய முத்தியால் பேட்டை, மயிலம், வில்லியனூர் முதலிய சிற்றூர்களுக்குச் சென்றிருக்கலாம்" என்று சமாதானப் படுத்தினார்கள்.

"யாருடன் வெளியில் சென்றார்?" என்று கேட்டனர்.

மேற்படி நண்பரின் பெயரைச் சொன்னதும், திடுக்கிட்டு, "இப்படி ஒரு மனிதருண்டா? இம்மாதிரி குழந்தை உள்ளத்துடன் இருந்தால், விரோதிகள் படுகுழியில் இறக்கிவிடுவார்களே! அந்த மனிதர் பிரிட்டிஷ் சர்க்காரிடம் கைக்கூலி வாங்கிக்கொண்டு, சுதேசிகளைப் பிரஞ்சு எல்லையிலிருந்து ஏமாற்றி அழைத்துச் சென்று, பிரிட்டிஷ் சர்க்காரிடம் பிடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார் என்று எல்லாரும் சொல்லுகிறார்களே! இந்தச் சமயத்தில் அவரை நம்பி, அவர்கூடச் சென்றிருக்கிறாரே! என்ன கெடுதி விளையுமோ, தெரியவில்லையே!" என்று யாவரும் கவலைப்பட்டார்கள்.

எனக்கு அதைக் கேட்டதும் பாதி ஜீவன் போய்விட்டது. என் தகப்பனாரை உடனே வரும்படி தந்தி யனுப்பிவிட்டு, பித்துப் பிடித்தவள் போல் ஏங்கியிருந்தேன். அன்றிரவும் கழிந்து, பொழுதும் விடிந்தது. காலை ரயிலில், என் தகப்பனார் வந்திறங்கினார். விஷயத்தைத் தெரிந்துகொண்டு, என்னைப் பார்த்துப் "பைத்தியக்காரி, இதற்காகவா இவ்வளவு பயந்து தந்தி யனுப்பினாய்? பாரதிக்கு ஒரு கெடுதலும் நேரிடாது. அவனுக்குத் தீங்குவிளைவிப்பது லேசான காரியமல்ல. பயத்தை விடு!" என்று தைரியப்படுத்தினார்.

எல்லா நண்பர்களும், ஐந்து நிமிஷத்திற்கு ஒரு தடவை ஆள் அனுப்பி, "பாரதி வந்துவிட்டாரா?" என்று கவலையோடு விசாரித்தனர். பகல் மணி 11 இருக்கும்; தெருவில் 'பூம் பூம்' என்று மோட்டார் ஹார்ன் சத்தம் கேட்டது. வாயில் வெற்றிலையும், கையில் புஷ்பமாலையும், புதிய வேஷ்டி, கோட்டும் தரித்துக் கொண்டு, மாப்பிள்ளைக் கோலத்தோடு பாரதியும் அவரது வக்கீல் நண்பர் ஒருவருமாக உள்ளே வந்தனர்.

மாமனாரைப் பார்த்து, "மாமா, எப்போ வந்தீர்கள்?" என்று பாரதியார் உபய குசலம் விசாரித்தார். அவர் விஷயங்களைக் கூறவும், வக்கீல் நண்பர், "ஸ்ரீ செல்லம்மாள் பயந்தது சரிதான். அந்த நயவஞ்சகத் துரோகி 'உங்களுக்கிருந்த வாரண்டை எடுத்தாயிற்று; சென்னைக்குப் போகலாம்' என்று கூறியதை இவர் நம்பி மோட்டாரில் ஏறிச் சென்னைக்கு வந்து கொண்டிருந்தார். நான் தற் செயலாகத் திருப்பாதிரிப்புலியூருக்கு அருகில் சந்தித்தேன். எனக்கு அந்த மனிதனுடைய மோசம் ஏற்கெனவே தெரியும். சுதேசிகளுக்கு பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்த வாரண்டை இன்னும் எடுக்கவில்லையென்னும் விஷயமும் எனக்குச் சந்தேகமறத் தெரியுமாதலால், மோட்டாரை நிறுத்தி, இவரை என் நண்பர் வீட்டிற்கு அழைத்துச் செல்வதாகவும், மற்றொரு சமயம் சென்னைக்குப் போய்க் கொள்ளலா மென்றும் கூறினேன். மேற்படி மனிதருக்கு இது சம்மதமில்லாதபடியால், ஏதேதோ சொன்னார். பாரதி என் சொல்லுக்கு இணங்கி விட்டபடியால், வேறு வழியின்றி அவர் சென்றுவிட்டார். பின்பு, இவரை என் நண்பர் வீட்டில் இருக்கும்படி சொல்லி விட்டு, எனக்கு அங்கு சில அவசர வேலையிருந்தபடியால், அதையும் முடித்துக்கொண்டு, இவரையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தேன். நான் மட்டும் இன்று இவரைச் சந்திக்காவிடில், சிறிது நேரத்திற்குள்ளாகப் பிரஞ்சு எல்லையைக்கடந்து, இதற்குள் ஜெயிலில் இருந்திருப்பார்" என்று கூறி முடித்தார். எல்லோரும் அவரைப் புகழ்ந்து கொண்டாடினோம்.

இரண்டு நாளைக்கெல்லாம் ஏமாற்றி அழைத்துச் சென்ற நண்பர் திரும்பி வந்தார். பாரதியார், அவரிடம் கொஞ்சம்கூடத் துவேஷம் பாராட்டாமல், வரவேற்று வார்த்தையாடினார். எனக்குக் கோபம் பொறுக்கமுடிய

வில்லை. முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டிருந்தேன். அதைப் பார்த்துப் பாரதியார்,

புகை நடுவினில் தீயிருப்பதைப்
புவியில் கண்டோமே—நெஞ்சே
பகை நடுவினில் அன்புருவான் நம்
பரமன் வாழ்கின்றான்—நெஞ்சே
தின்னவரும்புலி தன்னையு மன்போடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நெஞ்சே
அன்னை பராசக்தி அவ்வுருவாயினள்
அவளைக் கும்பிடுவாய்—நெஞ்சே
பகைவனுக் கருள்வாய்—நெஞ்சே
பகைவனுக் கருள்வாய்!''

என்று பாடி முடித்தார்.

மேற்படி மனிதர் எழுந்து, பாரதியார் காலில் விழுந்து, "நான் அயோக்கியன்! இன்றுதான் எனக்குப் புத்தி வந்தது. என்னை மன்னிக்கவேண்டும். அம்மணி! தாங்களும் க்ஷமிக்கவேண்டும்," என்று கெஞ்சினார். பாரதியார் அவருக்கு ஆறுதல் மொழிகள் கூறி, அறிவுறுத்தினார்.

பாரதியார் ஓர் ஆத்மஞானி. எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருப்பதை நடைமுறையில் நடத்திக் காட்டினார். பார்ப்பவர்களுக்கு அது 'பித்தன்' செய்கையாகத் தோன்றலாம். ஒரு சமயம் கழுதைக் குட்டி ஒன்றைத் தோள்மேல் தூக்கி முத்தமிட்டார். அப்பொழுது நாங்கள் அறிவீனத்தினால் அதற்காக இரத்தக் கண்ணீர் சிந்தினோம்! இன்று அதே செய்கைக்காக ஆனந்தக் கண்ணீர் சொரிகிறோம்! அவரது பண்பட்ட மனத்தை நினைத்துப் புளகாங்கித மடைகிறோம்!

"வேதம் படித்த அந்தணனிடத்திலும், மாமிசம் தின்னும் புலையனிடத்திலும், பசுவினிடத்திலும், நாயினிடத்திலும், அறிஞர் சமநோக்கு உடையவர்கள்"

என்னும் கீதையின் வாக்கியங்களுக்குப் பாரதியாரை உதாரணமாகக் காட்டலாம். அவர் தத்துவத்தின் மெய்ப்பொருள்! பாரத நாட்டின் ஜோதி! ரிக் வேதம் படிக்கப் படிக்க அவரது மூளையில் உண்மையாகவே அக்னி தேவன்—ருத்ரகுமாரன்—வாயு—முருகன் எல்லாம் தோன்றலாயின. அவரது பாடல்களிலும் ஆவேசமும் தெய்வக்கனலும் ஏற ஆரம்பித்தன. ஆன்ம ஒளியில் மூழ்கியிருப்போர்க்கு அச்சம் ஏது! மானுபிமானம் விட்டு, சித்தத்தைப் பராசக்தியிடம் லயிக்க வைத்து ஏகாந்தமாகத் தவம் செய்வதில் விருப்பம் கொண்டார். தாம் கண்ட சுகாநுபவத்தை உடனே மற்றவர்களுக்கு, "தனிமை கண்டதுண்டு; அதிலே சாரமிருக்குதம்மா" என்று உரைப்பார்.

இப்பேர்ப்பட்ட பரமஞானியை—யோகியை — பித்தனென்று உலகோர் மதித்தனர். ஒரு நாள், என் பெண் தங்கம்மாள் மனம் வருந்தி, "அப்பா! எல்லோரும் உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென்று சொல்லுகிறார்களே!" என்றாள். அவர் சிரித்து, "ரொம்ப சபாஷ்! பித்தன் என்பது சிவபெருமான் நாமமல்லவா? இதற்கேன் வருந்த வேண்டும்?" என்று கூறினார். "நீ பயப்படாதே அம்மா!" என்று,

திருவைப் பணிந்து நிதம்
செம்மைத் தொழில் புரிந்து
வருக வருவதென்றே—கிளியே
மகிழ்வுற் றிருப்போமடி!

என்ற கிளிக்கண்ணிகளை ஹார்மோனியத்தின் எட்டாங் கட்டை சுருதிக்கு மேல் பாட ஆரம்பித்தார்.

# அய்யரும் பாரதியாரும்

ஸ்ரீ வ. வெ. சு. அய்யர் சோகரசமாகக் கதைகள் எழுது வதிலேயே பிரியங் கொண்டவர். "குளத்தங்கரை அரசமரம்" என்ற கதையைப் பாதி எழுதியவுடன் எங் களிடம் படித்துக் காண்பித்தார். மறுநாள், பாரதியார் மட்டும் அவர் வீட்டுக்குப் போயிருந்தார். திரும்ப வீடு வந்ததும், "அப்பா, அய்யர் கதையை எவ்விதம் முடித் திருக்கிறார்?" என்று தங்கம்மாள் கேட்டாள். "கேட் பானேன்? அந்தப் பேதைப் பெண் ருக்மணியைக் குளத் தில் தள்ளியாயிற்று" என்று சிறிது வருத்தத்தோடு சொன் னார். பிற்காலத்தில் அன்பர் அய்யரின் மரணமும் அதே வித மாகவே நேர்ந்ததை எண்ணும்போது, வியப்பும் துக்கமும் உண்டாகின்றன. அய்யருடைய சொந்தக்கதையே ஒரு சோகரசக் கதையாக அல்லவா ஆகிவிட்டது?

மனக் கவலையைப் பாரதியார் "வைத்தியர்களின் கண்ணுக்குக்கூடப் புலப்படாத விஷக் கிருமிகளுக்கு உண்டான சக்தியைக் காட்டிலும் அதிகச் சக்தி படைத் தது" என்று கூறியிருக்கிறார்.

மனத்தின் பலவீனம் உடம்பைத் தாக்குவதால், தேக மும் தளர்ச்சியடைகிறது. வைத்தியர்கள் சரீரத்தின் சில வியாதிகளுக்கு இடமாறுதல் வேண்டு மென்கிறார்கள். மன வியாதிக்கும் ஒரு மாறுதல் அவசியம். மனத் திட மில்லாதவர்கள் அருகிலுள்ள ஆலயங்களுக்குச் சென்றோ, மனோதிடமுள்ளவர்கள் மனத்தினாலேயே பகவானைத் தியானிப்பதிலோ, நினைவை மாற்றினால், அதுவே மன நோய்க்கு மருந்தாகும்.

ஒரு நாள் மாலை, மூன்று மணிக்கு, பாரதியாரை மேலே சொன்ன நோய் பிடிக்க ஆரம்பித்தது. இந்த

நோய் வரும்பொழுது நாம் மற்றவரைச் சிடுசிடுப்பதிலும், எரிந்து விழுவதிலுந்தான் சாதாரணமாய் நமது மனோ நிலையை வெளிக் காண்பிக்கிறோம். ஆனால், பாரதியாரோ, "குழந்தைகளே! எனக்கு உடம்பு சரியில்லை; யார் வந்தாலும் மாடிக்கு வரவிடக்கூடாது. பிரும்மாதிகளானாலும் சரி" என்று உத்தரவிட்டுச் சென்றார்.

ஒரு மணி நேரமாயிற்று. சோதனை போல் வ. வெ. சு. அய்யர் வந்து சேர்ந்தார். அவசர அவசரமாக மாடிப்படி ஏற ஆரம்பித்தார். ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஆக்ஞையினால், சனகாதி முனிவர்களை உள்ளே வரவிட மறுத்த துவார பாலகர்களின் நிலையை நாங்கள் அடைந்தோம். பின், சிறிது தயக்கத்தோடு, "அய்யரே! அப்பாவுக்கு உடம்பு சரியாயில்லை. ஒருவரையும் பார்க்க முடியாதென்று சொல்லியிருக்கிறார்" என்று கூறினாள் தங்கம்மாள். "அப்படியா? என்னைக் கூடவா?" என்று சிறிது வியப்போடு கேட்டார்.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டு நின்றோம்.

அதற்குள் கையில் ஒரு காகிதத்தோடும், உற்சாக மான முகத்தோடும், பாரதியார் வந்து, அய்யரை வரவேற்று, அப்போது இயற்றிய கண்ணன் பாட்டைப் பாடிக் காண்பித்தார்.

தூண்டிற் புழுவினைப்போல்—வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக—எனது
நெஞ்சந் துடித்ததடி.

கனவு கண்டதிலே—ஒரு நாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை—எவனோ
என்னகந் தொட்டு விட்டான்.

உச்சி குளிர்ந்ததடி! சகியே
உடம்பு நேராச்சு
மச்சிலும் வீடுமெல்லாம்—முன்னைப்போல்
மனத்துக் கொத்ததடி.

## சில ஞாபகங்கள்

ஒரு சமயம் நான் பகவத்கீதை, சியாமளா தண்டகம் முதலியவற்றை மனப்பாடஞ் செய்து கொண்டிருந்தேன். எனக்குச் சமஸ்கிருதம் அர்த்தம் தெரியாதாகையால், உச்சரிப்பு அவ்வளவு ஸ்பஷ்டமாக இருக்க நியாயமில்லை. பாரதியார் மாடியிலிருந்து இதைக் கவனித்தார். உடனே கீழே யிறங்கி வந்து, "செல்லம்மா! இதைக் கேள். பகவத் கீதையை சமஸ்கிருதத்தில் பாடஞ் செய்ய வேண்டாம். நான் எழுதிய தமிழ் மொழிபெயர்ப்பு உயர அலமாரியில் இருக்கிறது. அதைப் படித்தால் போதும். பகவானை எந்தப் பாஷையில் வேண்டுமானாலும் தோத்தரிக்கலாம். தெரியாத பாஷையில் அனர்த்தத்தோடு கஷ்டப் பட்டுக் கொண்டு திண்டாட வேண்டாம்" என்றார்.

எனக்கு இவ்விஷயம் ருசிக்கவில்லை. "நன்றாயிருக்கிறது நீங்கள் சொல்வது! அடுத்தகத்து நாட்டுப்பெண் வரலக்ஷ்மி விரதத்துக்குப் பாடினது போலல்லவா இருக்கும்!" என்றேன்.

"அதென்ன விஷயம்?" என்றார் பாரதியார். "மாமியாருக்குச் சம்பிரதாயங்களில் ரொம்ப நம்பிக்கை. அம்மனை அழைக்க, குறைந்தது இரண்டு டஜன் பாட்டுக்களாவது சொன்னால்தான் திருப்தியடைவாள். புதிதாக வந்த மருமகளைப் பாடச் சொன்னாள். அவள் 'அம்பா பரதேவதே! எங்கள் ஆத்துக்கு வாடியம்மா. எனக்குப் பாடத் தெரியாது!' என்று சொல்லி ஹாரத்தி எடுத்தாளாம்! அதைப்போல வெறும் வார்த்தைகளால் பகவானைத்

தோத்தரிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. தவிரவும், பகவத் கீதையாவது தமிழில் இருக்கிறது. சியாமளா தண்டகம் தமிழில் எப்படிச் சொல்வது?'' என்று கேட்டேன்.

"சரி, நான் சொல்லிக் காண்பிக்கிறேன். அதுபோல நீயும் பாடம் பண்ணு'' என்று கூறி, கேதார கௌள ராகத்தில்,

ஜயமாதங்கதனயே! ஜயநீலோத்பலத்யுதே!
ஜயஸங்கீத ரஸிகே!
ஜயலீலா சுகப்ரியே! ஜயஜனனி!

என்று கடல் மடை திறந்தாற்போல் சுலோகத்தைச் சொல்லி அர்த்தமும் உரைத்தார்.

பாட்டு முடியும்வரை 'பாரறியோம் விண்ணறியோம்' என்று தான் கூறவேண்டுமே தவிர வேறு விதத்தில் வர்ணிக்க முடியாது. நாங்கள் யாவரும் மெய்சிலிர்த்துப் புளகாங்கிதமடைந்து, "ஞானமுளைத்துப் படர்ந்ததோ! அதிலே எழுபுட்பச் சுகந்தமோ! மறை நாடகள் வித்தைப் பிரசங்கமோ'' என்று சந்தோஷித்தோம். உண்மையில், அந்த அநுபவத்தைக் கூறவேண்டுமானால், என்னால் முடியாது. பின் வரும் உபமானத்தால் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

அத்தைப் பாட்டி சுப்பம்மாள் மகாத்மா காந்தியின் கிராமபோன் ரிகார்டு-பேச்சின் அர்த்தத்தை நல்ல படித்த மனிதர் ஒருவர்மூலம் கேள்வியுற்றிருந்தாள். தற்செயலாக, ஒருவர் வீட்டில் அந்த ப்ளேட் பேசுவதைக் கேட்டாள். அவளது மனம் மகாத்மாவின் பக்தி நிறைந்த உருக்கமான குரலில் வசியப்பட்டுவிட்டது. இங்கிலீஷ் ஏ. பி. ஸி. டி. கூட அவளுக்குத் தெரியாது. ஆயினும், பிரசங்கம் என்னமோ அவளது மனத்தைக் கரைத்து விட்டது. ஆனால், படித்தவளல்ல. ஆதலால், தன் மனத்திலுள்ளதை மற்றவர்கட்கு விவரிக்கத் தெரியாமல் தவித்தாள்.

அவளது சிநேகிதையான ரங்கம்மாள் எதிர்ப் பட்டாள். அத்தையின் ஆவலை அடக்க முடியவில்லை. "ரங்கம்! காந்தி கிராமபோனில் பேசியிருக்காரே! என்னமாயிருக்கு தெரியுமோ? அவ்வளவும் தத்துவம். அதற்கு மேல் எனக்குச் சொல்லத் தெரியாது. ஒவ்வொரு வார்த்தையும் எவ்வளவு அழுத்தந் திருத்தம்! 'குடம்' 'செம்பு' 'கூஜா' என்றால் நமக்கு எப்படித் தெரிகிறது? அது போல இருக்குடி, அவர் ஸ்வாமியைப் பற்றிச் சொல்லியிருப்பது" என்றாள்! இது வெறும் கற்பனை யல்ல. உண்மையாகவே நடந்த சம்பாஷணைதான்.

ஒரு நாள் பாரதியாரிடம் 50, 60 ரூபாய் இருந்தது. வாசலில் துணி விற்போன் வந்தான். வீட்டில் குழந்தைகள் எல்லோருக்கும் நிறையத் துணிகள் வாங்கிவிட்டுத் தமக்கும் அப்போது புதிய 'மோஸ்த'ரான வெள்ளை 'ஸாடன்' துணியில் கோட்டுக்கும் குல்லாய்க்குமாக ஐந்து கஜம் துணி வாங்கினார்.

பிறகு அவரது நண்பர் சங்கர செட்டியார் வீடு சென்றார். அங்கு அந்தச் சமயம் அவரது தையற்காரன் வந்திருந்தான். "இந்தத் தையற்காரன் நன்றாகத் தைப்பானா, செட்டியார்வாள்?" என்று கேட்டார். "ஓ, மிகவும் கெட்டிக்காரன்" என்றார் செட்டியார்.

செட்டியார் ஒரு 'நைஸ்' பேர்வழி. வீடு பூராவும் பளிங்கினால் இழைத்து, ஐரோப்பியரின் பங்களாவைப் போல், நவீன முறையில் அலங்கரித்து வைத்திருப்பார். பாரதியார் அவரது வீடு சென்றால் வெற்றிலை போட்டுக் கொள்வார். வெற்றிலைக் காம்பைக் கிள்ளிக் கீழே போடுவார். உடனே செட்டியார் தாமே அதைப் பொறுக்கிக் குப்பைத் தொட்டியில் எறிவார். அதைப் பாரதியார் கவனித்திருக்கிறார். ஆகையால், இவ்வளவு நாகரிக மனிதரின் தையற்காரனும் தொழில் வல்லவனாகத்

தான் இருப்பானென்று நினைத்து, அவனை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

அவருக்குப் பிறர் மேல் அவநம்பிக்கைப்படுவது வழக்கமில்லை யாகையால், வாங்கிய துணிகளை யெல்லாம் அப்படியே தையற்காரன் கையில் தூக்கிக் கொடுத்து, "தம்பி! இதில் எங்கள் எல்லோருக்கும் எவ்வளவு தைக்க முடியுமோ, தைத்துவிடு. கோட்டு ரொம்ப நன்ருகத் தைக்க வேண்டும். அதற்குச் சரியான அளவு எடுத்துக் கொள். இவை எல்லாம் தைத்தான பின்பு, தலையில் வைத்துக்கொள்ள ஒரு குல்லாய் தைக்க வேண்டும். அது தலைப்பாகை போலவும் இருக்கக்கூடாது. 'ஹாட்' மாதிரியும் இருக்கக்கூடாது. கிரீடம் மாதிரி, தலையில் வைத்ததுமே முகத்துக்குப் புதுக்களை ஏற்படும் வண்ணம், புதிய முறையில் கண்டு பிடித்துத் தைக்க வேண்டியது. கூலியைப் பற்றிக் கவலையில்லை! நீ என்ன கேட்டாலும் கொடுத்து விடுகிறேன்" என்று கூறினர்.

தையற்காரன் சற்றுப் பயந்த அப்பாவிப் பேர்வழி; வேலையிலும் சாமர்த்திய சாலியல்ல. இவர் சொல்வதற் கெல்லாம் "ஆகட்டும்" என்று தலை யசைத்துவிட்டு, நான்கு நாட்களில் தைத்துக் கொணர்ந்தபின் மற்றச் சொக்காய் களெல்லாம் ஒரு மாதிரியாகப் போட்டுக் கொள்ள முடிந்தன. கோட்டு நிரம்பப் பெரிய அளவிலும், குல்லாய் முகம்மதியர் வைத்துக் கொள்ளும் மாதிரியில் அதிக உயரமுள்ளதாயும் இருந்தன. கிட்டத்தட்டக் கோமாளிக்குல்லாய் என்று சொல்லலாம்.

புதிய கோட்டை எடுத்து அணிந்து குல்லாயையும் தலையில் வைத்துக் கொண்டார். "பிறர் மனம் நோகும் வண்ணம் பேசலாகாது" என்ற கொள்கையுடையவரா தலால் "தம்பி, ரொம்ப நன்ருயிருக்கிறது" என்று கூறி, மும்மடங்கு கூலி கொடுத்து அவனை அனுப்பினர்.

அப்படியே சமுத்திரக் கரைக்குச் சென்று திரும்பிவந்தார். ஜனங்கள் இந்தப் புதிய வேஷத்தைக் கண்டு மிரள மிரள விழித்துப் பார்த்தனர். கோட்டும் குல்லாயும் சுத்தமாய் அவரது மனதுக்குப் பிடிக்கவில்லை.

"ஆனாலும், தையற்காரன் நல்லவன்தான். செட்டியார்களுக்கு எப்போதும் தைத்து வழக்கமுள்ளவனாகையால், நமக்கும் தொந்தி தொப்பை ஏற்பட வேண்டுமென்னும் நல்லெண்ணத்தோடுதான் தைத்திருக்கிறான். ஆனால், எனக்கு இந்தக் கோட்டுக்குச் சரியான தொந்தி இந்த ஜன்மத்தில் ஏற்படப் போவதில்லை" என்று சொல்லிக் கொண்டே, தெருவிற் சென்று கொண்டிருந்த பிச்சைக்காரனைக் கூப்பிட்டு அவை யிரண்டையும் அவன் கையில் கழற்றிக் கொடுத்துவிட்டுத் தனது கறுப்புக் கோட்டையும் சரிகை வேட்டித் தலைப்பாகையையும் அணிந்து சந்தோஷத்தோடு உலாவினார்.

ஒரு சமயம், பாரதியாரின் தாத்தாக்களில் ஒருவரான அப்பாச்சாமி சிவன் புதுவைக்கு வந்திருந்தார். அவர் வீரசைவர். அவரது சிவ பூஜையின் கோலாகலமும் ஆர்ப்பாட்டமும் சொல்லிமுடியா. தினம் ஒரு வீசை புளி போட்டுத் தேய்க்கும்படியான பித்தளைப் பூஜா பாத்திரங்கள். சேகண்டி—மணி—சங்கு—தீபாராதனையின்போது ஒலிப்பது நான்கு தெருக்களுக்கு அப்பாலும் நன்றாய்க் கேட்கும். பெரிய சிவன் கோயில்களில்கூட இத்தனை ஏற்பாடு கிடையா. இருபதுவிதத் தீபாராதனைத் தட்டுகள். பூஜா சிச்ருஷை செய்வதற்கே வீட்டிலுள்ளவர்கள் எல்லோருக்கும் நாள் முழுதும் சரியாயிருக்கும்.

அவர் சாப்பிடும் எல்லாப் பண்டங்களும், உப்பு உள்பட, எல்லாம் நைவேத்தியம் வைக்க வேண்டும். தினம் இரண்டு வேளைப் பூஜை. வரலக்ஷ்மி விரதம், பிள்ளையார் சதுர்த்தி முதலிய பண்டிகைகள் வந்து விட்டால், வீட்டா

ரின் பாடு அதோகதிதான். கொழுக்கட்டை வகையரா வெல்லாம் அவரது நடராஜ சுவாமிக்கு 'ஸ்பெஷ'லாகச் செய்யவேண்டும். பெரியவர் தமிழ் நன்ருய்ப் படித்தவர்; தர்க்க சாஸ்திரத்தில் மகா பண்டிதர். இத்தகைய சிவப் பழமான தாத்தாவிடம் பாரதியார் மிக்க மரியாதையோடு இருப்பார்.

அங்கு வந்திருந்த பாரதியாரின் அய்யங்கார் நண்பர் ஒருவரை (நண்பர் வ. ரா. அவர் நாமம் இட்டுக்கொள்ள வில்லை) "அடே பையா! பூஜைக்கு நாழிகை ஆய்விட்டது; பாத்திரங்களைச் சற்றுத் தேய்த்துக் கொண்டுவா" என்று தாத்தா ஏவினர். பாரதியாருக்கு இதைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது. நண்பர் பேசாமல் இருந்தார். தாத்தாவுக்கு இன்னுரை இன்னது சொல்லவேண்டும் என் பது தெரியாது. திடீரென ஒரு யோசனை தோன்றிற்று.

தாத்தாவைத் தனியாக அழைத்துப்போய், "தாத்தா! அவன் அய்யங்கார்ப் பிள்ளை" என்ருர். உடனே, அவர் அருவருப்போடு, "வைணவனு அவன்!" என்று சொல்லி விட்டு நண்பரிடம் சென்று "எனக்குக் கண்பார்வை அவ் வளவு சரியில்லை. அதனுல்தான் உங்களை அந்த மாதிரி சொல்லிவிட்டேன். மன்னிக்கவேண்டும்" என்ருர். நண் பர் "பரவாயில்லை; அதற்கென்ன?" என்று பதிலளித்தார். பாரதியாருக்கும் கவலை தீர்ந்தது.

"மனத்தைக் குழந்தை மனம் போலே வைத்துக் கொள்ளுங்கள். கபடமின்றியிருங்கள்" என்று பாரதியார் ஓயாமல் உபதேசிப்பார். இதன்படி அவரே நடந்துவந்த தில் சிலசமயம் கஷ்டங்கள் நேரிட்டிருக்கின்றன.

ஒருநாள், ஊதுவர்த்திமுதலிய வாசனைத் திரவியங்கள் வியாபாரம் செய்யும் முகம்மதியர் ஒருவர், எங்கள் வீட் டுக்கு வந்து, "சாம்பிராணி வர்த்தி, வாசனைச் செண்டு வேண்டுமா சுவாமி?" என்ருர். அவரை உள்ளே வர

வழைத்து எல்லாவற்றையும் பார்வையிட்டோம். ஓர் அஞ்சனம் (கண் மை) எடுத்துப் பாரதியாருக்குக் கொடுத்து, "சுவாமி! இதைக் கண்களில் தீட்டிக்கொண்டால், கண்ணுக்குக் குளிர்ச்சி; மிகவும் நல்லது" என்றார். பாரதியாரோ, "வெளுத்ததெல்லாம் பால்" என்று நினைக்கும் சுபாவமுடையவர். அவர் சொல்லியபடியே மையிட்டுக் கொண்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் கண்களில் எரிச்சல் உண்டாயிற்று. தாங்க முடியவில்லை. 'சி. ஐ. டி.'காரர்கள்தான் மயக்கமுண்டாவதற்கு மருந்து கொடுத்துள்ளார்கள் என்றுகூட மனத்தில் ஓர் எண்ணம் தோன்றிற்று. வேறு மார்க்கம் ஒன்றும் இல்லாமல், ஒரு நாட்டு வைத்தியரிடத்தில் சென்று மாற்று வைத்தியம் செய்ததில் சற்றுக் குணம் ஏற்பட்டது.

## புதுவைத் தியாகம்

பாரதியாரது மனம் நாளாக நாளாக யோகம் செய்வதில் ஆவலுற்றது. அவர், வெளி வேஷத்தை வெறுத்தார். மனம் தீவிர வைராக்கியம் கொண்டது; ஆணவக் கட்டை அகற்றியது. அவரது ஜீவாத்மா பரமாத்மாவை நேரில் காண ஆவல் கொண்டு தவித்தது.

பெரும் வெள்ளத்தைப் போன்று பெருக்கெடுத்த கவிதா விலாசத்தால், தமிழ் நாட்டிலே ஒரு புதிய ஜீவனைப் புகுத்தினார் பாரதியார். புதுமை உணர்ச்சியும், இது காறும் காணாத புதிய கவிதாரசமும் அவர் வாக்கில் பொங்கி வழிந்தன.

1914-ம் வருஷமாக இருக்கலாம். 'சுதேசமித்திரன்' காரியாலயத்திலிருந்து பாரதியாருக்குக் கடிதம் வந்தது. அவருடைய கட்டுரைகளை 'மித்திர'னில் பிரசுரிப்பதாகவும் மாதா மாதம் பொருளுதவி செய்வதாகவும் ஏ. ரங்க

சுவாமி அய்யங்கார் அவர்களே வாக்களித்து மன முவந்து எழுதி யிருந்தார். பாரதியாரின் ஹாஸ்யச் சிறு கதைகளும், அறிவை வளர்க்கும் சுவை மிகுந்த கட்டுரை களும் 'மித்திர'னை அலங்கரித்தன. அன்று முதல் 'மித்திர' னுக்கு ஒரு தனி ஒளி ஏற்பட்டு ஜ்வலிக்கத் தொடங்கியது. இன்னிசைப் பாடல்கள் 'மித்திர'னில் வெளியாயின. எங்கள் குடும்பத்திலும் 'லக்ஷ்மி' வாசஞ் செய்ய ஆரம்பித் தாள். தற்காலிகமாக மனதும் நிம்மதியடைந்தது. கடிதப் போக்கு வரத்து முதலிய சிற்சில விஷயங்களில் காருண்ய அரசாங்கத்தார் சௌகரியம் ஏற்படுத்தித் தந்தனர். நண் பர்களுடனும் கட்டுப்பாடுகளுக் கிடையிலுங்கூடச் சற்றுத் தாராளமாகப் பழகிக் காலங் கழிக்க அனுமதிக் கப் பட்டோம்.

'காங்கிரஸ் சரித்திரம்' பாரதியாரால் சுதேசமித்திர னுக்கு எழுதி அனுப்பப் பட்டது. சுமார் ஐம்பது அத்தி யாயங்கள் வெளிவந்தன. காலஞ் சென்ற ஜகதீச சந்திர வசு எழுதிய தாவர சாஸ்திர நூல், 'ஜீவ வாக்கு' என்னும் பெயரால் தமிழில் பாரதியாரால் மொழி பெயர்க்கப் பட்டுப் பிரசுரமாயிற்று. தாகூரின் சிறு கதைகள் ஆங்கி லத்தில் உள்ளவற்றைத் தமிழில் அரங்கேற்றினர். அவற் றைப் பார்வையிட்ட சிலர், "பாரதியாரின் மொழி பெயர்ப்பு முதனூலாகத் தோன்றுகின்றதே யன்றி, மொழி பெயர்ப் பென்று சொல்ல இயலாது" என்றனர்.

அதற்குள்ளாகத் தேசத்தில் எத்தனையோ மாறுதல் கள் உண்டாகிவிட்டன. அன்னிபெஸண்ட் அம்மையாரின் ஹோம்ரூல் இயக்கம், காந்திஜியின் தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரக இயக்க வெற்றி, ஜெர்மனிக்கும் பிரிட்டி ஷாருக்கும் யுத்தம், ஆகியவை நிகழ்ந்தன. தாகூர், ஜகதீச சந்திர வசு, பி. ஸி. ராய் முதலிய அறிஞர்கள் அன்னிய நாட்டாரால் மதிக்கப்பட்டுச் சிறப்படைந்தார்கள்.

நாளாக ஆக, ஜன்மபூமிக்குப் போய் 'ஜீவனம்' செய்யும் காலம் வருமா? என்று ஒவ்வொருவர் மனத்திலும் ஏக்கம் உண்டாயிற்று. மனிதன் எதையும் புறக்கணிக்கலாம்; ஜன்ம பூமியை மறக்க முடியுமா? பிறந்த இடத்தைப் பார்க்க வேண்டுமென்று எல்லோருடைய மனமும் தவித்தது. பாரதியாருக்கும் புதுவை வாழ்க்கையில் சலிப்புண்டாகி விட்டது. "சிறைவாசத்துக்குத்தான் ஏன் அஞ்ச வேண்டும்?" என்ற எண்ணம் அவர் மனத்தில் உதித்தது. கடைசியாக, 'என்ன வந்தாலும் வரட்டும்' என்று துணிந்து 1919-ம் வருஷத்தில், ஒருநாள், புதுவையிலிருந்து புறப்பட்டு, பிரஞ்சு எல்லையைக் கடந்தோம். கடலூரில் போலீசார் கைது செய்ய வந்தார்கள். "என் பேரில் என்ன குற்றம்? எதற்காக வாரண்டு? அதைச் சொல்லிவிட்டுப் பின்பு தான் கைது செய்யவேண்டும்" என்றார் பாரதியார். போலீசார் என்ன பதில் சொல்ல முடியும்? கடைசியில், "மேலதிகாரிகளின் உத்தரவு" என்று சொல்லிக் கைது செய்து சிறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அந்தச் சமயம் என் சகோதரர் இருவர் என்னுடனிருந்தார்கள். "விசாரணையின்போது பார்த்துக்கொள்ளுவோம்" என்று கருதி, நாங்கள் யாவரும் சென்னை சென்று, நண்பரும் பிரபல வக்கீலுமான எஸ். துரைசாமி அய்யர் வீட்டில் வசித்து வந்தோம்.

இருபது நாட்களுக்குப் பின், பாரதியார் "தென்னாட்டில் ஒரு குறிப்பிட்ட ஊரில் வசிக்கலாம்; இஷ்டப்படி சுற்றக்கூடாது; மற்ற ஊர்களுக்குச் சென்றால் கண்காணிப்பு அவசியம்" என்று உத்தரவுபெற்று, விடுதலையடைந்து, சென்னை வந்து சேர்ந்தார்.

## கடைய வாசம்

விடுதலையடைந்து வந்த பாரதியாரைச் சென்னையிலிருந்து கடையத்திற்கு அழைத்துச் சென்றோம். பாரதியார் முன்பு சொன்ன வாக்கு மெய்யாயிற்று, புதுவையிலிருந்து வந்ததினால், அதிகச் சுகமொன்றும் நான் அடையவில்லை. எதிர்பார்த்ததற்கு மாறாகத் தான் பலன் கிடைத்தது.

கடுமையான யோகாப்பியாசத்தினாலும், சகிக்க முடியாத பல கஷ்டங்களாலும், என் கணவரது பொன்னிற மேனி கருகிப், பார்க்கச் சகிக்காமல், எலும்பும் தோலுமாக மாறியது.

'சுதேசமித்திர'னுக்குக் கட்டுரைகளும் பாடல்களும் எழுதியனுப்பிக் கொண்டுதான் இருந்தார். பணமும் ஓரளவு கிடைத்து வந்தது வாஸ்தவமே. ஆனால், அவர் எதிர்பார்த்தபடி, ஒரு 'கலாநிலையம்' ஏற்படுத்தக் கூடிய வாறு, இட உதவியோ, பொருளுதவியோ கிட்டவில்லை. அப்போதுதான் உலக மகாயுத்தமும் முடிவடைந்த சமயம் கேட்பானேன்! புஸ்தகங்கள் அச்சிட்டு வெளியிடுவதற்கான முயற்சிகள் கூடப் பலனளிக்கவில்லை. பொருளாதாரநிலை ஒரு காரணம். மற்றொன்று, 'கலையுணர்ச்சி' நாட்டில் சிறிதளவேனும் இல்லாதது. மூன்றாவது, மக்களைப் பிடித்திருந்த ஆங்கிலக் கல்விமோகம்.

தமிழ் மக்களுக்குப் பாரதியார் சொன்னதெல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதினது போல்தான் ஆயிற்று.

கடையமோ, நாகரிக வாசனையில்லாத ஒரு பிற்போக்கான கிராமம். அவ்விடத்தில் உட்கார்ந்து கொண்டு சமூக முன்னேற்றத்திற்கு ஒருவன் உழைத்தால் அவன் கதி என்னவாகும்? ஆனாலும், கடைய வாசத்தில் பாரதியார் ஆனந்தமடைவதற்குக் காரணங்களுமிருந்தன.

பாரதியார் இயற்கை அன்னையின் தெய்விகத் தோற்றத்தைக் காண ஆவல் கொண்டார். கடையத்தில் அவருக்குப் பிரியமான மலைகளும், ஆறுகளும் உண்டு. பழைய கிராமத்தில், மேற்கோரத்திலுள்ள பட்டர் வீட்டில், நாங்கள் வாசம் செய்தோம். நாலு புறமும் விசாலமான வெளியுண்டு. சுற்றடைப்புச் சுவர் மண்ணினாலானது. புளியமரமும், வேப்பமரமும் உண்டு. ஏழைக் குடியானச் சிறுவர்கள், தினந்தோறும் அதிகாலையில் வந்து, வேப்பம் பழம் பொறுக்கிக் கொண்டும், அடுப்பெரிக்கப் புளிய இலைச் சருகுகள் அரித்துக்கொண்டும் செல்லுவார்கள்.

ஒருநாள், பாரதியார், அவர்களிடம் சென்று, "சிறுவர்களே! எதற்காக வேப்பம் பழம் பொறுக்குகிறீர்கள்!" என்றார். "சாமி, வயிற்றுக்கில்லாததால் வேப்பம் பழத்தைத் தின்கிறோம்" என்றார்கள். அவர்களுடன் தாமும் சேர்ந்து வேப்பங்காயையும், புளியங்காயையும் பறித்துத் தின்றார்.

"பகவானது சிருஷ்டிப் பொருள்கள் யாவும் அமிர்தம் நிறைந்தவை. 'வேப்பங்காய் கசக்கும்' என்று மனத்தில் எண்ணுவதனால்தான் கசக்கிறது. 'அமிர்தம்' என்று நினைத்தால் தித்திக்கிறது" என்று சொல்லி, அன்று முதல் நாவின்பத்தைத் துறந்தார்.

சின்ன வயதில், நெய் சற்று நாற்றமடித்தாலும், அவர் பாத்திரத்தோடு எடுத்துச் சாக்கடையில் ஊற்றி விடுவார். அதிருசியான உணவும், நேர்த்தியான புதிய புதிய ஆடையும் வேண்டுபவரான பாரதியார், மனத்துறவு ஏற்பட்டு, ஹரிஜனச் சிறுவர்களுடன் சேர்ந்து வேப்பங்காய் தின்னவும், இடுப்பில் கட்டும் நாலுமுழ வேட்டி அணியவும் ஆரம்பித்தார்.

கிராமத்திலிருந்து ஆற்றுக்குச் செல்லும் வழியில், பச்சைப் பசேலென்று கண்ணைக் கவரும் எலுமிச்சந்

தோட்டங்களும், குயில் கூவும் மாந்தோப்புக்களும், தான்ய லக்ஷ்மி தாண்டவமாடும் நெல்வயல்களும், பாரதியாரின் கண்களுக்குப் புனிதமான தோற்றம் அளித்தன. ஊருக்கு மேற்கே, எங்கே பார்த்தாலும், ஒரே நீலமலைச் சிகரங்கள். அவைகளிலிருந்து விழும் நீர் வீழ்ச்சிகளும், சல சலவென்று ஓடும் சிற்றாறும் அவருக்குப் பரமானந்தம் அளித்தன.

இரண்டு மைல் தூரத்தில். கல்யாணி அம்மன்கோவில் இருக்கிறது. வீட்டிலிருந்து கொஞ்சத் தூரத்தில், ஆற்றோரத்தில், 'தட்டப்பாறை' என்றொரு கற்பாறை உண்டு. அதில் ஏறிக் காலை மாலைகளில் உலாவுவார். அங்கிருந்து ஒரு மைல் சென்றால் 'வாசகிரி' என்ற மலை இருக்கிறது. மலைமேல் முருகக் கடவுளும், விநாயகரும் கோவில் கொண்டிருக்கிறார்கள்.

கல்யாணி அம்மன் கோவிலுக்குப் பின்புறமும் மலைகளே உள்ளன. அங்கே சுனைகளும், ரிஷீசுவரர்கள் தவம் செய்யும் குகைகளும் உள்ளன. அவைகளுக்கு அருகில் பத்திரகாளி அம்மன் கோயில். அதன் பக்கத்தில் ஒரு தடாகம். 'ஜகத் சித்திரம்' என்ற நூலில் பாரதியார் மேற்படி கோயிலை நன்கு வர்ணித்துள்ளார்.

அதற்கும் மேற்கே, நான்கு மைல் தூரத்தில், சாஸ்தா கோவில்; இடையில் 'சூக்ஷமுடையவர்' என்ற அய்யனாரின் ஆலயம். எப்படிப்பட்ட சஞ்சல மனமுடையவராலும் கூட, அந்த இடங்களுக்குச் சென்றால், மனச் சாந்தி ஏற்படுவது திண்ணம்.

பாரதியாருக்கு இரவைத் தவிர மற்ற நேரமெல்லாம் மேலே சொன்ன இடங்களில்தான் கழியும்.

## புது நண்பர்கள்

ஒரு சமயம், செட்டிமார் நாட்டுக்குப் பாரதியார் சென்றிருந்தார். அவரது அன்பர்களான செட்டிமார் நண்பர்கள், அவரை நன்கு போற்றித் தேவையான பொருளுதவி செய்து, அவருடைய பொன் மொழிகளை எழுத ஒரு மாணிக்கக் கல்லிழைத்த பௌண்டன் பேனவும், ஓர் அழகான வேலைப்பாடமைந்த மரக் கைப் பெட்டியும் காணிக்கை கொடுத்து அனுப்பினார்கள்.

கடையத்தில் அவரது நண்பரான ஸ்ரீநாராயண பிள்ளைக்கு மேற்படி பேனவை பாரதியார் கொடுத்துவிட்டார். 'சபரி', ராமபிரானுக்குப் பழங்களை ருசி பார்த்து வைத்திருந்து அளித்தது போல, ஸ்ரீநாராயணப் பிள்ளையும், 'கற்பகப் பூங்காவனம்' என்று சொல்லும் வண்ணம் இருந்த தமது தோட்டத்திலிருந்து,பாரதியாருக்குத் தினமும் ஒட்டு மாம்பழமும், மாதுளைப் பழமும், ரோஜாப் புஷ்பமும், ராஜமல்லிகைப் புஷ்பமும்,எலுமிச்சம் பழமும் கொணர்ந்து கொடுத்து அளவளாவுவார். ரோஜா மலரைத் தாமே பாரதியாருக்குச் சூட்டி மகிழ்வார். பின்னும் அனேக பிராம்மணரல்லாத நண்பர்களும் கடையத்திலுண்டு. பாரதியார் அந்நண்பர்களோடு 'சூக்ஷ்மமுடையவர்' கோவிலில் சமபந்தி போஜனம் செய்வார். கேட்பானேன், அக்ரஹாரத்தில் பாரதியாருக்கு வசை மொழிதான்.

அருகிலுள்ள சிற்றூரான பொட்லபுதூர் என்ற ஊரிலிருந்து கூட்டங் கூட்டமாக முஸ்லிம் நண்பர்கள் வந்து பாரதியாரின் 'குர்ஆன்' உபதேச மொழிகளைக் கேட்டு ஆனந்த மடைந்து போவது வழக்கம்.

நாங்கள் குடியிருந்த வீட்டுக்குப் 'பட்டர் அகம்' என்று பெயர். வீட்டு வாசலில் நின்று பாரதியார்

"அமிர்த சாஸ்திரம்" என்னும் சாகாதிருக்கும் வழியைப் பற்றிப் பிரசங்கங்கள் புரிவார். அதைக்கேட்டு, எதிரிலுள்ள ராமசாமி கோவிலில் வீற்றிருக்கும் ஸ்ரீராமரும், சீதையுமே மகிழ்வார்களென்று கூறுவது மிகையாகாது.

'சாணார்' என்று அழைக்கப்படும் நாடார் வகுப்பினர் எங்கள் ஊரில் நிலங்கள் பயிரிட்டுச் சாகுபடி செய்பவர்களில் முதல் ஸ்தானம் பெற்றவர்கள். என் வீட்டைச் சேர்ந்தவர்கள் நான்கு பேர் சகோதரர்கள். அவர்களில் ஒருவன் 'நாராயணன்' என்பவன்; பாரதியாருக்கு ஆருயிர் நண்பன், — ராமபிரானுக்குக் குகனைப்போல.

ஒரு சமயம், பணமில்லாததற்காகத் தம்மைப் பந்துக்கள் கேவலமாக மதிக்கிறார்கள் என்று அவர் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. 'என்னடா உலகம்! என்ன பைத்தியம்!' என்று கோபங் கொண்டார், ஜேபியில் 100 ரூபாய் வைத்திருந்த சமயமாக இருந்தது. கையை ஜேபியில் போட்டு ரூபாய்களைத் தெருவில் வீசினார். பார்த்தவர் பரிகசிப்பதற்குக் கேட்பானேன்? குழந்தைகளோ அவைகளைப் பொறுக்கிச் சேகரித்துக் கொண்டனர்.

கடையத்தில் ஸ்ரீராமநவமி உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அச் சமயம் பிரபல சங்கீத வித்துவான்கள் விஜயம் செய்து, கச்சேரிகளும், கதா காலட்சேபங்களும் நடத்தினார்கள். காயக சிகாமணி முத்தையா பாகவதர், கல்லிடைக்குரிச்சி வேதாந்த பாகவதர், சிவகங்கை தசரதராம பாகவதர் முதலியோரும் கூடியிருந்தனர்.

பாரதியார் அச் சமயம் கடையத்தில் வசித்து வந்தபடியால், அந்த வித்துவான்களைச் சந்தித்து, அவர்களோடு வார்த்தையாடிக்கொண்டிருந்தார். பாரதியாரைச் சற்றேறக்குறையப் பைத்தியம் என்றே மதித்திருந்த அக்ரஹாரத்தினர், அவரைப் பார்க்கும்போது கூட, ஏளனமாகவே பார்ப்பார்கள். காயக சிகாமணி முதலியோருக்கு

மாத்திரம் இவரது கல்வித் திறமை நன்கு தெரியும். பாரதியார் பாடிக் காட்டின "ஜயபேரிகை கொட்டடா! கொட்டடா!" என்ற பாட்டை மிகவும் ரசித்தனர்.

ஒரு பிரபல வித்துவான் மிருதங்கம் வாசித்தார். கேட்பதற்கு ரசிகர்கள் இருந்தபடியால், பாரதியின் உற்சாகம் அதிகரித்து, சாரீரமும் மேல்ஸ்தாயியில் அபூர்வமாகச் சஞ்சாரம் செய்தது. அவரை எப்போதும் பரிகசிக்கும் பாமரரும் கூடத் தலையை ஆட்டி, "அடே, பாடும் விதமாகப் பாடினால், பாரதி பாட்டு எல்லாப் பாட்டுக்களையும் விட நன்றாயிருக்கிறதடா!" என்று மெச்சத் தொடங்கினார்கள்.

இரவில் தேவகோட்டை வித்துவான் ஒருவர் "வள்ளி திருமணம்" காலட்சேபம் செய்தார். வேடுவர்கள் பயிர்களை மிருகங்கள் அழித்துப் பாழ் செய்வதைத் தடுக்கும்படி, அவர்கள் சாமிக்குப் பூசை போட்டனர். அவர்களில் ஒருவனுக்குச் சாமி ஆவேசம் வந்து பாடும் பாட்டாகிய "பாக்கும் வச்சான், பழமும் வச்சான், வெத்திலை வச்சான், போயிலை வச்சான்,—ஒண்ணு வைக்க மறந்திட்டான்; சுண்ணும்பில்லே, சுண்ணும்பில்லே" என்ற பாட்டைக் கேட்டதும் பாரதி 'கொல்'லென்று சிரித்தார்.

அருகிலிருந்தவர்கள், "ஏன் சிரிக்கிறீர்?" என்றார்கள். "இந்தப் பாட்டு நமது நாட்டு மக்களுக்கும் ஒருவாறு பொருந்தும்" என்றார் பாரதி. "எப்படி?" என்று அவர்கள் திருப்பிக் கேட்டனர். "தமிழ் மக்களுக்குக் கடவுள் நிலமும் வச்சான், பலமும் வச்சான், நிகரில்லாத செல்வம் வச்சான்,—ஒண்ணு வைக்க மறந்திட்டான்; புத்தியில்லே, புத்தியில்லே" என்றார். நண்பர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

உற்சவ காலங்களில் தினம் காலையில் ஒரு பாகவதரின் தலைமையில் பஜனைக் கோஷ்டி, 'உஞ்சவிருத்தி' செய்வது வழக்கம். வழக்கமாகப் பாடும் பஜனைப் பாடல்கள்

அநேகமாகத் தெலுங்கும், சமஸ்கிருதமும் தான். பாரதி யாரும் அவர்களுடன் சுற்றுவதுண்டு. தினமும் பாட்டுச் சொல்லிக் கொடுக்கும் பாடகருக்கு, ஒரு மாதமாகப் பாடித் தொண்டையும் கட்டிவிட்டது. பாடிய பாட்டுக் களையே தினந்தோறும் பாடும் விரசமும் ஏற்பட்டுவிட்டது.

உடனே பாரதியார், "நான் சொல்லிக் கொடுக் கிறேன், புதுப்பாட்டு" என்று "கோவிந்த கிருஷ்ண பாஹி—யது வீரா! ராஜ கோபால கிருஷ்ண பாஹியது வீரா" என்ற பஜனைப் பாட்டு மெட்டில்,

பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா—நின்றன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா
கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா—நின்றன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா
தீக்குள் விரலையிட்டால் நந்தலாலா—உன்னைத்
தீண்டு மின்பந் தோன்றுதையே நந்தலாலா
காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்றன்
கரிய நிறந் தோன்றுதையே நந்தலாலா.

என்ற பாட்டை அப்படியே ஆசு கவியாகச் சொல்லவும், கோஷ்டியினர் சந்தோஷத்தோடு, (தமிழ்ப் பாட்டாகை யால்) அர்த்தந் தெரிந்து உரக்கப் பாடலாயினர். அவர்கள் இரண்டு பர்லாங் தூரத்தில் வரும்போதே, பாட்டின் கோஷம் கேட்கவாரம்பித்தது. "இதென்ன, இன்று புது தினுசாயிருக்கிறதே, பஜனை!" என்று பார்த்ததும், பின்பு தான் காரணம் தெரியவந்தது. மந்திர சக்தி கொண்ட பாரதி வாக்குக்கு, மனிதர்கள் மனத்தில் ஊடுருவிப்பாயும் சக்தியும் இருப்பதை அன்று அனைவரும் கண்டார்கள்.

பாரதியாரின் நடை, உடை, பாவனைகள் சில சமயம் மற்றவர்களுக்குப் பிடிக்காமலிருப்பதுண்டு. அதைப் பாரதியார் கொஞ்சமும் பொருட்படுத்தாமல், தம்

போக்கிலேயேதான் போவார். ஒரு நாள், தெருவில் நடக்கும்பொழுது, பாரதியார் கைவிரல்களை மடக்கிக் கொண்டு, நெஞ்சை நிமிர்த்தி, விரைவாக நடந்தாராம். அதைக் கண்டு, அவரது தோழர் ஒருவர், "என்னடா! கையை இப்படி வைத்திருக்கிறாய்?" என்றாராம். ஒரு சின்ன விஷயத்துக்குக்கூடக் கட்டுப்பாடும், அடக்கு முறையுமா, என்று பாரதியார் கோபங் கொண்டார். ஆனால், அன்று பதில் ஒன்றும் சொல்லாமல் இருந்து விட்டார்.

மறுநாள், அதே நண்பரின் எதிரில் கைவிரலை விறைப்பாக நீட்டிக்கொண்டு நடந்தார். அவர் "என்னடா, கையை நீட்டிக்கொண்டு நடக்கிறாய்?" என்று கேட்டது தான் தாமதம். உடனே, பாரதியார், "தம்பி! உன் ஆசிர்வாதத்தினால் எனக்கு எவ்வித வியாதியும், ரோகமும் கிடையாது. ஒரு மனிதன் தன் கையை நீட்டவோ, மடக்கவோ கூடச் சுதந்திரமில்லை யென்று நினைக்கும் உன்னைப் போன்ற மடையருடன் குடியிருப்பதைக் காட்டிலும், மனிதனுக்கு வேறு நரகம் வேண்டாம்" என்று சுடச் சுடப் பதில் உரைத்தாராம். நண்பருக்கு வெட்கித் தலை குனிவதைவிட வேறு என்ன வழி இருந்திருக்கும்?

## ராஜாத் தோட்டம்

எட்டயபுரத்தில் அவ்வூர் மகாராஜா ஒரு மாந் தோட்டம் வைத்திருக்கிறார். அங்கு உயர்ந்த ஜாதி ஒட்டு மாமரங்களும், உயர்ந்த பழ மரங்களும் எல்லாத் தேசங்களிலிருந்தும் வரவழைத்துப் பயிரிட்டு வருகிறார்கள். பூச் செடிகளும் ஏராளமாக உண்டு.

பாரதியார் புதுவையிலிருந்து திரும்பி, பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்ததும், சீக்கிரத்திலேயே தாம் பிறந்த ஊராகிய எட்டயபுரம் சென்றார். பந்துக்களுடனும்,

ஊராருடனும், பாலிய நண்பர்களுடனும், அளவளாவி மகிழ அவர் அளவிற்ற ஆசைகொண்டிருந்தார். பத்து வருஷங்களாக அடக்கி வைத்துக்கொண்டிருந்த ஆவல், ஊரையும், நண்பரையும் கண்டதும், கட்டு மீறியது. தமக்குச் சம வயதுடையவரைக் கண்டால், பாரதியார் தழுவி உச்சி முகர்ந்து இன்புறுவார். இது ஊராருக்கு அதிசயமாகத் தோன்றியது.

மேலும், பாரதி எட்டயபுரம் விட்டுச் சென்ற காலத்தில் நவநாகரிக வாலிபனாய், சுதந்திர புருஷனாய் இருந்தவர், இப்போது எலும்பும் தோலுமாக மாறி, தாடியும் மீசையும், நெற்றியில் நாமமுமாகக் காட்சியளித்தது அவர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

நமது ஜனங்களுக்குக் காதல், வேதாந்தம் எல்லாம் புஸ்தகத்தில் படிப்பதோடு சரி. காளிதாசன் சாகுந்தலத்தை அனுபவிப்பார்கள்; புத்தபிரானது அன்பு உபதேசத்தையும் ரசிப்பார்கள்; அர்ச்சுனனது வீரத்தையும், கர்ணன் கொடையையும், தருமரின் சத்தியத்தையும் புராணத்தில் வாசித்துப் புகழ்வதோடு சரி. எவனாவது ஒரு மனிதன் தற்சமயம் அதே தருமத்தை நடத்திக் காண்பித்தால், அவனைப் பைத்தியமென்றுதான் மதிப்பார்கள்.

ராஜாத் தோட்டத்தில் உலாவுவதற்குப் பாரதியார் என்னையும் அழைத்தார். ஊராரின் கேலிக்குப் பயந்து, நான் "ஊருக்குத் தகுந்தபடியல்லவா இருக்கவேண்டும்? நமது ஊராருக்கு, ஸ்திரீகள் வம்பளப்பதற்கு வெளியில் செல்லலாமே தவிர, கொண்ட கணவனுடன் வெளியில் சாயங்காலம் உலாவச் செல்லக்கூடாதே?' என்றேன்.

"நம்முடைய மனிதர் தூஷிப்பதும் நமக்கு ஆனந்தமல்லவா? புறப்படு!" என்றார் பாரதியார்.

பாரதியார் எந்தக் காரியத்தைச் செய்யச் சொல்லி ஆக்ஞையிடுவாரோ அதன்படி தவறாது செய்ய வேண்டு

மென்பது எனது நோக்கம்—உறுதி. எங்கள் உறவினரான ஸ்திரீகள் கூட, செல்லம்மா! உன்னால் தான் உன் புருஷன் கெட்டுப் போகிறான். அவன் 'எள்' என்பதற்கு முன், நீ 'எண்ணெய்' என்கிறாயே! பெண்டாட்டி மருந்திட்டுப் புருஷனை வசியப்படுத்துவதாக எல்லோரும் சொல்வது வழக்கம். உன் விஷயம் நேர்மாறாயிருக்கிறதே! இப்படி ஒரு புருஷனோடு வாழ்வதைக் காட்டிலும், நாங்களாயிருந்தால் ஒரு செம்பைத் தேய்த்துக்கொண்டு, நாலு வீடு சென்று பிச்சையெடுத்து வயிறு வளர்ப்போம். அவன் ஆட்டின கூத்துக்கெல்லாம் நீ ஆளாகிறாயே;', என்று பழித்துக் கூறுவது வழக்கம்.

அவர் பேச்சுக்கு மறு பேச்சின்றி நானும் அவருடன் தோட்டம் பார்க்கப் புறப்பட்டேன். வழக்கம் போல் இருவரும் கைகோர்த்துக்கொண்டு தெருக்களின் வழியே நடந்தோம். சிலர் "ஓகோ! பைத்தியங்கள் எங்கேயோ உலாவப் போறதுகள், டோய்!" என்று கைதட்டிச் சிரித்தார்கள். பாரதியாரோ, சிறிதும் அஞ்சாமல்,

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்
பூணும் நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவ சக்தியாம்
நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்டிர் ஒழுக்கமாம்

என்றும்,

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்

அமிழ்ந்து பேரிருளா மறியாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்

என்றும் பாடிக்கொண்டே மேலே நடந்தார்.

## விதி அவ்வளவுதான்!

கிராமங்களில், ஏழைகளுடைய வீடு காற்றோட்டமில்லாமலும் வெளிச்சமின்றியுந்தான் இருக்கும்; சுகாதார வசதிகளே கிடையா. கிராமத்தில் யாராவது ஒருவருக்குக் காலரா, வைசூரி முதலிய நோய் கண்டால், தொத்து நோய் எல்லா வீடுகளுக்கும் பரவி, மனிதர்களைச் சூறையாடிவிட்டு, அதற்கே சலித்துப்போய் நின்றால்தான் நின்றது! அதைத் தடுப்பதற்குச் சுகாதார அதிகாரிகளோ, கிராமத்தவர்களோ முயற்சி யெடுக்கமாட்டார்கள். சுமார் இருபது பேராகிலும் இறந்த பிறகு, அவ்வூர் மாரியம்மனுக்குக் 'கொடை' நடத்துவார்கள்; அவ்வளவுதான். சமீபத்தில் ஆஸ்பத்திரியும் கிடையாது. அருகிலுள்ள நகரங்களுக்குச் சென்று வைத்திய உதவி பெறுவதற்கு அநேகரிடம் பணம் இராது. தங்களுக்குந் தெரியாது; தெரிந்தவர்கள் சொன்னாலும் கேட்கமாட்டார்கள்.

கடையத்தில், 1918-ம் வருஷம், கார்த்திகை பிறந்தும் அடைமழை நிற்கவில்லை. அமாவாசைக்கு முந்தின தினம் இரவு பன்னிரண்டு மணியிருக்கும். ஒரு வீட்டில் 25 வயதுடைய வாலிபன் மூன்று நாளாக வாந்திபேதியினால் அவஸ்தைப்பட்டு, எழுந்திருக்கச் சக்தியற்று, இப்பொழுதோ, இன்னும் சிறிது நேரத்திலோ, உயிர் பிரியும் நிலையில், படுக்கையின்றி, ஒரு கிழிந்த வேட்டியை விரித்து, ஒரு மணைக்கட்டையைத் தலைக்கு வைத்துப் புரண்டுகொண்டிருக்கிறான். அவனது இளம் மனைவி கவலையோடு

புருஷனுக்கு வேண்டிய சிச்ருஷைகளைச் செய்து வருகிருள். பத்து மாதக் குழந்தையொன்று தொட்டிலில் கிடக்கிறது. மூலையில், குத்து விளக்கு முணுக்கு முணுக்கென்று எரிகிறது.

அந்த வாலிபன், அடிக்கொரு விசை வாந்தி யெடுப்பதும், மனைவியையும் குழந்தையையும் அன்போடு பார்ப்பதுமாக இருந்தான். வீட்டில் பெரியவர்கள் கவலையோடு ஒரு மூலையில் உட்கார்ந்து ரகசியமாகப் பேசிக்கொண்டும், கொட்டாவி விட்டுக்கொண்டும் இருந்தனர். பாரதியாருக்கு அந்தச் சமாச்சாரம் அப்பொழுதுதான் எட்டிற்று. அவர், தெருக்கோடியில், ஒரு வீட்டில், வசித்து வந்தார். உடனே வந்து பார்த்தார். நோயாளியின் நிலைமை பரிதவிக்கத்தக்க வண்ணம் இருந்தபடியால், அவருக்கு வருத்தமும் சினமும் கரைமீறி எழுந்தன.

"என்ன மருந்து கொடுத்தீர்கள்?" என்று வீட்டாரிடம் கேட்டார்.

"கஷாயம் போட்டுக் கொடுத்தோம், வைத்தியன் சொன்னபடி" என்ருர்கள்.

"மேற்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்ருர்.

"செய்வதென்ன? அவன் விதி அவ்வளவுதான்."

இந்தப் பதிலைக் கேட்டதும், பாரதியாருக்குக் கோபம் மிஞ்சிவிட்டது. வாசலில் வந்து நின்று, "கிராமத்தோர்களே! வாருங்கள்!" என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டார். தெருத் திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்த சிலர் வந்தனர். யார் வந்துதான் என்ன பயன்? அவன் விதி அவ்வளவுதான்!

# கல்யாணமும் காட்சியும்

ஒரு சமயம், திருவனந்தபுரம் சென்றிருந்தோம். அங்கு எங்களுக்கு நெருங்கிய நண்பரும், ஒருவகையில் பந்துவு மான ஒருவர் வீட்டில் கல்யாணம். சம்பந்தி வீட்டார் பெரிய சர்க்கார் உத்தியோகத்திலிருப்பவர்கள். "பாரதி யார் வந்திருக்கிறார்" என்றதைக் கேட்டதும், ஒரு பக்கா சுதேசியை இந்தக் கல்யாணச் சமயத்தில் வரவிடக் கூடாது என்று தீர்மானித்து, பாரதியாரை நேரில் கண்டும் கூட, "விவாகத்துக்கு வாருங்கள்", என்று அழைக்க வில்லை.

ஆயினும், அவ்வீட்டு அம்மாளுக்கு மாத்திரம் பாரதி யாரிடம் உள்ளன்பு விசேஷமாக உண்டு. நாங்கள் அவ் வீட்டுக்குச் செல்லக் கூடாதென்று பலமுறை வேண்டிக் கொண்டும் கேளாமல், அழையாத வீட்டிற்குள் பாரதி யார் நுழைந்தார். வீட்டு எஜமான் அவரை வாவென்று அழைக்கவில்லை. பாரதியார் கொஞ்சங்கூட முகவாட்ட மும், சங்கோசமும் இன்றி, மடமட வென்று உள்ளே சென்றார். வீட்டு அம்மாளிடம் சென்று, "அம்மா! குழந்தைக்கு விவாகம் ஆயிற்றா?" என்று பரிவோடு கேட் டார். அந்த அம்மணியின் கண்களில் நீர் துளித்தது. மனது உருகிற்று. பாரதியாரின் சுபாவத்தைக் கண்டு, அந்த அம்மையார் தம் கணவரது நடத்தையை உள்ளூற வெறுத்தார்.

உடனே அவர், "பாரதியாரே! என்னை மன்னிக்க வேண்டும். நீர் மாசு மறுவற்றவர். நாங்கள் உத்தியோக ஆசையினாலும், பணத் திமிரினாலும் சில சமயங்களில் மெய்ம்மறந்து தங்களைப் போன்ற உத்தமர்களின் சகவா சத்தைக் கைவிடுகிறோம். நேற்றுத் தங்களை நேரில் கண்டும்

அழையாதிருந்தோம். அதிலிருந்து என் மனது 'தவறு செய்கிறாய்' என்று வாள் கொண்டறுக்கிறது. எத்தனையோ பெரிய பெரிய மனிதர்கள் வந்து கல்யாணம் விசாரித்துச் சென்றார்கள். ஆயினும், இப்போது நீங்கள் விசாரிக்கும்போது எனக்கு ஏற்பட்ட சந்தோஷமும் ஆறுதலும் இதற்குமுன் ஏற்படவில்லை'' என்று பரிவுடன் கூறினார்.

"அம்மா! மனதுக்கு மனமே சாட்சி! நான் வராவிட்டால், உன் மனம் துயரடையும் என்று தெரிந்தே வீட்டில் அனைவரும் தடுத்தும் நான் இங்கு வந்தேன்'' என்று கூறினார் பாரதியார். திருமணத் தம்பதிகளை வரவழைத்து, அவர்களைத் தழுவி ஆசீர்வதித்தார்; அந்த அம்மாள் அன்புடன் தந்த சிற்றுண்டியைக் களிப்புடன் புசித்தார். பிறகு, விடை பெற்று, வீடு வந்து சேர்ந்தார்.

சாயங்காலம் மூன்று மணிக்கு வந்திருந்த விருந்தினரும், கல்யாண வீட்டாரும் காட்சிச் சாலைக்குச் சென்றனர். அதாவது, மிருகக் காட்சிச் சாலைக்கு. பாரதியாரும் புறப்பட்டார். நாங்களும் சென்றோம். விடுதியிலிருந்து 'காட்சி பங்களா' இரண்டு மைலுக்கு மேலிருக்கும். மேற்படி கல்யாண வீட்டார் "வண்டியிலேறிக் கொள்ளுங்கள்'' என்று மரியாதைக்குக்கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. நாங்கள், அவமானத்தினாலும், துயரத்தினாலும், ஒன்றும் பேசாமல் நடந்து போனோம்.

அங்கே சென்றதும், மிருகங்களைப் பார்ப்பதில் சற்று நேரம் கழிந்தது. மறுபடியும் எங்களுக்குக் கஷ்டம் ஆரம்பித்தது. ஏனெனில், பாரதியார் எல்லா மிருகங்களையும் கையினால் தொட்டுப் பார்க்க ஆரம்பித்தார். குரங்குகள், கரடிகள், எல்லாவற்றையும் தொட்டுப் பார்த்துக் கடலை, பழம் கையிலே கொடுத்தார். அந்த மிருகங்கள் நகங்களினால் கிழித்துப் பிராண்டி விடாதிருக்கவேண்டுமே என்று

நாங்கள் கவலைப்பட்டோம். அந்த இடத்தில் மிருகங்களுக்குத் தீனி போடும் வேலைக்காரக் கிழவனொருவன் மிருகங்களைக் கத்தச் சொல்லியும், ஆடச் சொல்லியும் எங்களுக்கு வேடிக்கை காண்பித்து வந்தான். அவன் இவரது போக்கைத் தெரிந்துகொண்டு, "சாமி! புலியையும் சிங்கத்தையும் மட்டும் தொடவேண்டாம். ஏனென்றால், அவைகளுக்கு ஒரு சமயம் இருக்கும் புத்தி மற்றொரு சமயம் இராது. அவை கையினால் லேசாக ஒரு தட்டுத் தட்டினால் கூட உங்களால் தாங்க முடியாது" என்று எச்சரிக்கை செய்தான்.

அதற்கு, "தம்பி! நீ பயப்படாதே! என்னை ஒன்றும் செய்யாது. அவற்றைச் சமீபத்தில் கூப்பிடு! நான் தழுவிக் கொண்டால் ஒரு தீங்கும் செய்யாது" எனவும், எங்களுக்குப் பயத்தினால் உடம்பு கிடுகிடென்று நடுங்க ஆரம்பித்தது. நான், "சிங்கத்திற்கு நல்ல புத்தி கொடு! பகவானே!" என்று மனத்திற்குள் சுவாமி வேங்கடாசலபதியைப் பிரார்த்தித்தேன். மெதுவாக அரை மனதோடு கிழவன் சிங்கத்தை அருகில் வரவழைத்தான். உள்ளூற அவனுக்குப் பயம் இருந்தபடியால், அதன் வாலை மட்டும் பிடித்துக்கொண்டு, "தொடுங்கள் சாமி" என்றான்.

"மிருக ராஜா! கவிராஜ் பாரதி வந்திருக்கிறேன். உனது லாகவ சக்தியையும் வீரத்தையும் எனக்குக் கொடுக்கமாட்டாயா? இவர்கள் எல்லோரும் நீ பொல்லாதவனென்று பயப்படுகிறார்கள். உங்கள் இனந்தான், மனிதரைப் போல, உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்யும் சுபாவம் இல்லாதது என்பதையும், அன்பு கொண்டோரை வருத்தமாட்டீர்களென்பதையும் இங்கிருப்போர் தெரிந்து கொள்ளும்படி, உன் கர்ஜனையின் மூலம் தெரியப்படுத்து, ராஜா" என்றார் பாரதி.

என்ன ஆச்சரியம்! உடனே, சிங்கம் கம்பீரமாகப் பத்து நிமிஷம் கர்ஜித்தது. அவருக்குத் திருப்தியாகும் வரை, அரை மணி நேரம் மிருகேந்திரனைப் பிடரி, தலை, காது எல்லாம் தடவி விட்டு, எங்களது தொந்தரவினால் வாயில் மட்டும் கைவிடாமல், அதனிடம் விடை பெற்றுக் கொண்டார்.

நாங்கள் வாசலில் வந்து ஒருவண்டி அமர்த்திக் கொண்டு வீடு போகவேண்டுமென்று நினைத்திருக்கையில், அவ்வூர்ப் பிரமுகரும்; பிரபல வக்கீலுமான கே. ஜீ. சேஷய்யர் தமது இரட்டைக் குதிரை சாரட்டோடு அங்கு வந்து "பாரதியாரே! நல்ல காரியம் செய்தீர், நடந்து வந்தீராமே! என்னிடம் ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா? அப்பொழுதே வண்டியனுப்பியிருப்பேனே, இனிமேல் இவ்வூரில் உள்ள வரை என் வண்டியையே உபயோகித்துக்கொள்ளுங்கள்" என்று உபசரித்துச் சென்றார். அப்போது, எங்களுடன் இருந்த கல்யாண வீட்டார் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

வீடு சென்று சாப்பாடு முடிந்தது. ஊர்வலம் அந்தத் தெரு வழியே சென்றது. அக் காலத்தில் பிரபல நாதஸ்வர வித்வான் ஸ்ரீ சித்திரை, பிரம்மானந்தமாக பைரவி ராக ஆலாபனை செய்தார். பாரதியாரும் சென்று ஊர்வலத்தில் கலந்து கொண்டார். நல்ல ரசிகர் இருந்தால்தான் பாடகருக்கு உற்சாகம் ஏற்படுமல்லவா? மேலும், மேலும், நாயனத்தில் ஆச்சரியமான வேலைகள் நடந்தன. பாரதியார் தாளம் போட்டார். மேளக்காரனைச் சுற்றிக் கூட்டம் அதிகரித்துவிட்டது. எள் போட்டால் கீழே விழாது. கூட்டத்திலிருந்து ஒருவர் ஓடிவந்து, சித்திரை கழுத்திலும், பாரதியார் கழுத்திலும் மாலைகள் போட்டார். அவர் யார் என்று நினைக்கிறீர்கள்? மேற்படி கல்யாணத்தின், சம்பந்தி அய்யரவர்கள்தான்! "வரவேண்டும்!

வரவேண்டும்!" என்று பாரதியாரை அழைத்துச்சென்று, வேண்டியமட்டும் உபசரித்தார். வீட்டு எஜமானன் இப்படி நடக்குமென்று எதிர்பார்க்கவில்லை யாகையால், தமது செய்கைக்கு நாணித் தலை குனிந்தார். பாரதியார் அதைக் கண்டு, அன்போடு "பாண்டியா! கண்ணப்பா! உனக்கு நல்ல சம்பந்தம் கிடைத்திருக்கிறது. க்ஷேமமாக வாழவேண்டும்" என்று ஆசீர்வதித்துவிட்டு வீடு வந்து சேர்ந்தார்.

## சென்னை வாசம்

சிறு வயதில், சென்னையில் உல்லாசமாகக் காலங்கழித்த ஞாபகம் வந்தவுடன், அங்கு சென்று வசிக்க வேண்டு மென்ற ஆவல் பாரதியாருக்கு உண்டாயிற்று. தெய்வாதீனமாக, அவர் நோக்கத்திற்கிணங்க, சென்னையில் பிரபல தினசரிப் பத்திரிகையான "சுதேசமித்திர"னில் உதவி ஆசிரியர் வேலைகிடைத்தது. ஆனால், பாரதியார் தமது அரிய பெரிய நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கான சாதனங்கள் கிடைக்காமல் மிகவும் கஷ்டப் பட்டார். பழைய நண்பர்களான வ. வெ. சு. அய்யர், ஸ்ரீநிவாசாச்சாரியார், ஆர்யா, எஸ். துரைசாமி அய்யர் முதலியவர்களுடன் மறுபடியும் நெருங்கிப் பழகி, அவர்களுடன் ஏதோ ஒருவாறு மனத்திருப்தியுடன் காலங் கழித்தார்.

தம்புச் செட்டித் தெருவில், தபால் இலாகாவைச் சேர்ந்த வே. நாராயணய்யருடன் சில மாதங்கள் குடியிருந்தார். நாராயணய்யரும் இவரிடம் அன்பு காட்டி வந்தார். என்றாலும், அதிகக் காலம் அவருடன் குடியிருக்க முடியவில்லை. காரணங்கள் பல; அசௌகரியங்கள் பல: கடைசியாக, திருவல்லிக்கேணி, துளசிங்கப் பெருமாள்

கோவில் தெருவிலுள்ள பெரிய மாடி வீட்டில் குடி வந்து சேர்ந்தோம். அங்கு குடியிருந்த அனேகரும் பாரதியாரிடம் தேவதா விசுவாசம் கொண்டவர்கள். அவர்களில் குவளைக் கண்ணனும் ஒருவர். அவர், கோவில் திருப்பணியில் ஈடுபட்டவர். பெருமாளுக்கு நிவேதனம் ஆனவுடன், சர்க்கரைப் பொங்கல் முதலிய பிரசாதங்களுடன் பாரதியார் முன் வருவார். பாரதியார், அவைகளைத் தாம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளாமல், அன்பர்களான காக்கை, குருவிகளுக்கும் சமர்ப்பிப்பார். அவைகள் உண்டு களிப்பதில் பாரதியாருக்குப் பேரானந்தம்.

பழைய நண்பர் ஒருவர், ஒரு நாள், பாரதியாரிடம் வந்து, "என்ன சுவாமிகளே! இப்படிப் பாட்டுப் பாடிக் கொண்டு காலம் கழிக்கிறீர்களே! நான் வாழ்நாள் முழுவதும் பாரதநாட்டின் விடுதலைக்காகச் சிறை சென்று படாத பாடெல்லாம் பட்டாயிற்று. இன்று எனக்குச் சாப்பாட்டிற்கு வழியில்லை. வயிற்றுக் கொடுமை சகிக்காமல் ஏதேனும் கொடிய செயலில் இறங்க மனம் தூண்டுகிறது. தர்மசிந்தனையினால் பசி ஆருது. இது திண்ணம். பணம் ஏதாகிலும் தரப்போகிறீரா? இல்லையேல், எங்காவது திருட்டோ, கொள்ளையோ செய்யத் துணியட்டுமா?" என்று பொறுமையை இழந்த குரலில் கேட்டார்.

அதைக் கேட்டதும், பாரதியாருக்கு ரத்தம் கொதித்தது. அவரிடம் காசில்லை. என்ன செய்வது? பக்கத்து வீட்டாரிடம் சிறிது தொகை வாங்கிக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, "பாரத சமுதாயம்" என்ற பாட்டைப் பாடிக் காண்பித்து, ஒருவாறு சமாதானப்படுத்தினர். நண்பரும் வயிறும், மனமும் குளிர்ந்து சென்றார்.

"தனியொருவனுக் குணவில்லை யெனில் ஜகத்தினை யழித்திடுவோம்" என்று சொல்வதற்கு எவ்வளவு

உணர்ச்சியும், துணிச்சலும் வேண்டும்? கடற்கரைப் பிரசங்கம் ஒன்றில் இப் பாடலை அன்புருகப் பாடி ஜனங்களுக்கு அறிவுறுத்தினர்.

## ஒரு விபத்து

தினமும் எம்பெருமான் பார்த்தசாரதி சுவாமியின் தரிசனம் செய்வது பாரதியாரின் வழக்கம். கோவிலுக்குச் சென்று தெய்வ வழிபாடு செய்வதில் அவருக்கு எப்போதும் ஆர்வம் அதிகம்.

ஒரு நாள், திடீரென்று, கோவில் யானைக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. நான்கு கால்களிலும் சங்கிலியிட்டுப் பிணைத்திருந்தார்கள். யானை மதம் யாராலும் கட்டுப்படுத்த முடியாதது. அந்த யானைக்குத் தேங்காயும் பழமும் நாள்தோறும் பாரதியார் அளிப்பது வழக்கம். அன்றும் அங்கு சென்றதும், ஜனங்கள் நடுங்கினர்கள். யானையைச் சுற்றி இரும்புக் கிராதி போட்டிருந்தது. கையில் பழத்துடன் யானையினருகில் போய், பிரகலாதனைப்போல், எதிரில் நின்று கண்ணழகை ரசிக்கலானர். மதங்கொண்ட யானைக்கு இவர் யாரென்று தெரியவில்லையோ, என்னமோ —கொம்பினல் ஒரு சிலுப்பல்தான். பாரதியாருக்கு நல்ல காயம். அப்படியே, அதன் நான்கு கால்களுக்கிடையில், வேரற்ற மரம்போல் சாய்ந்து கிடந்தார்.

ஜனக் கூட்டத்திற்கு என்னமோ குறைவில்லை. வேடிக்கை பார்த்தார்கள் என்று குறை சொல்வதற்குமில்லை. யார் யானையருகில் சென்று இவரைத் தூக்குவது? எல்லோரும் என்ன செய்வதென்று அறியாமல் தவித்தார்கள்.

தினமும் பழங் கொடுத்து வரும் அன்பனுக்கு இவ்விதம் அபராதம் செய்துவிட்டோமே என்று எண்ணிப்

பச்சாதாபப் பட்டதுபோல், அசையாமல் ஸ்தம்பித்து நின்றுவிட்டது அம் மத யானை.

நண்பர் குவளைக் கண்ணனுக்கு இவ்விஷயம் எப்படியோ எட்டிவிட்டது. ஓடோடியும் வந்தார். யோசிப்பதற்கு அவர் மனம் இடங் கொடுக்கவில்லை. வேலியை ஒரே தாண்டல். ரத்தப் பிரவாகத்தில் கிடந்த பாரதியாரை, குழந்தையை வாரி எடுப்பது போலத் தூக்கித் தோளில் சார்த்திக் கொண்டார். கூடியிருந்த ஜனங்கள் சிறிது உதவி செய்ய, வேலிக்கு வெளியில் கொண்டு வந்து சேர்த்தார். இதை எழுதுவதற்கு இவ்வளவு நேரமாயிற்றே தவிர, கண் மூடிக் கண் திறப்பதற்குள் இவ்வளவும் நடந்தனவாம்.

ஸ்ரீநிவாசாச்சாரியாரும் இன்னும் சிலரும் சேர்ந்து, ஒரு மோட்டாரில் வைத்து, ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். காயமும் குணமாயிற்று.

பாரதியார் யானையினிடத்தில் சிறிதேனும் கோபங் கொள்ளவில்லை. "இன்னாரென்று தெரியாமல் தள்ளி விட்டது. தெரிந்திருந்தால் தள்ளியிருக்காது. அப்படித் துன்புறுத்தும் எண்ணமிருந்தால், நான் கீழே விழுந்ததும் துதிக்கையால் தூக்கி எறிந்திருக்காதா? அல்லது கால்களினால் துவைத்திராதா? அப்படியே நின்றதன் அர்த்தம் என்ன? என்னிடம் அதற்குள்ள அன்பே காரணம்" என்று கருதி உள்ளம் குளிர்ந்தார்.

## ஓம் சாந்தி

அந்தச் சமயம் 'கிலாபத்' பிரசாரத்திற்காக அலி சகோதரர்கள் சென்னைக்கு வந்திருந்தார்கள். மகாத்மா காந்திஜியும் வந்திருந்தார். பாரதியாருக்குக் காந்திஜியைப்

பார்த்துப் பேசச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. 'சத்தியாக் கிரக இயக்கம்', 'ஒத்துழையாமை' என்பன போன்ற பல விஷயங்கள் பற்றிச் சர்ச்சை செய்தார். கடைசியாக, "வாழ்க நீ எம்மான்", என்ற ,பாட்டை முழுதும் பாடி விட்டு, வீடுவந்து சேர்ந்தார். அலி சகோதரர்களின் தீரமும், வீரமும், அவர்களது தேச சேவையும் பாரதி யாருக்கு மகிழ்ச்சி யளித்தன.

1920-ம் ஆண்டு முழுவதும் பாரதியாருக்குச் சற்றுச் சந்தோஷமாகவே கழிந்தது. ஆனால், அதற்கு முன், எவ்வளவோ காலம், பொறுத்தற்கரிய கஷ்டங்களில் அடி பட்டதில், அவரது உடம்பு நாளுக்குநாள் இளைத்துக் கொண்டே வந்தது. மனம் உறுதி குன்றவில்லையே தவிர, சரீரத்தில் சிரமம் ஏற்படத் தொடங்கி விட்டது. பகவானை பஜிப்பதிலேயே ஈடுபடலானார். எப்போதும் "நமோ நாராயணாய" என்று உச்சரித்துக் கொண்டே காலங் கழித்தார்.

பிரகலாதனுக்கும் இரணியனுக்கும் சம்வாத மாக ஐந்து ஆறு அடிகள் பாடி, அவற்றை அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். அந்த அடிகளை அவர் பாடக் கேட்டவர்கள், மயிர் சிலிர்த்து, ஆனந்தப் பரவச மடைந்தார்கள்.

"இறைவனது திருவருள் பெற்றவர்களை இளமை யிலேயே அவர் அழைத்துக் கொள்கிறார்" என்னும் மொழி, இவர் விஷயத்தில் பொய்த்துப் போகவில்லை. 1921-ஆம் செப்டம்பர்-மீ 11-உ பாரதியார் இந்தத் துன்ப உலகை நீத்து, இன்பம் நிறைந்த விண்ணுலக மெய்தினார். பாரத மாதா, தனது உண்மைப் புதல்வனை இழந்து பரிதவித்தாள்.

இவ்வுலகில் வாழ்ந்தபோது பாரதியார் எத்தனையோ துன்பங்களை அனுபவித்தார்: எவ்வளவோ கஷ்டங்

களுக்கு உள்ளானர். ஆனல், தாய் நாட்டினிடம் அவர் கொண்டிருந்த அளவிலாத அன்பு மட்டும் கணமும் சலிக்கவில்லை. தமிழையும் தமிழர்களையும் அவர் ஒரு கணமும் மறக்கவில்லை. அல்லும் பகலும் அனவரதமும் அவருடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்த மனோரதம் இதுதான்:

IMSUW
N41-2

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு!

ARCHIVES LIBRARY
No. 108108
MADRAS

# புதிய புத்தகங்கள்

**புதிய சீனா: வெ. சாமிநாத சர்மா 6 8**

அன்பையும் அறத்தையுமே லட்சியங்களாகக் கொண்டு, புத்தர் பிரானின் போதனைகளை நடைமுறையில் கடைப்பிடித்து ஒழுகியவர்கள் சீனர்கள். அத்தகையவர்கள் இன்று வீழ்ச்சியுற்றிருப்பதற்குக் காரணம் என்ன? அதன் எதிர்காலம் எவ்வாறிருக்கும்? சீனாவின் ஆரம்பகால சரித்திரத்திலிருந்து, புதிய சீனாவின் தோற்றம்வரை எல்லா விபரங்களும் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன.

**பிளேட்டோவின் அரசியல்: வெ. சாமிநாத சர்மா 6 0**

இதில் அரசியலின் ஒவ்வொரு பிரிவும் வெகு தெளிவாக சம்பாஷணை மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. தேசத்துக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு; எந்த மாதிரியான மக்களுக்கு எத்தகைய அரசியல் இருக்கவேண்டும்? நீதி வழங்குதல் என்றால் என்ன? என்பன போன்ற விஷயங்களை பிளேட்டோ தெளிவாக விளக்கியிருக்கிறார்.

**மானிட ஜாதியின் சுதந்திரம்: இங்கர்ஸால் 1 0**

அறியாமையை ஒழித்து மனித சமூகத்தை அடிமைத் தனத்திலிருந்து மீட்க அரும்பாடு பட்டவர் இங்கர்ஸால். அவருடைய விறுவிறுப்பான பிரசங்கங்களில் ஒன்றே இப்புத்தகம்.

**சூரிய நமஸ்காரம்: டி. வி. திருவேதி 1 0**


சூரிய நமஸ்கார முறைகளையும், மந்திரங்களையும் சித்திர விளக்கங்களோடு இந்நூல் விவரிக்கிறது.

**மாணவருக்கு: காந்திஜி 6 0**

மாணவருக்கென காந்தியடிகள் அவ்வப்பொழுது எழுதியதும், பேசியதும். அ. லெ. நடராஜன் வெ. ராமசாமி தமிழாக்கியது. திருத்திய இரண்டாம் பதிப்பு. கையால் செய்த காகிதத்தில் அச்சிடப் பெறுகிறது.

**சக்தி காரியாலயம்**

சென்னை : மதுரை : கோயமுத்தூர்.


காய்கறித் தோட்டம்
தோட்டம் போடுவது எப்படி
விதை விதைப்பது எப்படி
எரு இடுவது எப்படி
காய்கறிகளிலுள்ள உணவுச்
சத்து யாது
என்ற விஷயங்களை
அறிய வேண்டுமா?
கத்தரி வகை, அவரை வகை,
கீரை வகை, பூசணி வகை, கிழங்கு
வகை, சீமைக் காய்கறி வகை
பயிரிடக் கற்றுக்
கொள்ள வேண்டுமா?
இதற்கேற்ற புத்தகம்
காய்கறித் தோட்டம்
மூ. அருணாசலம் எழுதியது
விலை ரூ. ஐந்து
தபால் செலவு தனி
சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை : சென்னை
வடக்கு வெளி வீதி : மதுரை
வெரைட்டி ஹால் ரோடு : கோயமுத்தூர்